# அத்தியாயம் இரண்டு

## அமைச்சினால் எய்தப்பெற்ற முன்னேற்றங்கள்


## அமைச்சினால் எய்தப்பெற்ற முன்னேற்றங்கள்

இந்த அமைச்சானது, உழைக்கும் வர்க்கத்தின் உரிமைகளைப் பாதுகாத்தல், அவர்களின் தொழில் பாதுகாப்பை உறுதி செய்தல், நாட்டில் தொழிற்றுறை அமைதியை நிலைநாட்டுதல் மற்றும் ஆற்றலுள்ள வேலையாளர்களை வெளிநாட்டு வேலைவாய்ப்பு சந்தைக்கு அனுப்புதல் ஆகிய துறைகளின் கீழ் தொழிற்பாடுகளை நிறைவேற்றுவதற்கான திட்டங்களை வகுத்துள்ளது.

நாட்டின் தொழில் அணி சுமார் 8.5 மில்லியனாகக் காணப்படுகையில் அதில் 8.1 மில்லியன் பேர் தொழில் புரிகின்றனர். இந்த வேலையாளர்களில், அரச துறையில் உள்ளவர்கள், சொந்த தொழில் மற்றும் குடும்பத் தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்கள் தவிர்த்து, நாட்டின் சமூக பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்கின்ற தனியார் துறை மற்றும் பகுதியளவிலான அரச துறைகளில் பணிபுரிகின்ற 2.4 மில்லியன் வேலையாளர்களின் தொழில் உரிமைகள், தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தைப் பாதுகாப்பதற்கான பொறிமுறையை நடைமுறைப்படுத்தி, நாட்டில் தொழில்துறை அமைதியைப் பேணுவது அமைச்சின் பொறுப்பாகும்.

அதேபோன்று, வேலைவாய்ப்பிற்காக புலம்பெயர்ந்து முக்கிய நன்மைகளைப் பெறுகின்ற நாடுகளிடையே இலங்கை முன்னணியில் உள்ளது. புலம்பெயர் வேலையாளர்கள் அனுப்பும் பணம் நாட்டின் ஒட்டுமொத்த அந்நியச் செலாவணி வருவாயில் பிரதான பங்கை வகிக்கின்றது. 2022 ஆம் ஆண்டில், வெளிநாட்டுப் பணம் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 5% இனைப் பிரதிபலிக்கின்ற 1,252.6 பில்லியன் ரூபா இலங்கைக்குக் கிடைக்கப்பெற்றுள்ளது. 2021 ஆம் ஆண்டில், வேலைக்காக புலம் பெயர்ந்தவர்களின் எண்ணிக்கை 310,958 என்பதாக காணப்பட்டிருந்ததுடன், அதில் 124,009 பேர் பெண்கள் என்பதுடன், 186,949 பேர் ஆண்களாவர். இந்த நிலைமையைக் கருத்தில்கொண்டு, நாட்டின் பொருளாதாரத்திற்கு புலம்பெயர் வேலையாளர்களின் பங்களிப்பினை ஏற்றுக்கொண்டு, வெளிநாட்டுப் பணம் அனுப்புவதை அதிகரிக்கவும், தேர்ச்சியற்ற வேலையாளர்களுக்குப் பதிலாக அதிக தேர்ச்சி வாய்ந்த வேலையாளர்களை வெளிநாட்டு வேலைக்கு அனுப்பும் பொறிமுறைகள் மற்றும் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அத்தியாயமானது, 2023 செப்ரெம்பர் 30 ஆம் திகதி வரையில் அமைச்சினாலும், அதனுடன் இணைந்துள்ள நிறுவனங்களாலும் அவற்றின் உரிய குறிக்கோள்களை உணர்ந்து ஆற்றப்பட்ட செயற்பாடுகளினூடாக அடையப்பெற்ற முன்னேற்றத்தின் சுருக்கத்தினைக் கொண்டிருக்கின்றது.




வரைபடம் -1 இலங்கை தொழில் சந்தை தகவல்கள் - 2022
மூலம்: ஆண்டறிக்கை - 2022, இலங்கை மத்திய வங்கி

## 2.1 பணியாளர்களது தொழில்சார் உரிமைகளை பாதுகாப்பதற்கு சட்ட உருவரைச்சட்டகத்தைப் பலப்படுத்துதல்.

அங்கீகரிக்கப்பட்ட தேசிய மற்றும் சர்வதேச சமூக பொருளாதார நிலைமைகள் மற்றும் தொழில் சமவாயங்கள் மற்றும் தரநியமங்களுக்கு இணங்க சட்ட ஏற்பாடுகளை வகுத்தமைத்தல், இலங்கையில் முதலீட்டாளருக்கு இணக்கமான சூழலை உருவாக்குதல் மற்றும் நாட்டின் எதிர்கால முன்னேற்றத்திற்கு வழிவகுப்பது இந்த அமைச்சிற்கு உரிய நேரத்தில் உரித்தளிக்கப்பட்ட பொறுப்பாகும். தொழில் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இயற்றப்பட்ட கட்டளை சட்டங்கள் உள்ளடங்கலாக சுமார் 50 சட்டங்கள் தற்போது அமுலில் உள்ளன. தற்போதைய மற்றும் எதிர்கால சவால்களை எதிர்கொள்வதற்கும், தொழிலாளர்களின் உரிமைகளை ஒருங்கிணைப்பதற்கும், அனைத்து தரப்பினருக்கும் நன்மைகளை உறுதி செய்யும் வகையில் தொழில் சட்டவாக்கங்களில் நிலவும் முரண்பாடுகளை அகற்றுவதற்கும் தற்போதுள்ள தொழில் சட்டங்களில் திருத்தம் மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

### 2.1.1 தற்காலத்துடன் தொடர்புடைய ஏற்பாடுகளுடன் கூடிய புதிய வேலைவாய்ப்புச் சட்டத்தை உருவாக்குதல்

தற்போது தொழில் திணைக்களத்தினால் அமுல்படுத்தப்படும் சட்டங்கள், தொழில் உலகில் தற்போதைய சமூக பொருளாதார மாற்றங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய மாற்றங்களை நிவர்த்தி செய்வதற்கு போதுமானதாக இல்லை. உழைக்கும் சமூகத்தின் உரிமைகளை உறுதிப்படுத்தும் மற்றும் வணிகங்களின் தொடர்ச்சியை எளிதாக்குவதற்கும் வெளிநாட்டு முதலீட்டாளர்களை நாட்டிற்கு ஈர்ப்பதற்கும் தொழில் சட்டமொன்றின் தேவை எடுத்துரைக்கப்பட்டுள்ளது. மேலும், இச்சட்டங்களுக்கு இடையேயுள்ள சிக்கல்களை நீக்கி அவற்றை எளிமைப்படுத்துவதன் மூலம் அனைத்து தரப்பினருக்கும் நன்மைகளை உறுதிசெய்ய வேண்டிய அவசியமுள்ளது. இதற்காக, தொழிற்சங்கங்கள், தொழில்வழங்குநர் உள்ளடங்கலாக பல்வேறு அக்கறைதாரர்களுடன் எட்டு சுற்று கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டு, தற்போது நடைமுறையிலுள்ள 13 சட்டங்களின் விதிகள் எவ்வாறு திருத்தப்படுதல் வேண்டும் என்பது குறித்து அவதானிப்புகள் பெறப்பட்டுள்ளன. அமைச்சரவையின் அங்கீகாரத்திற்கு அமைவாக, இதற்கென நியமிக்கப்பட்ட சட்ட வரைஞர் திணைக்களத்தின் பிரதிநிதித்துவம் உள்ளடங்கலான குழுவினால் தற்போது புதிய வேலைவாய்ப்புச் சட்டம் தயாரிக்கப்பட்டு வருகின்றது.

### 2.1.2 1954 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க கடைகள் மற்றும் அலுவலக பணியாளர் சட்டத்தைத் திருத்துதல்

பணியாளர்களின் நலன் மற்றும் தற்போதைய சூழ்நிலைக்கு ஏற்ற வகையில் கடைகள் மற்றும் அலுவலக பணியாளர்கள் சட்டத்தில் திருத்தம் செய்ய வேண்டிய தேவைப்பாடுள்ளதுடன், பின்வரும் திருத்தங்களுக்கு தேவையான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. இறுதி வரைபு பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக அமைச்சரவையின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

- அறிவு செயன்முறை வெளிவளமிடல் (KPO), வணிக செயன்முறை வெளிவளமிடல் (BPO), வெளிநாட்டு நிறுவனங்கள் மற்றும் அத்தகைய நிறுவனங்களின் கணக்குகள் மற்றும் நிருவாக நடவடிக்கைகளைப் பராமரிக்கும் ஏனைய வணிக நிறுவனங்கள் போன்ற நிறுவனங்களில் பணிபுரியும் பெண் பணியாளர்களுக்கு இரவு நேரங்களில் வேலை மாற்று முறையில் பணியாற்று வதற்கு உதவுதல்.

- இரவு வேலைகளில் ஈடுபடும் பெண்களுக்கு போக்குவரத்து வசதிகள், பாதுகாப்பு மற்றும் வேலை செய்யும் இடம் தொடர்பான பொது வசதிகளை வழங்குவது தொடர்பான ஒழுங்குவிதிகளை உருவாக்குவதற்கு வலுவளித்தல்.

- பாலின வேறுபாடின்றி, சமமான சேவை அல்லது வேலைக்கு சம ஊதியம் வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்தல்

### 2.1.3 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தைத் திருத்துதல்

தற்போதைய சமூக பொருளாதார சூழ்நிலை மற்றும் பணியாளர்களின் நலனுக்கு ஏற்ப ஊழியர் சேமலாப நிதியச் சட்டம் திருத்தப்படுதல் வேண்டும். தன்னார்வ ஓய்வுத் திட்டத்தின் கீழ் அல்லது தற்போதைய தொழில் உலகின் தேவைகளின் அடிப்படையில் பணியாளர் ஒருவர் 55 வயதை அடைவதற்கு முன்பு ஓய்வுபெறும்போது ஊழியர் சேமலாப நிதியத்தின் நன்மைகளைப் பெறுவதற்கு ஏற்பாடு செய்யப்படுகின்றது.

## 2.2 வெளிநாட்டு வேலைவாய்ப்பை ஊக்குவிப்தற்கான சட்ட மற்றும் கொள்கை உருவரைச்சட்டகத்தை வலுப்படுத்துதல்

### 2.2.1 1985 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகச் சட்டத்தைத் திருத்துதல்.

வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறையை ஒழுங்குபடுத்துவதற்கும், தற்போதுள்ள சட்ட கட்டமைப்பை வலுப்படுத்துவதற்கும், சர்வதேச கடப்பாடுகளுக்கு கைக்கொள்வதற்கும், உள்நாட்டில் சட்டங்களை அமுல்படுத்துவதற்கும் ஏதுவாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் சட்டம் திருத்தப்படுகின்றது. இதனை நிறைவுசெய்வதற்காக, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் அலுவலர்களுனதும், அனைத்து அக்கறைதாரர்களினதும் பங்களிப்புடன் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக சட்டத்தில் முன்மொழியப்பட்ட திருத்தங்களை இந்த அமைச்சு இனங்கண்டுள்ளதுடன், முன்மொழியப்பட்ட வரைவுத் திருத்தம் சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 2.2.2 வேலைவாய்ப்புக்கான புலம்பெயர்வு - இலங்கை தொடர்பான தேசிய கொள்கை மற்றும் செயற்திட்டத்தை அமுல்படுத்துதல்.

அனைத்து அக்கறைதாரர்களினதும் பங்களிப்புடன் இற்றைப்படுத்தப்பட்ட வேலைவாய்ப்புக்கான புலம்பெயர்வு-இலங்கை தொடர்பான தேசிய கொள்கை மற்றும் செயற்றிட்டத்திற்கு 2023.09.04 ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.வேலையாளர் புலம்பெயர்வு தொடர்பான நாட்டின் அணுகுமுறையில் குறிப்பிடத்தக்கதொரு முன்னேற்றத்தைக் குறிக்கும் வகையில், இது அனைத்து அக்கறைதாரர்களினதும் பங்கேற்புடன் 2023.10.25 ஆம் திகதி உத்தியோகபூர்வமாக அங்குரார்ப்பணம் செய்யப்படும்.

## 2.3 வெளிநாடுகளில் தொழில் புரியும் இலங்கையர்களினால் சட்டரீதியாக இலங்கைக்கு அனுப்பப்படும் பணத்தை ஊக்குவித்தல்

### 2.3.1 வெளிநாடுகளில் தொழில் புரியும் இலங்கையர்களுக்கு முழுஅளவிலான மின்சார வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்.

வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கையர்களை அந்நிய செலாவணி பணம் அனுப்புவதன் மூலம் தேசிய பொருளாதாரத்தை வலுப்படுத்துவதில் அவர்களின் பங்கை பாராட்ட ஊக்குவிக்கும் முயற்சியில், அமைச்சரவை 2022 ஓகஸ்ட் 16 ஆம் திகதி குறிப்பிடத்தக்க முன்முயற்சிக்கு ஒப்புதல் அளித்தது. 2022 யூன் 17 ஆம் திகதியிடப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்திலும், கௌரவ தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைக் குறிப்பிலும் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளவாறு, வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கையர்களுக்கு முழுமையான மின்சார வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு இத்திட்டம் அனுமதிக்கின்றது. வெளிநாடுகளில் தொழில் புரியும் இலங்கையர்கள் இந்த சலுகைகளுக்கு தகைமை பெறுவதற்கு, அவர்கள் அனுப்பிய வெளிநாட்டு நாணயத்தில் குறைந்தது 50% நாட்டின் வங்கி முறைமை ஊடாக இலங்கை ரூபாவாக மாற்றுதல் வேண்டும்.

2023.09.30 இலுள்ளவாறு, இத்திட்டத்தின் கீழ் 133 அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ள துடன், குறித்த காலப்பகுதியில் வெளிநாட்டவர்களால் அனுப்பப்பட்ட அந்நிய செலாவணியின் அளவு 15.07 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும்.

### 2.3.2 வெளிநாட்டில் வேலை செய்து திரும்பும் புலம்பெயர் வேலையாளர்களுக்கு கூடுதல் வரிச் சலுகைகளை வழங்குதல்

புலம்பெயர் வேலையாளர்களை திருப்பி அனுப்பும்போது, விமான நிலைய சுங்க வரி அற்ற கடைத்தொகுதியில் கொள்வனவுசெய்யப்பட்ட பொருட்களுக்கு அவர்கள் வெளிநாட்டில் இருந்த காலத்தின் அடிப்படையில் தற்போதைய வரிக் கொடுப்பனவுக்கு மேலதிகமாக வங்கி அமைப்பு மற்றும் "லங்கா ரெமிட்" விண்ணப்பத்தின் மூலம் அனுப்பப்பட்ட வெளிநாட்டு நாணயத்தின் அளவு ஆகியவற்றின் அடிப்படையில் மேலதிக சுங்க வரிக் கொடுப்பனவு வழங்கப்படும்.

### 2.3.3 பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தை அமுல்படுத்துதல்

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவுசெய்யப்பட்டு வெளிநாட்டில் தொழில் புரியும் பணியாளரொருவர் 60 வயதை அடைந்த பின்னர் மாதாந்த ஓய்வூதியத்தைப் பெற்றுக் கொள்வதற்காக இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபையுடன் இணைந்து 'மனுசவி' பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தை அமுல்படுத்துதல். இந்த ஓய்வூதியம் அந்நிய செலாவணியில் செலுத்தப்படுதல் வேண்டும்.

### 2.3.4 விமான நிலையத்தில் இலங்கை புலம்பெயர் வேலையாளர்களுக்கு மேலதிக வசதிகளை வழங்குவதற்காக "ஹோப் கேட்" என்பதைத் திறத்தல்

## 2.4 வேலையின் கௌரவத்தை அதிகரித்தல்

சமூகத்தில் உடல் உழைப்பு வேலைகள் என அடையாளம் காணப்பட்ட தொழில்களுக்கு வழிகாட்டவும், தொழில் வழிகாட்டுதல்நெறிகளை அறிமுகப்படுத்தவும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அந்த தொழில் நிபுணர்களுக்குத் தேவையான அறிவை வழங்குவதன் மூலமும், நெறிமுறைக் கொள்கைகளை அறிமுகப்படுத்துவதன் மூலமும், அவர்கள் உயர் தரமான சேவை வழங்கலை அறிமுகப்படுத்தவும், தரமான சேவையை வழங்கவும் நிலையில் வைக்கப்படுவார்கள்.

ஒவ்வொரு துறையிலும் முறைசாரா துறை வேலைவாய்ப்புகளின் வகைகள் இனங்காணப்பட்டு, உரிய துறைகளுடன் கலந்துரையாடல்கள் விரைவில் ஆரம்பிக்கப்பட்டு அதற்கேற்ப எதிர்கால திட்டங்கள் தயாரிக்கப்படும்.

## 2.5 தொழிலணியினை பலப்படுத்துதல் மற்றும் சர்வதேச தொழில் தரநியமங்களைப் பராமரித்தல்

சர்வதேச தொழில் தாபனத்தின் (ILO) அங்கத்துவ நாடு என்ற வகையில், சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட சமவாயங்கள் மற்றும் விதப்புரைகளின் கீழ் நாட்டின் தொழில் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், தொழில் துறையில் உள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் அவற்றைப் பயன்படுத்துவதற்கும் இலங்கையின் கடப்பாடுகளை இந்த அமைச்சு நிறைவேற்றுகின்றது.

சர்வதேச தொழில் தாபனம் (ILO) மற்றும் தொழில் துறையிலுள்ள ஏனைய பல்தரப்பு முகவர் நிலையங்கள் தொடர்பான உறுப்பு நாடு என்ற வகையில் இலங்கை தனது கடப்பாடுகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றியுள்ளதை உறுதிப்படுத்தி, தொழில் கொள்கைகளை வகுப்பதிலும், தேசிய மட்டத்தில் சமூக கலந்துரையாடலை ஊக்குவிப்பதிலும், மனித வள அபிவிருத்திக்கு சர்வதேச ஆதரவைப் பெற்றுக் கொள்வதிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த இலக்குகளை அடைவதற்கு, 2023 ஆம் ஆண்டின் முதல் மூன்று காலாண்டுகளில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன் அவை பின்வருமாறு:

### 2.5.1 தொழில் அணிக்கு வலுளித்தல் மற்றும் பாதுகாத்தல்

- முத்தரப்பு பிரதிநிதித்துவத்துடன் தேசிய தொழில் ஆலோசனைச் சபைக் (NLAC) கூட்டத்தில் அனுசரணையாளராக செயற்படுதல். 2023 ஆம் ஆண்டில் மூன்று கூட்டங்களை நடத்தியதன் மூலம் பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன :
    - பெருந்தோட்டத் தொழிலாளர் துறையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இலங்கை தோட்ட ஊழியர் சங்கத்திற்கு தேசிய தொழில் ஆலோசனைச் சபையைப் பிரதிநிதித்துவப்படுத்தி அங்கத்துவம் வழங்குவதற்குத் தீர்மானித்தல் மற்றும் அங்கத்துவத்தை வழங்க நடவடிக்கை எடுத்தல்.
    - தேசிய தொழில் ஆலோசனைச் சபையில் பெண்களின் பிரதிநிதித்துவத்திற்கான தொழிற் சங்கத்தை உள்ளடக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

. தற்போதய பொருளாதார நெருக்கடி காரணமாக தொழில் சந்தையில் எழுந்துள்ள பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றுக்கான தீர்வுகளைக் கண்டறிவதற்கும், அது தொடர்பான நடவடிக்கைகளை ஒழுங்கமைப்பதற்கும் கௌரவ அமைச்சரின் பங்களிப்புடன் 01 சுற்று கலந்துரையாடல்களை நடத்தி தொழில் அமைச்சு, பொது திறைசேரி, மத்திய வங்கி, சர்வதேச தொழில் தாபனம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் ஆகியவற்றை பிரதிநிதித்துவப்படுத்தி முத்தரப்புப் பிரதிநிதித்துவத்துடன் கூடிய குழுவொன்றை நியமித்து தேவையான நடவடிக்கைகளை சனாதிபதி அலுவலகம் மேற்கொண்டு வருகின்றது.



புகைப்படம் 2-1 தேசிய தொழில் ஆலோசனைச் சபைக் கூட்டம்

### 2.5.2 சர்வதேச தொழில் தரநியமங்களை பேணுதல்

- சர்வதேச தொழில் தாபனத்தின் 22 ஆவது உடன்படிக்கையின் கீழ் 2023 ஆம் ஆண்டிற்கான 14 சமவாயங்களுக்கான அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் மீளாய்வாண்டு காலப்பகுதிக்காக 10 அறிக்கைகளை சர்வதேச தொழில் தாபனத்திடம் சமர்ப்பித்தல்.
- சர்வதேச தொழில் தாபனத்தின் (ILO) சமவாயம் 19 இன் கீழ் ஏற்று அங்கீகரிக்காத சமவாயங் களுக்கான அறிக்கைகளைத் தொகுத்தல்.
- அமைச்சுடன் தொடர்புடைய அனைத்து வகையான கொள்கைகளையும் வகுத்தமைப்பதற்கு முன்னுரிமையளித்தல்.
- ஆண்டுதோறும் ஜெனீவாவில் நடைபெறும் சர்வதேச தொழில் மாநாட்டில் முத்தரப்பு பிரதிநிதிகள் பங்கேற்பது தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் ஒருங்கிணைத்து பின்தொடர்தல். இதற்கமைவாக, சர்வதேச தொழில் மாநாடு 2023.06.05 முதல் 2023.06.16 வரை நடைபெற்ற போதிலும், நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக நிதியைப் பெறுவதிலுள்ள சிரமங்கள் காரணமாக பிரதிநிதிகளால் கலந்துகொள்ள முடியவில்லை.
- அதிமேதகு சனாதிபதி அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட 2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட உரையின் பிரகாரம், இலங்கையில் காலாவதியான தொழில் சட்டங்களுக்கு மாற்றாக புதிய சட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கும், அவற்றை ஒரே சட்டமூலமாக கொண்டு வருவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். தொழிற்சங்கங்கள், தொழில்வழங்குநர்கள் உள்ளடங் கலாக பல்வேறு தரப்பினருடன் எட்டு சுற்று பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு, தொழில் சட்டங்களை எவ்வாறு திருத்துவது என்பது குறித்து கருத்துகள் பெறப்பட்டன. இதேபோன்று, 27/2023 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்தினைத் தொடர்ந்து சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனமானது முன்மொழியப்பட்ட புதிய சட்ட உருவரைச்சட்டகத்தை வரைவதற்கு தேவையான அனுமதியைப்பெற்று, தற்போது சட்டமா அதிபர் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டு வருகின்றது.
- இலங்கைக்குத் தேவையான சமூகப் பாதுகாப்பு முறைமையை இனங்காண்பதற்காக சர்வதேச தொழில் தாபனத்தின் தொழில்நுட்ப உதவியுடன் ஆய்வொன்று முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதேபோன்று, சர்வதேச தொழில் தாபனத்தின் ஏற்பாட்டில் 2023.03.23 மற்றும் 2023.05.23 ஆகிய நாட்களில் மூன்றாம் தரப்பு அக்கறைதாரர்களுக்கு சமூக பாதுகாப்பு முறைமைகள் குறித்த அறிவை வழங்கும் நிகழ்ச்சித்திட்டமொன்று இடம்பெற்றிருந்தது. அத்துடன், இந்தோனேசியாவில் தற்போதிருக்கின்ற சமூகப் பாதுகாப்பு முறைமைகள் பற்றி கற்பதற்கும், இலங்கையில் அதனை நடைமுறைப்படுத்துவதற்கும் அமைச்சின் செயலாளர் தலைமையிலான முத்தரப்பு தூதுக்குழுவொன்று 2023.09.03 ஆம் திகதி இந்தோனேசியாவுக்கு புறப்பட்டுச் சென்றிருந்தது.

- சமூகப் பாதுகாப்பு, கல்வி மற்றும் அதனுடன் தொடர்புடைய அனைத்து நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக இலங்கைக்கும் வெளிநாடுகளுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட வேண்டிய புரிந்துணர்வு உடன்படிக்கைகள் தொடர்பில் செயற்படுதல்.
- இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான சமூகப் பாதுகாப்பு தொடர்பான உடன்படிக்கை தொடர்பான அமைச்சரவை விஞ்ஞாபனத்தைத் தயாரித்தல் மற்றும் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கான உரிய நடவடிக்கைகளைத் தயாரித்தல்.
- இலங்கை மத்திய வங்கியினால் வருடாந்தம் வெளியிடப்படும் காலாந்திர பொருளாதார அபிவிருத்தியின் முக்கிய அம்சங்கள் மற்றும் பொருளாதார அபிவிருத்திக்கான கண்ணோட்டம் தொடர்பான அறிக்கை தொடர்பான தகவல்களை வழங்குதல் மற்றும் மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கையுடன் தொடர்புடைய தகவல்களைத் தொகுத்தல்.
- தொழில் துறையின் புதிய போக்குகள் குறித்து வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு மற்றும் ஏனைய அரசாங்க அமைச்சுகளுக்காக அறிக்கைகளைத் தயாரித்தல்.
- சர்வதேச தொழில் தாபனத்தின் தொழில்நுட்ப ஒத்துழைப்புடன் அமுல்படுத்தப்படும் கருத் திட்டங்கள் மற்றும் செயலமர்வுகள் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் ஒருங்கிணைத்தல்.
- சர்வதேச தொழில் தாபனத்தின் வருடாந்தம் அனுப்பப்பட வேண்டிய தொழில் புள்ளிவிபரங்கள் தொடர்பான வினாக்கொத்துக்கான பதில்களை வழங்குதல்.
- தொழில் திணைக்களம் மற்றும் இந்த அமைச்சுடன் தொடர்புடைய ஏனைய நிறுவனங்களின் அலுவலர்களை வெளிநாட்டு புலமைப்பரிசில் செயலமர்வுகள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் பங்குபற்றச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல். 2023 சனவரி 01 முதல் 2023 செப்டெம்பர் 30 வரை வெளிநாட்டு பயிற்சி வகுப்புகள் மற்றும் பயிற்சிசெயலமர்வுகளுக்காக 49 அலுவலர்கள் வெளிநாடுகளுக்கு சென்றுள்ளனர்.



புகைப்படம் 2.2 - தொழில் சட்டங்களை மீள ஒழுங்கமைப்பது பற்றிய கலந்துரையாடல்

## 2.6 சர்வதேச ஒத்துழைப்பினூடாக புலம்பெயர் வேலையாளர்களை வலுவளித்தல்

### 2.6.1 புரிந்துணர்வு உடன்படிக்கைகள்/ஒப்பந்தங்கள்

மனிதவளத் துறையை மேம்படுத்துதல், மனித இயலுமையை விருத்திசெய்தல், சர்வதேச சமூகப் பாதுகாப்புத் திட்டம், பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், சட்ட விவகாரங்கள் மற்றும் சுமூக உறவுகள் உள்ளடங்கலான பல்வேறு குறிக்கோள்களை அடைவதற்காக இலங்கை அரசாங்கம் பல உடன்படிக்கை களில் கைச்சாத்திட்டுள்ளது. அத்தகைய இருபது (20) உடன்படிக்கைகள் / புரிந்துணர்வு உடன்படிக்கைகள் தற்போது அமுலில் உள்ளன.

- **புதிய புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்/ ஒப்பந்தங்கள்**
  இலங்கை அரசாங்கத்திற்கும் யப்பானின் எஹிம் எஸ்லேட்டிற்கும் இடையில் விவசாயம் மற்றும் ஏனைய துறைகளில் கூட்டாண்மை ஒப்பந்தம் 2023 யூன் 07 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது.

- **பின்வரும் நாடுகளுடனான புரிந்துணர்வு உடன்படிக்கைகள் / உடன்படிக்கைகளில் கைச்சாத்திடுவது தொடர்பான வரைவுகள் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் ஊடாக பரிமாறப்பட்டுள்ளன.**
  மால்டா குடியரசு - மனிதவளத் துறை
  ருமேனியா - வேலைவாய்ப்பு மற்றும் மனிதவளத் துறை
  இத்தாலி - புலம்பெயர்வு மற்றும் இயக்க கூட்டாண்மை
  நியூசிலாந்து - நியூசிலாந்து அரசாங்கத்தின் நிதியுதவியுடன் சர்வதேச புலம்பெயர்வு கொள்கை விருத்தி நிலையத்தால் (ICMPD) நிருவகிக்கப்படும் புலம்பெயர்வு வள நிலையத்தை (MRC) நிறுவுவதற்காக முன்மொழியப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை
  துருக்கி - துருக்கி அரசாங்கத்திற்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையில் தொழிலாளர் புலம்பெயர்வு தொடர்பாக முன்மொழியப்பட்ட உடன்படிக்கை

- **வெளிநாட்டு வேலைவாய்ப்பு தொடர்பாக இலக்கு நாடுகளுடன் தற்போதுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கைகள் / இருதரப்பு உடன்படிக்கைகளை மீளாய்வு செய்தல்**

  பின்வரும் உடன்படிக்கைகள் / புரிந்துணர்வு உடன்படிக்கைகளை மீளாய்வு செய்வது தொடர்பான விபரங்கள் வெளி நாட்டு அலுவல்கள் அமைச்சின் ஊடாக உரிய நாடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.
  சிலி - மனிதவளத் துறை
  குவைத் - தொழிலாளர் வேலைவாய்ப்பு மற்றும் மனிதவள அபிவிருத்தித் துறை
  கொரிய குடியரசு - வேலைவாய்ப்பு அனுமதிப்பத்திர முறைமையின் கீழ் தொழிலாளர்களை அனுப்புதல் மற்றும் பெறுதலமலேசியா - ஆட்சேர்ப்பு, வேலைவாய்ப்பு மற்றும் தொழிலாளர்களை திருப்பி அனுப்புதல்

  வழங்குவது குறித்து கலந்துரையாடுவதற்கு அமைச்சருடன் யப்பானிய தூதுக்குழுவுன் சந்திப்பு

  - **இணைந்த குழுக் கூட்டங்கள்**
    கல்வி மற்றும் பயிற்சித் துறையில் இலங்கைக்கும் ஓமன் அரசுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் இணைந்த குழுக் கூட்டத்தை நடத்துவதற்கான பரிந்துரைகள் ஓமன் தரப்பிற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன், எதிர்காலத்தில் இணைந்த குழுக் கூட்டத்தை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.



புகைப்படம் 2.3 - நாட்டின் வேலையாளர்களுக்கு வேலை வாய்ப்புகளை

### 2.6.2 உலகளாவிய / பிராந்திய மன்றங்கள்

- **கொழும்பு செயன்முறை**

பிலிப்பைன்சின் தலைமையில் புலம்பெயர்வுக்கு முன்னரான மற்றும் வலுவளித்தல் தொடர்பான ஐந்தாவது (5) மற்றும் ஆறாவது (6) எண்ணக்கருசார் செயற்குழுக் கூட்டங்கள் முறையே பிலிப்பைன்ஸ் மற்றும் தாய்லாந்தில் முறையே 14,15.03.2023 மற்றும் 16-17.08.2023 ஆகிய திகதிகளில் நடைபெற்றிருந்தன.

புலம்பெயர்ந்தோர் உரிமைகளைப் பாதுகாக்கின்ற அதேவேளை, தொழிலாளர் புலம்பெயர்வின் நன்மைகளை மேம்படுத்துவதும் ஆசியாவில் புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கான எதிர்கால தீர்வு நேர்காணல்களை நடத்துவதும் இதன் நோக்கமாகும். 2023-2027 ஆம் ஆண்டிற்கான செயல்திட்டத்தின் முன்னேற்றம் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

திறன்கள் மற்றும் தகைமையை அறிதல் செயன்முறைகள் பற்றிய எட்டாவது (8) எண்ணக்கருசார் செயற்குழுக் கூட்டத்தை இலங்கை அரசாங்கத்தின் தலைமையில் இந்த ஆண்டின் பிற்பகுதியில் கொழும்பு செயன்முறையின் ஏனைய உறுப்பு நாடுகளின் பங்கேற்புடன் இலங்கையில் நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

- **அபுதாபி பேச்சுவார்த்தை**

அபுதாபி பேச்சுவார்த்தையின் ஏழாவது (7) சபைக் கூட்டம் 2024 பெப்ரவரி 10 மற்றும் 11 ஆம் திகதிகளில் அபுதாபியில் நடைபெறவுள்ளது.

- **பாதுகாப்பான, ஒழுங்கான மற்றும் கிரமமான புலம்பெயர்வுக்கான பூகோள ஒப்பந்தம் (GCM)**

புலம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு (IOM), சர்வதேச தொழில் தாபனம் மற்றும் ஐக்கிய நாடுகள் வலையமைப்பு ஆகியவற்றின் ஆதரவுடன், பாதுகாப்பான, ஒழுங்கான மற்றும் கிரமமான பரிமாற்றங்களுக்கான பூகோள ஒப்பந்தமத்தின் 10.7 மற்றும் 17 ஆம் இலக்குகளின் நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு ஆசியாவில் வளைகுடா ஒத்துழைப்பு ஒன்றியத்தின் (GCC) சிரேஸ்ட அலுவலர்களின் கலந்துரையாடல் 2023 மே 30-31 ஆகிய திகதிகளில் பிலிப்பைன்ஸின் ரகுய்க்கில் நடைபெற்றிருந்தது.

இந்த கலந்துரையாடலின் போது, கொழும்பு செயன்முறை மற்றும் அபுதாபி கலந்துரையாடல் உட்பட தற்போதைய பிராந்திய ஆலோசனை செயன்முறைகள், தொழிலாளர் புலம்பெயர்வினைக் கட்டியெழுப்பு வதற்கான பொதுவான நலன்கள் குறித்து விரிவாக கலந்துரையாடுவதற்கான சந்தர்ப்பம் கிடைத்திருந்தது.

- **இலங்கையர்களுக்கான பாதுகாப்பான மற்றும் அதிகளவிலான தொழிலாளர் புலம்பெயர்வு - கட்டம் IV**

சுவிஸ் அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தின் நிதி மானியத்தின் கீழ் இலங்கையிலுள்ள சுவிஸ் தூதரகத் துடன் இணைந்து தொழில் மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் வழிகாட்டலின் கீழ் "இலங்கையர்களுக்கான பாதுகாப்பான மற்றும் அதிகளவிலான தொழிலாளர் புலம்பெயர்வு" செயற்திட்டம் தற்போது நான்காம் கட்டத்தில் செயற்படுத்தப்பட்டுள்ளது. சர்வதேச தொழில் தாபனம்மற்றும் ஐ.இ.எஸ்.சி நிறுவனம் தேசிய மட்டத்தில் பங்குதாரர்களாகவும், அனுராதபுரம், புத்தளம், வவுனியா, கண்டி மற்றும் குருநாகல் மாவட்டங்களில் மாவட்ட மட்டத்தில் அசாஃப், வாய்ஸ், ஃபார்ம், சமதான மற்றும் சி.எச்.ஆர்.சி.டி (ASAFE, VOICE, FIRM, SAMADANA and CHRCD) நிறுவனங்கள் முறையே பங்குதாரர்களாகவும் செயற்படுகின்றன. 2023 செப்டெம்பர் இறுதி வரை இம்மாவட்டங்களில் முன்னெடுக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் நிதி முன்னேற்றம் 419 மில்லியன் ரூபாவாகும்.

### 2.6.3 வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறையை மேம்படுத்துதல்

- **வெளிநாட்டு வேலையிலிருந்து நாடு திரும்பியவர்கள்/ அவர்களது குடும்ப அங்கத்தவர்கள் மற்றும் உரிய சமூகத்தின் பொருளாதாரத்தை உயர்த்துவதற்கான கருத்திட்டம்.**

கோவிட்-19 தொற்றுநோயால் வேலைகளை இழந்த மற்றும் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்ட புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கான மூலோபாய தலையீடுகளின் அவசியத்தை உணர்ந்த தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம், சர்வதேச புலம்பெயர்வுக்கான அமைப்பு (IOM), சர்வதேச தொழில் தாபனம் ஆகியவற்றுடன் இணைந்து புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கான தேசிய கோவிட்-19 பதில் வினையாற்றல் திட்டத்தை உருவாக்கியிருந்தது. இந்தத் திட்டத்தை செயற்படுத்துவதற்கு பல்வேறு அக்கறைதாரர்களினும் ஆதரவை அமைச்சு எதிர்பார்த்திருந்தது.

இதன்படி, சர்வதேச புலம்பெயர்வுக்கான அமைப்பின் மற்றும் சர்வதேச தொழில் தாபனத்தின் ஈடுபாட்டுடன், யப்பான் அரசாங்கத்தின் நிதி உதவியுடன், தேங்காய் சிரட்டை மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த பைகள் உற்பத்தி, சந்தைப்படுத்தல் கருத்திட்டம் 01 மற்றும் மிளகாயுடன் தொடர்புபட்டுள்ள உற்பத்தி ஊக்குவிப்பு கருத்திட்டம் 01 ஆகியவை 2023 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப் பட்டிருந்தன. இத்திட்டத்தின் கீழ் 09 மாவட்டங்களில் 20 செயற்திட்டங்கள் நிறைவுசெய்யப்பட்டு மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

- **இலங்கையில் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு வேலைவாய்ப்புகளை மேம்படுத்துவதற்காக ஒருங்கிணைக்கப்பட்ட வழிகாட்டுநெறிகள் மற்றும் மேற்கோள் முறைமையை (IGRS)தாபித்தல்.**

இந்த அமைச்சு, உரிய அக்கறைதாரர்களுடன் இணைந்து மற்றும் சர்வதேச புலம்பெயர்வுக்கான அமைப்பின் ஆதரவுடன், இலங்கையில் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு வேலைவாய்ப்புகளை மேம்படுத்துவதற்காக ஒருங்கிணைந்த வழிகாட்டுநெறிகள் மற்றும் மேற்கோள் முறைமையை (IGRS) உருவாக்கியிருந்தது. வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறை முகங்கொடுக்கும் பாரிய சவால்களுக்கு தீர்வுகளைக் காண்பதற்கும், நிலையான முறையில் பொதுக் கொள்கை நோக்கங்களை அடைவதற்கும் இந்தக் கருத்திட்டத்தை அமுல்படுத்துதல் ஒத்த வாய்ப்பொன்றை வழங்குகின்றது.

இதன் முதற்கட்டமாக, இந்த அமைச்சின் அனுசரணையின் கீழ் உத்தேச கருத்திட்டத்தை அமுல் படுத்துவதற்கான மூலோபாய வழிகாட்டுநெறிகளையும், வழிகாட்டல்களையும் வழங்குவதற்காக கருத்திட்ட வழிகாட்டல் குழுவொன்றும் (PSC) இலங்கையை தளமாகக் கொண்ட சர்வதேச புலம் பெயர்வுக்கான அமைப்பு (IOM ஸ்ரீலங்கா) உட்பட ஏனைய தொடர்புடைய முகவர் நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன. ஒருங்கிணைந்த வழிகாட்டுநெறிகள் மற்றும் மேற்கோள் முறைமை (IGRS) வெளியீடு 2023 யூலை 15 ஆம் திகதி உத்தியோகபூர்வமாக வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டிருந்தது.

- **பயிற்றுவிப்பாளர் பயிற்சிப் பிரிவின் முன்னேற்றம்**

சுவிஸ் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் நிதி உதவியுடன், பயிற்றுவிப்பாளர் பயிற்சிப் பிரிவின் இயலுமை விருத்திக்காக, 'ஹெல்விட்டாஸ் ஸ்ரீலங்காவின்' வழிகாட்டலின் கீழ் பின்வரும் தலைப்புகளின் கீழ் தயாரிக்கப்பட்ட 5 வழிகாட்டுநெறிகள் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

01. உளவியல் சமூக ஆதரவு மற்றும் முதலுதவி.
02. துயரத்தைக் கையாளுதல்
03. மக்கள் தொடர்பு மற்றும் வாடிக்கையாளர் பராமரிப்பு
04. அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரித்தல்
05. பாதுகாப்புத் திட்டங்களைத் தயாரித்தல்

இதற்கு மேலதிகமாக, இற்றைப்படுத்தக்கட்ட பயிற்சி தொகுதியின் கீழ் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் இரண்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டிருந்தன. சர்வதேச தொழில் தாபனத்தின் அனுசரணையுடன் தரவுப் பகுப்பாய்வு தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் பயிற்று விப்பாளர் பயிற்சிப் பிரிவின் தெரிவு செய்யப்பட்ட அலுவலர்களுக்கு வழங்கப்பட்டது.

சர்வதேச புலம்பெயர்வுக்கான அமைப்பின் அனுசரணையுடன் 'ஹெல்விடாஸ் ஸ்ரீலங்காவின்' அனுசரணையின் கீழ், மீள் ஒருங்கிணைப்பு தொடர்பான பயிற்றுவிப்பாளர்களுக்கான பயிற்சிப் பிரிவிற்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் வழங்கப்பட்டிருந்தன.

2023.09.30 இலுள்ளவாறு, பாதுகாப்பான புலம்பெயர்வு, உளவியல் சமூக ஆதரவு, சிறுவர் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு, ஆட்கடத்தல் மற்றும் மனிதக்கடத்தல், அபிவிருத்தி திட்டமிடலைத் தயாரித்தல், சிறுவர் பாதுகாப்பு திட்டங்களைத் தயாரித்தல், புலம்பெயர்ந்த தொழிலாளர்களை மீள் சமூகமயமாக்குதல் ஆகிய கருப்பொருள்களில் நாடளாவியரீதியில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அபிவிருத்தி அலுவலர்களின் இயலுமை விருத்தி மற்றும் சமூக வலுவூட்டல் போன்றவற்றுக்காக 486 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் பயிற்சியாளர் பயிற்சிப் பிரிவின் அலுவலர்களின் வள பங்களிப்புடன் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

## 2.7 புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களின் பாதுகாப்பு, நலன்புரி மற்றும் வலுவளித்தல்

### 2.7.1. வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பிரிவினால் நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்


- **குடும்பப் பின்னணி அறிக்கைகளை வழங்குதல்**

புலம்பெயர் பெண் வேலையாளர்களின் பராயமடையாத சிறுவர்களுக்குப் பாதுகாப்பை வழங்கும் குறிக்கோளுடன், 2022.07.12 ஆம் திகதியிடப்பட்ட 01/2022 ஆம் இலக்க புதிய சுற்றறிக்கை, "தொழிலுக்காக புலம்பெயர்வதற்கு எதிர்பார்க்கும் பெண்களின் பராயமடையாத சிறுவர்களின் பாதுகாப்புத் திட்டம் குறித்த அறிக்கையைப் பெறுதல்" என்று தலைப்பிடப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. இதற்கான திருத்தங்கள் 2023.04.18 ஆம் திகதியிடப்பட்ட 02/2023 (1) ஆம் இலக்க சுற்றிக்கையினால்

கூட்டிணைக்கப்பட்டுள்ளது. இதன்படி, முதுலாவது காலாண்டில் 20,679, இரண்டாவது காலாண்டில் 18,037 மற்றும் மூன்றாம் காலாண்டில் 22,444 என்பதாக 2023 செப்ரெம்பர் 30 வரை 61,160 குடும்பப் பின்னணி அறிக்கைகள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

- **"ஷிரமிக சுரகும"' நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்**

புலம்பெயர் வேலையாளர்களின் பாதுகாப்பு மற்றும் நலன்புரியினை இலக்காகக் கொண்டு 2016 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டத்தின் கீழ் புலம்பெயர் வேலையாளர்களின் குடும்பங்கள் பிரதேச செயலக மட்டத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. புலம்பெயர் வேலையாளர்களின் குடும்பங்களின் சமூகப் பொருளாதார நிலையை உயர்த்தும் நோக்கத்துடன் "குடும்ப மேம்பாட்டுத் திட்டங்கள்" தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு, இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட புலம்பெயர் வேலையாளர் குடும்பங்களில் சமூகரீதியாக பாதிக்கப்படக்கூடிய சிறுவர்களை இலக்காகக் கொண்டு "பாதுப்புத் திட்டங்கள்" வரையப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளன. 2023 செப்ரெம்பர் 30 இலுள்ளவாறு 'ஷிரமிக சுரகும' நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், பதிவு செய்யப்பட்ட புலம்பெயர் வேலையாளர் குடும்பங்களின் எண்ணிக்கை 30,819 ஆகும்.





வரைபடம் -2.1 "ஷ்ரமிக சுரகும" நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான பதிவு

பிரதேச செயலகங்களுக்கு இணைக்கப்பட்டுள்ள அபிவிருத்தி அலுவலர்களின் மேற்பார்வை மற்றும் வழிகாட்டலின் கீழ், 3642 குடும்ப அபிவிருத்தித் திட்டங்களும், 683 பராமரிப்புத் திட்டங்களும் 'ஷ்ரமிக சுரகும' நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட புலம்பெயர் வேலையாளர் குடும்பங்களை இலக்காகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளன.

இதற்கு மேலதிமாக, பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் பணிக்கமர்த்தப்பட்டுள்ள அபிவிருத்தி அலுவலர்கள், புலம்பெயர் வேலையாளர் குடும்பங்களின் பிள்ளைகளை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் கல்விப் புலமைப்பரிசில் நிகழ்ச்சித் திட்டங்களுக்கும் மாற்றுத்திறனாளிகளுக்கு சுயதொழில் கடன் மற்றும் வீட்டுக்கடன் திட்டங்களுக்கும் அனுப்புகின்றனர். மேலும், புலம்பெயர் வேலையாளர் குடும்பங்களின் உறுப்பினர்களுக்கு தொழில் பயிற்சி அளிக்கப்பட்டு அவர்கள் மருத்துவ கிளினிக்குகளுக்கு அனுப்புதல் போன்றவற்றை மேற்கொண்டுள்ளனர்.



2.4 - இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் அனுசரணையுடன் வெளிநாட்டில் பணி புரியும் போது விபத்தில் காயமடைந்த வேலையாளருக்கு புதிய வீடொன்று வழங்கப்படுதல்.




வரைபடம் -2.2 -அபிவிருத்தி அலுவலர்களினால் தயாரிக்கப்பட்ட குடும்ப அபிவிருத்தி மற்றும் பாதுகாப்புத் திட்டங்கள்

- **விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல்**

இந்த அமைச்சுடன் இணைக்கப்பட்டுள்ள அபிவிருத்தி அலுவலர்கள் புலம்பெயர் சமூகத்தை இலக்காகக் கொண்டு பிரதேச மட்டத்தில் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதுடன், பின்வரும் விடயப்பரப்புகளை உள்ளடக்கி நாடளாவியரீதியில் 2023 சனவரி 01 முதல் செப்ரெம்பர் 30 வரை 6,698 விழிப்புணர்வு நிகழ்ச்சிதிட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

- பாதுகாப்பான புலம்பெயர்வு
- சமூக மீள்ஒருங்கிணைப்பு நிகழ்ச்சித்திட்டம்
- சுய வேலைவாய்ப்பு திறன்கள் மற்றும் தொழில் வழிகாட்டுதல்களை விருத்திசெய்தல்
- சிறுவர் பாதுகாப்பு
- போதைப்பொருள் தடுப்பு
- பாலின அடிப்படையிலான வன்முறையைத் தடுப்பது குறித்த விழிப்புணர்வு
- மனித கடத்தலுக்கு ஆளாகாமல் இருப்பது பற்றிய விழிப்புணர்வு

- **புலம்பெயர் தொழிலாளர் சங்கங்களை நிறுவுதல்**

புலம்பெயர்ந்த தொழிலாளர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள், நாடு திரும்பும் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் மற்றும் வெளிநாட்டு வேலைகளை மேற்கொள்ள விரும்புவோரை ஒன்றிணைப்பதன் மூலம் அவர்களின் அறிவு, திறன்கள், மனப்பான்மைகளை மேம்படுத்துவதன் மூலம் அவர்களை சமூகத்தில் வலுவூட்டுதல் மற்றும் சுறுசுறுப்பான உறுப்பினர்களாக சமூகமயமாக்கும் நோக்கத்துடன் புலம்பெயர்ந்த தொழிலாளர் சங்கங்களை உருவாக்குவது அபிவிருத்தி அலுவலர்களின் ஈடுபாட்டுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கமைவாக நாடளாவியரீதியில் 2850 புலம்பெயர் தொழிலாளர் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதேபோன்று பிராந்திய மற்றும் மாவட்ட மட்டத்திலான புலம்பெயர் தொழிலாளர் சங்கங்களை தாபிப்பது ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், கேகாலை மாவட்ட புலம்பெயர் தொழிலாளர் சங்கமும் தாபிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளது.

- **வெளிநாட்டு வேலைவாய்ப்பை நிறைவுசெய்து இலங்கைக்கு திரும்பிய மக்களின் பொருளாதார மற்றும் சமூக வலுவூட்டல்**

மாவட்ட மற்றும் பிரதேச மட்டத்தில் இந்த வேலைத்திட்டத்தின் கீழ் சுயதொழில் அல்லது ஏனைய வருமானத்தை உருவாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு எதிர்பார்க்கின்ற ஆட்களை இனங்காணும் பணி மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ள அபிவிருத்தி அலுவலரால் (வெளிநாட்டு வேலைவாய்ப்பு) மேற்கொள்ளப்பட்டதுடன், 1,026 பயனாளிகளின் தகவல்கள் இந்த அமைச்சினால் பெறப்பட்டுள்ளன. தகவல்களின்படி, உபகரணங்கள் தேவைப்படுகின்ற 274 பயனாளிகளின் தகவல்கள், சுயதொழிலுக்கான உபகரணங்களை வழங்குவதற்காக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

- **புலம்பெயர் தொழிலாளர் குடும்பங்களில் பாடசாலைப் படிப்பை நிறைவு செய்த பிள்ளைகளுக்கு தொழில்நுட்ப அல்லது தொழிற்பயிற்சிகளை வழங்குவதற்கான உதவி**

புலம்பெயர் தொழிலாளர் குடும்பங்களில் பாடசாலைப் படிப்பை முடித்துவிட்டு, உள்நாட்டு / வெளிநாட்டு வேலையில் சேரும் நம்பிக்கையில் தொழில்நுட்ப அல்லது தொழிற்பயிற்சி பெற விரும்பும் பிள்ளைகளுக்கு ஆதரவளிப்பதற்காக பிரதேச செயலக மட்டத்தில் தரவுகளும் தகவல்களும் சேகரிக்கப்பட்டன.இதன்படி, 10 மாவட்டங்களில் (கம்பஹா, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மட்டக்களப்பு, குருணாகல், புத்தளம், பொலனறுவை, பதுளை, மொனராகலை மற்றும் கேகாலை) உள்ள 119 பிரதேச செயலகங்களைச் சேர்ந்த 956 சிறுவர்கள் தொடர்பான தகவல்கள் பெறப்பட்டு, கல்வி அமைச்சின் கீழுள்ள தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு சிறுவர்களை ஒருங்கிணைக்குமாறு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.



புகைப்படம் 2.5 - இலங்கையில் வேலையாளர் புலம்பெயர்வு பற்றிய ஆராய்ச்சி சஞ்சிகையின் அங்குரார்ப்பணம்

- **அபிவிருத்தி அலுவலர்களின் கடமைகளை மேற்பார்வை செய்வதற்கான முன்னேற்ற மீளாய்வு மற்றும் விசேட முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள்**

2023 செப்டெம்பர் 30 இலுள்ளவாறு, மத்திய, சப்ரகமுவ, வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களில் தொடர்ச்சியான சிறப்பு முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. கௌரவ தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணாயக்கார அவர்களின் வழிகாட்டலின் கீழ் கௌரவ வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சரின் தலைமையில் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் அலுவலர்களின் பங்களிப்புடன் நடாத்தப்படும் இந்த கூட்டங்கள் இந்த அமைச்சின் அபிவிருத்தி அலுவலர்களினால் மாவட்ட மற்றும் பிரதேச மட்டங்களில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை மேற்பார்வையிடுவதை நோக்கமாகக் கொண்டுள்ளன. இந்த கூட்டங்களின் நோக்கம் புலம்பெயர்ந்த சமூகத்திற்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பை ஊக்குவிப்பதாகும். வடக்கு மற்றும் தென் மாகாணங்களுக்கான கூட்டங்கள் 2023 ஆம் ஆண்டு முழுவதும் இடம்பெறவுள்ளன.

மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களுடன் இணைக்கப்பட்ட அபிவிருத்தி அலுவலர்களின் முன்னேற்றத்தை கண்காணிப்பதற்காக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பிரிவு இணையவழி ஊடாக 13 கூட்டங்களை நடாத்தியுள்ளதுடன், அபிவிருத்தி அலுவலர்கள், காலாண்டு அடிப்படையில் மாவட்ட மட்டத்தில் 56 முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை நடாத்தியுள்ளதுடன், இதற்காக 238,720.00 ரூபா செலவிடப்பட்டுள்ளது.

- **வெளிநாட்டு வேலைவாய்ப்பை ஊக்குவிப்பதற்காக மாகாண சபைகளின் உதவியைப் பெறுதல்.**

கௌரவ தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சரின் தலைமையில் மாகாண ஆளுநர்கள், மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள் மற்றும் மாகாண சபைகளின் செயலாளர்கள் ஆகியோரின் பங்குபற்றுதலுடன், கௌரவ வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாட்டு இராஜாங்க அமைச்சரின் பங்குபற்றுதலுடன் அமைச்சு வளாகத்தில் 2023.01.30 ஆம் திகதி கூட்டமொன்று இடம்பெற்றிருந்தது. ஒவ்வொரு மாகாண சபையினதும் தொழில் பயிற்சித் திறனை இனங்கண்டு அதன் மூலம் வெளிநாட்டு வேலைவாய்ப்பை மேம்படுத்துவதில் அதிக உற்பத்தித்திறனை அடைய முடிந்திருந்தது.

இக்கலந்துரையாடலுக்கு இணையாக ஹோட்டல் மற்றும் விருந்தோம்பல் சேவைகள், தொழிற்பயிற்சி மற்றும் விவசாயம் ஆகிய மூன்று துறைகள் தொடர்பில் கௌரவ வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் தலைமையில் கலந்துரையாடல்கள் இடம்பெற்றிருந்தன. இந்த மூன்று துறைகளின் ஊடாக வெளிநாட்டு வேலைவாய்ப்பை ஊக்குவிப்பதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டது. இதன்படி, தேசிய தொழில் தகைமை (NVQ) நிலைகள் 05 மற்றும் 06 இல் சித்தியடைந்து, பராமரிப்பாளர் சேவைக்கு அதிக தேவையுள்ள விவசாய டிப்புளோமா அலுவலர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- மத்திய மாகாண சபையினால் வழங்கப்பட்ட தேசிய தொழில் தகைமை (NVQ) சான்றிதழைக் கொண்ட 31 இளைஞர்கள் நேர்காணல் செய்யப்பட்டு அனுமதிப்பத்திரம் பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையங்களின் பங்களிப்புடன் வெளிநாட்டு வேலைகளுக்கு தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

- விவசாயத் திணைக்களத்தின் தொழில் மற்றும் பயிற்சி நிலையத்தினால் வழங்கப்பட்ட விவசாய உற்பத்தி தொழில்நுட்பத்தில் உயர் தேசிய டிப்புளோமா மற்றும் தேசிய டிப்புளோமா ஆகியவற்றில் சித்தியடைந்த 1147 டிப்புளோமா பெற்றவர்களின் பட்டியல் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்த பட்டியலின்படி, அவ்வப்போது நேர்காணல் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

- தோன்றுகின்ற தேவைக்கேற்ப பதுளை மற்றும் காலி பயிற்சி நிலையங்களில் விருந்தோம்பல் சேவைகள் துறையில் பயிற்சி பெற்ற பணியாளர்களுக்கு பயிற்சியளிப்பதற்கு வசதியாக இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகம் மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் ஆகியவற்றுக்கு இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்படவுள்ளது.

- பணியகத்தின் தகவல் தொழில்நுட்பப் பிரிவு, மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் (TVEC) பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்ற பயிலுநர்களின் புதுப்பித்த தகவல்களைப் பெறுவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. இதன் மூலம் அனுமதிபெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையங்களுக்கான தொழிற்பயிற்சியில் பயிலுநர்களின் இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு இயலச்செய்கின்றது.

- "தொழில் சந்தை" திட்டங்களை செயற்படுத்துதல்

அட்டவணை 2.1 "தொழில் சந்தை" நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்

| மாகாணம் | நிகழ்ச்சித்திட்ட திகதி | நிகழ்ச்சித்திட்டம் மற்றும் இடம் |
|---|---|---|
| மேல் | 06.06.2023 | "Light to Gloom"<br>தொழில் சந்தை 2023<br>பத்தரமுல்லை "தியத்த உயான" வளாகம் |
| வடமேல் | 31.03.2023 | "NG" தொழில் சந்தை<br>வடமேல் மாகாண சபைக் கட்டடத் தொகுதி |
| ஊவா | 31.03.2023–02.04.2023 | "Boom ஊவா தொழில் சந்தை 2023"<br>சேனாநாயக்க விளையாட்டு அரங்கம், பதுளை |
| | 28.04.2023 | "Boom$^2$ ஊவா தொழில் சந்தை 2023"<br>ஊவா மாகாண நூலக சேவை சபை கேட்போர் கூடம் |

- **வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறை அலுவலர்களின் இயலுமையை கட்டியெழுப்புதல்**

2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் முதல் 2023 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 30 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறை அலுவலர்களின் இயலுமை விருத்திக்காக இரண்டு உள்ளூர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதனடிப்படையில் 34 அபிவிருத்தி அலுவலர்களுக்கும் முகாமைத்துவ சேவை அலுவலர்களுக்கும் தமிழ் மொழி கற்கைநெறியொன்று நடத்தப்பட்டதுடன், 52 அபிவிருத்தி அலுவலர்கள் மற்றும் முகாமைத்துவ சேவை அலுவலர்களின் பங்களிப்புடன் அடிப்படை அலுவலக முறைமைகள் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் நடத்தப்பட்டு, இதற்காக 142,190.00 ரூபா செலவிடப் பட்டுள்ளது.

## 2.7.2 இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் (SLBFE) மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள திட்டங்கள்

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகமானது, புலம்பெயர் வேலையாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களைப் பாதுகாப்பதற்காகவும், வலுவளிப்பதற்காகவும், வெளிநாட்டு வேலைவாய்ப்புச் செயன்முறையின் மூன்று நிலைகளிலும், அதாவது புலம்பெயர்விற்கு முன்னைய நிலை (முடிவுகளை எடுப்பது, புலம்பெயர்விற்கு முன்னைய பயிற்சி மற்றும் புறப்பாடு),தொழில் நிலை (வேலையில் ஈடுபட்டுள்ள வேலையாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களை உள்ளடக்கியது) மற்றும் திரும்புதல், மீண்டும் ஒருங்கிணைத்தல் (மறு ஒருங்கிணைப்பு, அங்கீகாரம் மற்றும் பாராட்டினை உள்ளடக்கியது) ஆகிய மூன்று நிலைகளிலும் தனது பணிப்பாணையை நடைமுறைப்படுத்துகின்றது. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம், அதன் தொழிற்பாட்டு செயன்முறை ஊடாக இந்த குறிக்கோள்களை அடைவதற்கு முயற்சிக்கின்றது.

### I. நலன்புரிச் செயற்பாடுகள்

அட்டவணை 2.2 புலம்பெயர் வேலையாளர்களுக்காக நடைமுறைப்படுத்தப்பட்ட நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்கள்- இ.வெ.வே.ப.

<table>
<tr><th></th><th colspan="2">விபரம்</th><th>எண்ணிக்கை</th><th>தொகை (ரூ.மில்.)</th></tr>
<tr><td>01</td><td colspan="2">புலம்பெயர் வேலையாளர்களுக்கு காப்புறுதி தவணைக் கட்டணக் கொடுப்பனவு</td><td>139,160</td><td>323.819</td></tr>
<tr><td>02</td><td colspan="2">புலம்பெயர் வேலையாளர்களுக்கு காப்புறுதி நட்டஈட்டுக் கொடுப்பனவு (திரும்ப அழைத்து வருவதற்கான செலவுகள், மருத்துவ செலவுகள் மற்றும் இறப்புகளுக்கான நட்டஈடு உள்ளடங்கலானது)</td><td>560</td><td>89.512</td></tr>
<tr><td rowspan="3">03</td><td rowspan="3">மத்திய கிழக்கு பிராந்தியத்தில் வீட்டுத் துறையில் பணிபுரியும் பெண் வேலை யாளர்களுக்கான தொழில் வழங்குநரின் காப்புறுதித் திட்டத்தை அமுல்படுத் துதல் (இந்த காப்புறுதி இழப்பீட்டுத் திட்டம் 2023 யூலை முதல் நடைமுறையிலுள்ளது)</td><td>வெளிநாட்டு தொழில் வழங்குநர்கள் காப்புறுதித் திட்டத்தின் கீழ் உள்ளடக்கப்படும் பணியாளர்களின் எண்ணிக்கை</td><td>20,123</td><td></td></tr>
<tr><td>காப்புறுதி உரிமை கோரல்களுக்கு விண்ணப்பித்த பணியாளர்களின் எண்ணிக்கை</td><td>18</td><td></td></tr>
<tr><td>செலுத்தப்பட்ட காப்புறுதி உரிமை கோரல்களின் தொகை</td><td>8</td><td>0.737</td></tr>
</table>

| | | | | |
|---|---|---|---|---|
| 04 | தேவைப்படும் புலம்பெயர் வேலையாளர்களுக்கு உணவு, போக்குவரத்து, தங்குமிடம் மற்றும் மருத்துவ சிகிச்சையை வழங்குதல் | | | 4,745 |
| 05 | வெளிநாட்டு தூதரகங்களின் தலையீட்டால் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளான புலம்பெயர் வேலையாளர்களை திருப்பியனுப்புதல் | • பணியாளர் நலன்புரி நிதியம்<br>• காப்புறுதி மூலம்.<br>• ஏனைய மூலங்கள் (அரச சார்பற்ற நிறுவனங்கள்) | 14<br>93<br>1,103 | 3.3 |
| | பணியாளர் நலன்புரி நிதியத்தின் கீழ் நிவாரணம் வழங்குதல் | | 1,123 | 95.01 |
| 07 | சுயதொழில் ஆரம்பிப்பதற்கு / செம்மைப்படுத்துவதற்கு தேவையான உபகரணங்கள் / பொருட்களை வெலையாளர்களுக்கு வழங்குதல் | | 47 | 2.321 |
| 08 | புலம்பெயர் வேலையாளர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு மருத்துவ சிகிச்சைக்கான உதவி | | 16 | 1.086 |
| 09 | புலம்பெயர் வேலையாளர்களின் பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்குதல் | | 939 | 8.861 |
| 10 | புலம்பெயர்ந்த வேலையாளர்களின் தேவைப்படுகின்ற பிள்ளைகளுக்கு தேவையான உதவிகளை வழங்குதல் | | 3 | 0.675 |
| 11 | வெளிநாடுகளில் இறந்த புலம்பெயர் வேலையாளர்கள் சார்பாக நிவாரணம் வழங்குதல் | பணியாளர் நலன்புரி நிதியத்தினூடாக உடல்களை நாட்டிற்குக் கொண்டுவருவதற்கு உதவுதல் | 4 | 1.73 |
| | | இறுதிச்சடங்கு செயற்பாடுகளுக்கான செலவுகளை ஏற்றுக்கொள்ளுதல் | 175 | 7.0 |
| 13 | புலம்பெயர் வேலையாளர்களுக்கு ஓய்வூதியக் கொடுப்பனவு (இந்த ஓய்வூதியத் திட்டம் 2022 செப்ரெம்பர் 22 ஆம் திகதி அரம்பிக்கப்பட்டது. | ஓய்வூதிய பங்களிப்பைப் பெறுவதற்காக விண்ணப்பித்த புலம்பெயர் வேலையாளர்களின் எண்ணிக்கை | 18,320 | |
| | | ஓய்வூதியம் பெறுவதற்குத் தகுதியான புலம்பெயர் வேலையாளர்களின் எண்ணிக்கை | 21 | |



புகைப்படம் 2.6 - புலம்பெயர் வேலையாளர்களின் பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில் வழங்குதல்

## II. புலம்பெயர் வேலையாளர்களின் பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில் வழங்குதல்

அட்டவணை 2.3 - புலம்பெயர் வேலையாளர்களின் பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில் வழங்குதல்- இ.வெ.வே.ப

| | விபரம் | அனுகூலங்களைப் பெற்றுள்ள மாணவர்களின் எண்ணிக்கை | செலவினம் (ரூ.மில்.) |
|---|---|---|---|
| 01 | தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் | 305 | 6.1 |
| 02 | க.பொ.த (சா.த) சித்தியடைந்த மாணவர்கள் | 719 | 17.975 |
| 03 | க.பொ.த (உ.த) சித்தியடைந்த மாணவர்கள் | 278 | 9.73 |
| | **மொத்தம்** | **1,302** | **33.805** |

## III. புலம்பெயர் வெலையாளர்களின் திறன்கள் மற்றும் தேரச்சிகளை மேம்படுத்துவதற்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏனைய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

அட்டவணை 2.4 - பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்- இ.வெ.வே.ப

| | விபரம் | நடத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | பங்குபற்றிய வர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | வீட்டுத் துறையின் வீட்டு பராமரிப்பு உதவியாளர் - மத்திய கிழக்கு (தேசியதொழில் தகைமை நிலை III) | 229 | 5,663 |
| 02 | கிழக்கு ஆசிய மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கான வீட்டுத் துறையின் வீட்டு பராமரிப்பு உதவியாளர் பயிற்சி தேசிய தொழில் தகைமை நிலை III) | 31 | 795 |
| 03 | பராமரிப்பாளர் பயிற்சி (தேசிய தொழில் தகைமை நிலை III) | 55 | 1,916 |

| | | | |
|---|---|---|---|
| 04 | அனுபவம்வாய்ந்த வீட்டு பராமரிப்பு உதவியாளர் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் (IFE) | 35 | 533 |
| 05 | வீட்டு வேலை அல்லாதவற்றுக்கு செல்கின்ற வேலை யாளர்களுக்கான பயிற்சி | 1,492 | 41,283 |
| 06 | குடிபெயர்வுக்கு முன்னரான பயிற்சி - தென் கொரியா | 51 | 1,919 |
| 07 | குடிபெயர்வுக்கு முன்னரான பயிற்சி - யப்பான் தொழில் நுட்ப அகப் பயிற்சி கற்கைநெறி (TITP) | 15 | 115 |
| 08 | சிறப்பு மொழிப் பயிற்சி (யப்பான் மொழி) | 19 | 453 |
| 09 | விசேட மொழிப் பயிற்சி (ஆங்கிலம்) | 17 | 504 |



புகைப்படம் 2.7 - சவூதி அரேபிய உயர்ஸ்தானிகருடனான சந்திப்பு

## 2.8 பொருளாதார அபிவிருத்திக்காக கைத்தொழில் அமைதியை உறுதிசெய்தல்

**தொழில் திணைக்களத்தின் தொலைநோக்கு**, சர்வதேச ரீதியில் போட்டியிடும் பொருளாதாரத்திற் கான நீடித்த கைத்தொழில் அமைதியைக்கொண்ட நாடொன்றாக இருப்பதால், கைத்தொழில் அமைதியைப் பேணுவது இத்திணைக்களத்தின் அடிப்படை மற்றும் மிகவும் முக்கியமான பணியாகும்.

இந்த நோக்கத்திற்காக, தொழில் வழங்குனர்களுக்கும் பணியாளர்களுக்கும் இடையிலான உரையாடலைப் பேணுதல், பணியிடங்களை ஆய்வு செய்தல், சட்டரீதியான உரிமைகள் மறுக்கப்படுவது தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்தல், கைத்தொழில் தகராறுகளைத் தீர்த்தல், பணியிடங்கள் விபத்துக்கள் அற்றவை என்பதை உறுதி செய்தல் மற்றும் வேலையாளர்களின் தொழில் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சட்ட நடவடிக்கைகளை உருவாக்குதல் போன்ற பல முக்கிய பணிகளை இத்துறை நிறைவேற்றுகின்றது.

### 2.8.1 தொழில் வழங்குநர்கள் மற்றும் பணியாளர்கள் ஆகிய இரு தரப்பினருக்கும் இடையில் உரையாடலைப் பேணுதல்

நாடளாவியரீதியில் பரவியுள்ள பகுதியளவிலான அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களின் உற்பத்தித்திறன் மற்றும் வினைத்திறனை மேம்படுத்துவதற்காக, தொழில் திணைக்களம் இரு தரப்பினருக்கும், அதாவது அந்தத் துறைகளின் தொழில்தருநர்கள் மற்றும் பணியாளர்களுக்கும், அரச துறை நிறுவனங்களின் அலுவலர்களுக்கும், தமது கடமைகளை நிறைவேற்றுவதில் தொழில் சட்டங்கள் குறித்து விழிப்புடன் இருக்க வேண்டியவர்களுக்கும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து நடத்தியிருந்தது.

அட்டவணை 2.5 தொழில் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்

| **நிகழ்ச்சித்திட்டத்தின் தன்மை** | **நிகழ்ச்சிதிட்டத்தின் பெயர்** | **நடத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை** | **பங்குபற்றியவர்களின் / பயனாளிகளின் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| சமூக உரையாடலை ஊக்குவித்தல் | மனித வள அபிவிருத்தி பிரிவினால் நடாத்தப்படும் சமூக கலந்துரையாடல் ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் | 271 | 17,410 |
| | மாவட்ட மற்றும் உபதொழில் அலுவலகங்களினால் நடாத்தப்படும் சமூக கலந்துரையாடல் ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் | 112 | 3611 |
| | மாவட்ட ஆலோசனைக் குழு நிகழ்ச்சித்திட்டங்கள் | 55 | 1346 |
| | வலய சமூக தள நிகழ்ச்சிதிட்டங்கள் (சூம் தொழில்நுட்பம் மூலம்) | 32 | சூம் மூலம் நடத்தப்பட்டது |
| தொழில்சார் பாதுகாப்பை மேம்படுத்துல் | தொழில்சார் பாதுகாப்புதொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் | 102 | 3349 |
| சேவைக்கான பெண்கள் மற்றும் இளைஞர் நியமனம் | தொழில்தருநர்கள் மற்றும் பணியாளர்களுக்கான இணையவழி பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 65 | 1982 |
| | தொழில்தருநர்கள் மற்றும் பணியாளர்களுக்கான களப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் | 375 | 2747 |
| பெண்கள் மற்றும் இளைஞர்களின் தொழில் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் சிறுவர் தொழிலை இல்லதொழித்தல். | தனியார் துறை பணியாளர் களுக்காக பெண்கள் மற்றும் சிறுவர்கள் தொடர் பான தொழில் சட்டங்கள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் | 28 | 840 |
| | சிறுவர் தொழிலற்ற வலயங்களை உருவாக்குவதற்கு அமைவாக, இலங்கையில் சிறுவர் தொழிலை இல்லதொழி க்கின்ற கருத்திட்டத்தின் கீழ் 2023 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள், | 09 | 1350 |
| **மொத்தம்** | | **1049** | **32,635** |

**2.8.2 தொழில் பரிசோதனைகளை நடத்துதல்**

2023.01.01 இலிருந்து 2023.09.30 வரை தொழில் திணைக்கள அலுவலர்களால் நடத்தப்பட்ட பரிசோதனைகளின் விபரங்கள், வேலைத்தளத்தில் வேலையாளர்களது நியதிச்சட்ட உரிமைகளைப் பாதுகாப்பதற்காக விதிக்கப்பட்டுள்ள விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகள் பின்பற்றப்படுகின்றனவா என்பதை பரிசோதிப்பதற்கும், தொழில் தருநர்களுக்கும் பணியாளர்களுக்கும் இடையே குறைகளை நிவர்த்தி செய்வதனுடனும், சுமூகமான உறவை ஏற்படுத்துவதற்கும் வழிவகுக்கும் வகையில் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதனுடனும் இணங்குபவை பின்வருமாறு.





விளக்கப்படம் 2.2 - தொழில் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட தொழில் பரிசோதனைகள்

2023 ஆம் ஆண்டின் முதல் மூன்று காலாண்டுகளில், சமூக கலந்துரையாடலை மேம்படுத்துவதற்காக நிறுவன அளவிலான நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ், எட்டு நிறுவனங்களின் தொழில்வழங்குநர்களுக்கும் பணியாளர்களுக்கும் இடையிலான அணுகுமுறையிலுள்ள குறைபாடுகள், தொழில்துறை பிணக்கு மற்றும் சாத்தியமான வேலை நிறுத்தங்களுக்கு வழிவகுக்கும். இதனடிப்படையில், இழக்கப்படக்கூடிய 1,325 மனித நாட்களை உற்பத்தி செயன்முறைக்கு மீண்டும் பங்களிப்பதன் மூலம் தேசிய பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிக்க முடியும்.

**2.8.3 நியதிச்சட்ட உரிமைகளை மீறுதல் தொடர்பான முறைப்பாடுகளைத் தீர்த்தல் மற்றும் கைத்தொழில் பிணக்குகளைத் தீர்த்தல்.**


பணியாளர்கள் அல்லது தொழிற்சங்கங்களால் சட்டரீதியான உரிமைகள் மீறப்படுவது மற்றும் கைத்தொழில் பிணக்குகள் தொடர்பான முறைப்பாடுகள் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்திற்கும், மாவட்ட மற்றும் உப அலுவலகங்களுக்கும் அனுப்பப்பட்டிருந்தன. அதேபோன்று, முறைப்பாடு அல்லது நிறுவனரீதியான விசாரணைகளில் திருப்தியடையாத ஒருவரால் முறையான விசாரணையை நடத்துமாறு தொழில் ஆணையாளர் அதிபதியிடம் விடுக்கப்பட்ட கோரிக்கைகள் தேவைக்கேற்ப மீளாய்வு செய்யப்பட்டிருந்தன.

**2019 ஆம் ஆண்டு முதல் 30.06.2023 வரை, அரசியலமைப்பு உரிமை மீறல்கள் குறித்த புகார்களின் ரசீது மற்றும் தீர்வு**




**விளக்கப்படம் 2-3** - 2019 முதல் 30.06.2023 வரையிலான அரசியலமைப்பு உரிமைகள் மீறல் மீதான புகார்களின் ரசீதுகள் மற்றும் தீர்வுகள்

**2019 ஆம் ஆண்டு முதல் 30.06.2023 வரையிலான தொழில் தகராறு புகார்களின் ரசீது மற்றும் தீர்வு**




**வரைபடம் 2.4** - 2019 முதல் 30.06.2023 வரையிலான தொழில் தகராறு புகார்களின் ரசீது மற்றும் தீர்வு

### 2.8.4 பணிப் பகிஷ்கரிப்புகளை தீர்ப்பதற்கான தலையீடுகள்

பணிப் பகிஷ்கரிப்பு நடவடிக்கைக்கு வழிவகுக்கும் சூழ்நிலை காணப்பட்டால், நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கு திணைக்கள அலுவலர்கள் நடவடிக்கை எடுப்பதுடன், பணிப் பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்பட்டால், பிரச்சினையைத் தீர்ப்பதற்குத் தேவையான தலையீடுகள் மேற்கொள்ளப்

படுகின்றன. 2023.01.01 முதல் 2023.09.30 வரை பதிவான பணிப் பகிஷ்கரிப்புகளின் விபரம் பின்வருமாறு:

அட்டவணை 2.6 - வேலை நிறுத்தங்கள் பற்றிய அறிக்கையிடப்பட்ட தரவுகள் – தொழில் திணைக்களம்

| துறை | அறிக்கையிடப்பட்ட வேலை நிறுத்தங்களின் எண்ணிக்கை | பங்குபற்றிய பணியாளர்களின் எண்ணிக்கை | இழக்கப்பட்ட உழைப்பு நாட்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| பெருந்தோட்டம் | 04 | 842 | 1797 |
| கட்டுமாணம் | - | - | - |
| உற்பத்தி | 02 | 101 | 4662 |
| சுரங்க அகழ்வு மற்றும் அகழ்வு | - | - | - |
| தங்குமிடமும் உணவு வழங்கலும் | - | - | - |
| பகுதியளவிலான அரசாங்கம் | - | - | - |
| ஏனைய சேவைகள் | 01 | 70 | 70 |
| **மொத்தம்** | **07** | **1013** | **2329** |

### 2.8.5 கூட்டு உடன்படிக்கைகளுக்காக தொழில் வழங்குநர் மற்றும் பணியாளர் இருவரையும் இணங்க வைத்தல்

கூட்டு உடன்படிக்கைகளில் கைச்சாத்திடுவதன் மூலம், தொழில் சட்டங்களால் பணியாளர்களுக்கு உரித்தளிக்கப்பட்டுள்ளதிலும் பாரக்க அதிக சிறப்புரிமைகளை வழங்கப்படுகின்றன என்பதுடன், தொழில் வழங்குநர்கள் தமது பணியாளர்களிடமிருந்து அதிக உற்பத்தி சேவைக்கான நிலைமைகளில் நுழைவதற்கும் ஏதுவாகின்றது.

இத்தகைய கூட்டு உடன்படிக்கைகளுக்கு தொழில் வழங்குநர்களும் பணியாளர்களும் அணுகுவதை சமூக கலந்துரையாடல் ஊக்குவிக்கின்றது. 2023.01.01 முதல் 2023.09.30 வரை அரச[ தழில் வெளியிட்டுள்ள 26 கூட்டு ஒப்பந்தங்கள் உட்பட 2023.09.30 இலுள்ளவாறு நடைமுறையிலுள்ள கூட்டு ஒப்பந்தங்களின் எண்ணிக்கை 220 ஆகும்.

### 2.8.6 நடுத்தீர்ப்புகளை நடத்துதல்

தொழில் அலுவலகங்களின் தலையீட்டால் அல்லது திணைக்களத்தின் கைத்தொழில் உறவுகள் பிரிவின் நேரடி தலையீட்டினால் தீர்க்க முடியாத பிணக்குகள், தொழில் நீதிமன்றமொன்றில் நடுத்தீர்ப்புக்கு பரிந்துரைக்கப்படுவதுடன், 2023.01.01 இலிருந்து 2023.09.30 வரை நடுத்தீர்ப்புக்காக 51 பிணக்குகள் உள்ளடங்கலாக 228 பிணக்குகள் 2023 ஆம் ஆண்டில் தீர்க்கப்பட்டிருந்தது. 2023 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டில் 127 பிணக்குகள் விசாரிக்கப்பட்டுள்ளதுடன், 93 தீர்ப்புகள் வழங்கப்பட்டுள்ளதுடன், 36 இற்கு தீர்ப்புகள் வழங்கப்படவுள்ளன. இதன்படி, 2023.09.30 இலுள்வாறு 101 பிணக்குகள் நிலுவையிலுள்ளன.


### 2.8.7 தொழிற்சங்கங்களின் பதிவு

அனைத்து தொழிற்சங்கங்களும் தொழில் திணைக்களத்தின் தொழிற்சங்க பதிவாளரிடம் பதிவு செய்வது கட்டாயமானதாகும். இதன்படி, 2023.01.01 இலிருந்து 2023.09.30 வரை திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட மொத்த தொழிற்சங்கங்களின் எண்ணிக்கை 83 ஆகும். 2023 ஆம் ஆண்டில் 52 தொழிற் சங்கங்கள் இல்லாதொழிக்கப்பட்டிருந்தன.

## 2.9 தொழில் நியமங்களைப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்தல்


தனியார் துறையால் பணிக்கமர்த்தப்பட்ட வேலையாளர்களின் நலன்புரி மற்றும் பணிப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக கொள்கைகள், நியமங்கள் மற்றும் பணி நிபந்தனைகளை வகுத்தமைத்து, இற்றைப்படுத்துதல் மற்றும் சட்டப் பயனுறுதியை வழங்குதல் ஆகியவை திணைக்களத்தின் முதன்மை யான செயன்முறையாகும். இதன்படி, 2023.01.01 இலிருந்து 2023.09.30 வரை விடயப்பரப்பு தொடர்பில் பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

### 2.9.1 05 நாள் வேலை வாரத்திற்கு அனுமதி வழங்குதல்





விளக்கப்படம் 2-3. - 05 நாள் வேலை வாரத்திற்கு அனுமதி வழங்குதல்

### 2.9.2 கூட்டு ஒப்பந்தங்களின் சட்டசெல்லுபடியாந் தன்மையைப் பரிசீலித்தல்





வரைபடம் 2.4 – கூட்டு உடன்படிக்கைகளின் சட்டபூர்வ செல்லுபடிந்தன்மையை ஆராய்தல்

## 2.9.3 சம்பளச் சபைகள் கட்டளைச்சட்டம் மற்றும் கடைகள் மற்றும் அலுவலக பணியாளர் சட்டம் ஆகியவற்றின் கீழ் தண்டப்பணங்களை உருவாக்குவதற்காக பெறப்பட்ட கோரிக்கைகளுக்கு அங்கீகாரம் வழங்குதல்




**வரைபடம்** 2.5 - சம்பள சபை கட்டளைச் சட்டம் மற்றும் கடை மற்றும் அலுவலக பணியாளர் சட்டத்தின் கீழ் சம்பளக் குறைப்புக்கான கோரிக்கைகளுக்கு அங்கீகாரம் வழங்குதல்

## 2.9.4 சட்டவாக்கங்கள் பற்றி மக்களாலும் பல்வேறு நிறுவகங்களாலும் மேற்கொள்ள விசாரணை களுக்கு விளக்கங்கள் மற்றும் உரைபெயர்ப்புகளை வழங்குதல்




**வரைபடம்** 2. 6 கட்டளைகள் தொடர்பாக தொழில் வழங்குனர்கள் மற்றும் பணியாளர்களால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கான விளக்கங்களையும் உரைபெயர்புகளையும் சமர்ப்பித்தல்.

## 2.10 பணியாளரின் தொழில்சார் பாதுகாப்பிற்கான சீரிய பணிச் சூழலை உறுதி செய்தல்

மின்சாரம், வெப்பம், காற்றழுத்தம், அதிக ஒளி அல்லது ஒலி காரணமாக தொழிற்சாலைகளில் பணியாற்றும் வேலையாளர்களுக்கு உடல் காயங்கள் மற்றும் மரணம் கூட ஏற்படும் அபாயம் காணப்படுவதுடன், இத்தகைய விபத்துகளைக் குறைப்பது திணைக்களத்தின் முதன்மையான பொறுப்பு களிலொன்றாகும். இலங்கையின் தொழிற்சாலைகளில் பணிபுரியும் வேலையாளர்களின் தொழில்சார் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் நலன்புரி தொடர்பான பிரதான சட்டம், 1942 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டமும், அதன் கீழ் நிறைவேற்றப்பட்ட ஒழுங்குவிதிகளும் ஆகும்.

விபத்து அற்ற பணிச்சூழலை உறுதி செய்வதற்காக தொழில் திணைக்களம் பிரதானமாக பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது.

விளக்கப்படம் 2.7 பாதுகாப்பான வேலைச்சூழலை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளில் முன்னேற்றம்

<table>
<tr><th colspan="2">2023.01.01 முதல் 2023.09.30 வரை நடத்தப்பட்ட செயற்பாடுகள்</th></tr>
<tr><td>
</td><td>2023.01.01 முதல் 2023.09.3 வரை தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் புதிய ஒழுங்குவிதிகளின் கீழ் பதியப்பட்ட தொழிற்சாலைகளின் எண்ணிக்கை = 955</td></tr>
<tr><td>
</td><td>பரிசோதிக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்ட வரைபடங்களின் எண்ணிக்கை =213</td></tr>
<tr><td></td><td>பரிசோதிக்கப்பட்ட தொழிற்சாலைகளின் எண்ணிக்கை பற்றிய விபரங்கள்
<table>
<tr><th>தொழிலின் தன்மை</th><th>பரிசோதிக்கப்பட்ட தொழிற்சாலைகளின் எண்ணிக்கை</th></tr>
<tr><td>வலுவினைப் பயன்படுத்துதல்</td><td>2,213</td></tr>
<tr><td>வலு பயன்படுத்தப்படாமை</td><td>23</td></tr>
<tr><td>நிருமாண</td><td>10</td></tr>
<tr><td>ஏனையவை</td><td>98</td></tr>
<tr><td>மொத்தம்</td><td>2,344</td></tr>
</table></td></tr>
<tr><td></td><td>அறிக்கையிடப்பட்ட மரணத்தை ஏற்படுத்தும் விபத்துக்களின் எண்ணிக்கை = 46<br>அறிக்கையிடப்பட்ட மரணத்தை ஏற்படுத்தாத விபத்துக்கள் = 1,603</td></tr>
<tr><td></td><td>வெளி அலுவலர்களால் பரிசோதிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்ட அதிக ஆபத்துள்ள இயந்திர பரிசோதனை அறிக்கைகள் =9610</td></tr>
</table>

**ளரின் தொழில்சார் பாதுகாப்பை அதிகரிப்பதற்காக முறைசார் பாதுகாப்பு குழுக்களை அமைத்தல்**

பாதுகாப்பு குழுக்களை அமைப்பதன் முக்கிய நோக்கங்கள், தொழிற்சாலைகளில் பாதுகாப்பு குறித்த சுய கணக்காய்வை மேற்கொள்வதும், பாதுகாப்பு கலாசாரத்திற்கு வழிவகுப்பதுமாகும். இதன்படி, 2023.01.01 முதல் 2023.09.30 வரையிலான காலகட்டத்தில் அனைத்து தொழில் துறைகளையும் உள்ளடக்கி 288 பாதுகாப்பு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

## 2.11 பணியாளரின் தொழில்சார் ஆரோக்கியத்தை உறுதி செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்

வேலைத்தளங்களின் சுகாதாரப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக, வேலைத்தளத்தில் உடல்நலப் பிரச்சினைகள் அல்லது விபத்துகள் ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்பதை அறிவியல் முறைகளைப் பயன்படுத்தி மதிப்பீடு செய்வதும், அத்தகைய விபத்துகளைத் தடுப்பதற்கு எடுக்கக்கூடிய நடவடிக்கைகள்

குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் தொழிலாளர் துறையின் பொறுப்பாகும். இதன்படி, பின்வரும் செயற்பாடுகள் 2023.01.01 ஆம் திகதி முதல் 2023.09.30 ஆம் திகதி வரை மேற்கொள்ளப்பட்டிருந்தன.

| | |
|---|---|
|  | சூழல் அளவீடுகளின் எண்ணிக்கை = 293 |
| | பௌதீக பரிசோதனைகளின் =1620 |
| | தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார ஆய்வு களின் எண்ணிக்கை =372 |

08 நிறுவனங்களில் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்குத் தேவையான தலையீடுகள் எடுக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் 2,287 பணியாளர்களின் தொழில் பாதுகாப்பும், சுகாதாரமும் பாதுகாக்கப்பட்டது.

இதேபோன்று, பனலுவ, ஹோமாகம மற்றும் இரத்மலானை கைத்தொழில் வலயங்களில் தொழில்சார் சுகாதார மேம்பாட்டு கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அந்த கருத்திட்டத்தின் கீழ், பனாலுவ, ஹோமாகம மற்றும் இரத்மலானை கைத்தொழில் வலயங்களிலுள்ள தொழிற்சாலைகளில் ஆரம்ப கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. 2023.09.30 இலுள்ளவாறு, பனாலுவ மற்றும் இரத்மலானை கைத்தொழில் வலயங்களிலுள்ளவாறு அனைத்து தொழிற்சாலைகளிலும், ஹோமாகம கைத்தொழில் வலயத்தில் உள்ள சுமார் 75% தொழிற்சாலைகளிலும் சுற்றாடல் அளவீடுகள் மற்றும் சுகாதார கணக்காய்வுகள் மற்றும் தொழில்சார் சுகாதார விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

## 2.12 பணிக்கமர்த்தப்பட்டுள்ள பெண்கள் மற்றும் இளைஞர்களின் தொழில்சார் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் சிறுவர் தொழிலை இல்லாதொழித்தல்

தொழில்வாய்ப்பில் பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், அத்தகைய சட்டங்களை உரிய நேரத்தில் மீளாய்வு செய்து தேவையான திருத்தங்களை பரிந்துரைப்பதன் மூலம் நாட்டிற்கு பயனுள்ள பெண் தொழிலாளர் பங்களிப்பை வழங்குவதற்கும், இலங்கையிலிருந்து சிறுவர் தொழிலை இல்லாதுசெய்வதற்கும் தொழில் திணைக்களம் தொழில் சட்டங்களை அமுல்படுத்துகின்றது. இதன்படி, 2023.01.01 முதல் 2023.09.30 வரை பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

### 2.12.1 சிறுவர் தொழில் பற்றிய முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணை நடத்துதல்


2023.01.01 இலுள்ள மீதி=70 + பெற்ற முறைப்பாடுகள்= 69 − தீர்வுகள் = 63 = 2023.09.30 இலுள்ள மீதி= 76



சிறுவர் தொழில் காணப்படுவது பற்றி வெளிப்படுத்திய 12 முறைப்பாடுகளில் 06 வழக்குகளுக்கு சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன், எஞ்சியுள்ள 06 வழக்குகளுக்கு எடுக்கப்பட்டு கொண்டிருக்கின்றது.


**விளக்கப்படம் 2.8 -** சிறுவர் தொழில் பற்றிய முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகள்

### 2.12.2 இரவில் பெண்களைப் பணிக்கமர்த்துவதற்கு ஏற்புடையதான சேவை நிபந்தனைகளை மீறுவது தொடர்பான முறைப்பாடுகளை விசாரித்தல்




**விளக்கப்படம் 2.9** - இரவில் பெண்களைப் பணிக்கமர்த்துவதுதொடர்பான நிபந்தனைகளை மீறுவது பற்றிய முறைப்பாடுகளை விசாரித்தல்

### 2.12.3 இரவில் பெண்களைப் பணிக்கமர்த்துவதற்கான அனுமதியை வழங்குதல்




**விளக்கப்படம் 2.10 -** இரவில் பெண்களைப் பணிக்கமர்த்துவதற்காக அனுமதி வழங்குதல்

### 2.12.4 இலங்கையில் சிறுவர் தொழிலை இல்லாதொழிக்கின்ற கருத்திட்டத்தின் கீழ் சிறுவர் தொழில் அற்ற வலயங்களை உருவாக்குவது தொடர்பாக 2023 ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றிய தகவல்கள்

10 மாவட்டங்களில் (காலி, கம்பஹா, புத்தளம், மாத்தறை, பதுளை, மொனராகலை, நுவரெலியா, கண்டி, களுத்துறை மற்றும் திருகோணமலை) சிறுவர் தொழிலால் பாதிக்கப்படக்கூடிய பிரதேசத்தை இனங்கண்டு, 2023 ஆம் ஆண்டுக்கான வேலைத்திட்டங்கள் அப்பிரதேசத்திலுள்ள பாடசாலை அல்லது சிறுவர் சங்கமொன்றில் ஆரம்பிக்கப்பட்டு, 2023.09.30 ஆம் திகதி திருகோணமலை மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டிருந்தன. ஒவ்வொரு நிகழ்ச்சித் திட்டத்திலும், குறைந்த வருமானத்தால் மற்றும் சிறுவர் தொழிலால் பாதிக்கப்படக்கூடிய குடும்பங்களைச் சேர்ந்த 25 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு, 225 மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்தன.

### 2.12.5 முக்கிய நினைவேந்தல் தினங்களை அனுஷ்டித்தல்

2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 8 ஆம் திகதி சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு தொழில் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட மகளிர் தினக் கொண்டாட்டங்கள் 2023 மார்ச் 16 ஆம் திகதி கௌரவ தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணாயக்கார தலைமையில் இடம்பெற்றது "உழைப்பின் மூலம் உலகம் உயரும்" (எக ஷிரமயின் நகின லோகய) என்ற தொனிப்பொருளில் கீழ் "வேலைக்குச் செல்லும் பெண்களின் அழகியல்கலை திறமைகள்" ("வெடலிய சித்தம்") என்று நடைபெற்ற சுவரொட்டி வடிவமைப்புப் போட்டியில் வெற்றி பெற்றவர் களுக்கு நினைவுச்சின்னங்கள், பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்தன. இந்த 2023 ஆம் ஆண்டு போட்டி வேலைக்குச் செல்லும் பெண்களின் அழகியல்கலை திறமைகளை அங்கீகரித்து. பெண்களை பாதிக்கின்ற சட்டங்களை உள்ளடக்கியிருந்தது,

பெண்களின் வேலைத்தலப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் ஒழுங்குவிதிகளைப் புரிந்துகொள்வதற்கு அணுகக்கூடிய மூலமாக வடிவமைக்கப்பட்ட "பெண் வேலையாளர்களைப் பாதுகாக்கும் தொழில் சட்டம்" என்ற கையேடு, தொழில் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ வலைத்தளத்தில் முறைப்படி வெளியிடப்பட்டது.

- **உலக சிறுவர் தொழிலுக்கு எதிரான தினம்- 2023**

தொழில் திணைக்களத்தினால் யூன் 12 ஆம் திகதி "உலக சிறுவர் தொழிலுக்கு எதிரான தினத்தை" முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் கௌரவ தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணாயக்கார அவர்களின் ஏற்பாட்டில் 2023.06.15 ஆம் திகதி காலி நெலுவ மண்டலபுர ஜூனியர் பாடசாலையில் நடைபெற்றிருந்தது. "மாலிபன் நிடாஹஸே ரந்தருவோ நிதியம்" மூலம் சிறுவர் தொழிலின் அபாயத்திலுள்ள பொருளாதார சிரமங்களைக் கொண்ட ஆறு குடும்பங்களுக்கு சுயதொழில் செய்வதற்குத் தேவையான உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்தன.



புகைப்படம் 2.9 உலக சிறுவர் தொழிலுக்கு எதிரான தினத்திற்கு இணையாக குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்குதல்


## 2.13 பணியாளர்களின் சமூகப் பாதுகாப்பு

1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்ட ஊழியர் சேமலாப நிதியம், பகுதியளவிலான அரசாங்க மற்றும் தனியார் துறைகளில் உள்ள நாட்டின் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பான ஓய்வுகாலத்தை உறுதிப்படுத்தும் பிரதான நோக்கத்துடன் தொழில் திணைக்களத்தால் நிருவகிக்கப்படுகின்றது. இந்த நிதியமானது, தொழில் திணைக்களத்தினால் நிருவகிக்கப்படுவதுடன், மத்திய வங்கியின் நாணயச் சபை அதன் நிதி முகாமைத்துவத்திற்குப் பொறுப்பாகவுள்ளது. அவ்வப்போது திருத்தங்களுக்கு உட்படுத்தப்பட்ட இச்சட்டத்தின் கீழ் ஆற்றப்பட வேண்டிய பணிகள் பின்வருமாறு.

| | |
|---|---|
| ✓ | ஊழியர் சேமலாப நிதியத்தில் நிறுவனங்களைப் பதிவுசெய்தல் |
| ✓ | ஊழியர் சேமலாப நிதியத்தில் உறுப்பினர்களைப் பதிவுசெய்தல் |
| ✓ | உதவுதொகைகளைச் செலுத்தத் தவறிய தொழில்தருநர்களிடமிருந்து உதவு தொகைகளை அறவிடுதல் |
| ✓ | பணியாளர்களுக்கான அனுகூலக் செலுத்துவதற்கான கொடுப்பனவுக் கட்டளைகளை வழங்குதல் |
| ✓ | அங்கீகரிக்கப்பட்ட சேமலாப நிதியத்தைக் கண்காணித்தல். |

### 2.13.1 ஊழியர் சேமலாப நிதிய அனுகூலக் கொடுப்பனவு

2023.01.01 முதல் 2023.09.30 வரை ஊழியர் சேமலாப நிதியத்தின் அனுகூலங்கள் கொடுப்பனவு தொடர்பான தீர்மானக் கடிதங்கள் எண்ணிக்கை 137,577 என்பதுடன், உரிய தகவல்கள் பின்வரும் வரைபடத்தில் காட்டப்படுகின்றது.




விளக்கப்படம் 2.5 - ஊழியர் சேமலாப நிதியத்தன் நன்மைகளை வழங்குதல்

### 2.13.2 உதவுதொகைகளை செலுத்தத் தவறிய தொழில்வழங்குநர்களுக்கு அறிவித்தல்களை அனுப்புதல்

நிர்ணயித்தவாறு உதவுதொகைகளைச் செலுத்தத் தவறிய தொழில்வழங்குநர்களுக்கு முதல் அறிவித்தல்கள் மற்றும் சிவப்பு அறிவித்தல்கள் வழங்கப்படுவதுடன், அத்தகைய அறிவிப்புகளுக்கு முறையாக பதிலளிக்கப்படவில்லை என்றால், சட்டரீதியான நடவடிக்கை எடுக்கவும், மேலதிக அறவீட்டுடன் உதவுதொகைகளை அறவிடுவதற்கும் அவற்றை கணக்கில் வைப்பிலிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

விளக்கப்படம் 2.11 - அறிவித்தல்களை அனுப்புவதிலுள்ள முன்னேற்றம் - ஊழியர் சேமலாப நிதியம்

| அனுப்பப்பட்ட முதலாவது அறிவித்தல்களின் எண்ணிக்கை | முதலாவது அறிவித்தல் மூலம் அறவிடப்பட்ட தொகை | அனுப்பப்பட்ட சிவப்பு அறிவித்தல்களின் எண்ணிக்கை | சிவப்பு அறிவித்தல் மூலம் அறவிடப்பட்ட தொகை |
|---|---|---|---|
| 6277   | **735** மில்லியன்   | **3598**   | **513** மில்லியன்   |

குறிப்பு - சட்டப்பிரிவின் நேரடி தலையீட்டின் கீழ் நடத்தப்படும் நீதி நடவடிக்கைகள் பற்றிய தகவல்கள் மேலே உள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

## 2.14 ஊழியர்சேமலாப நிதியத்தை மேம்படுத்துவதற்கும், சேவைநாடுநர்களுக்கு வழங்குகின்ற சேவைகளின் பயனுறுதியை செம்மைப்படுத்துவதற்கும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

- புதிய ஏ.பி.எச் பதிவு மென்பொருளின் உருவாக்கம் இறுதி கட்டத்தில் உள்ளது. இதன்படி, புதிய மென்பொருள் மாவட்ட தொழிலாளர் அலுவலகங்களில் நிறுவப்பட்டு, ஏ.பி.எச் பதிவு மிகவும் வினைத்திறனுடன் மேற்கொள்ளப்படுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

- ஊழியர் சேமலாப நிதியத்திற்கு தொழில்தருநர்களைப் பதிவு செய்வதற்கு ஏதுவாக மென்பொருள் முறைமைகளின் மேம்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன, (பெயர்கள் மற்றும் பி அட்டை எண்கள்), இறுதி நன்மைகளுக்காக 'கே' விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க உதவுதல், அனுகூல விண்ணப்பங்களின் தற்போதைய நிலையை சரிபார்த்தல், 'ஏ.எச்' பதிவு மற்றும் பல்வேறு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி தொடர்பான சேவைகளை மின்-சேவைகளாக வழங்குதல்.

- டிஜிட்டல் மாதிரியை அறிமுகப்படுத்தியதன் மூலம் பயனாளிகள் ஊ.சே.நிதியத்தின் 30% பெறு வதற்கான அடிப்படை தகுதியை இணையவழி மூலம் சரிபார்க்க உதவியிருந்தது. 2023 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட இந்த முறைமை இதுவரை 1,865 உறுப்பினர்களின் அடிப்படைத் தகுதிகளைப் பரிசோதித்து, நன்மைகளைப் பெறுவதற்குத் தேவையான அடுத்த படிகளுக்கு அவர்களை வழிநடத்தியுள்ளது.

- ஊழியர் சேமலாப நிதியம் தொடர்பான சேவைகளும் தேவைக்கேற்ப பிராந்திய அலுவலகங்களுக்கு பரவலாக்கப்பட்டிருந்தன. இதன்படி, மன்னார், யட்டியந்தோட்டை மற்றும் வரக்காபொல உபதொழில் அலுவலகங்களில் ஊ.சே.நி நன்மை கொடுப்பனவு கிளைகளை தாபிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

- ஊழியர் சேமலாப நிதியம் தொடர்பாக உறுப்பினர்களுக்கு சரியான விழிப்புணர்வு இல்லாத காரணத்தினால் எழும் பிரச்சினைகளைத் தணிப்பதற்கும், உறுப்பினர்களுக்கும் பணியாளர்களுக்கும் அறிவூட்டுவதற்கும் இலங்கை மத்திய வங்கியின் உதவியுடன் இரண்டு நடமாடும் சேவை நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டிருந்தன. ஊழியர் சேமலாப நிதியம் பதிவு செய்யப்பட்ட உறுப்பினரின் பெயரில் உள்ள பிழைகளை சரிசெய்தல், 'ஏ.பி.எச்' பதிவு செய்தல், ஊழியர் சேமலாப நிதிய உறுப்பினர் கணக்கு இருப்பை அறிந்து கொள்ள இந்த நடமாடும் சேவைகள் வழங்கப்பட்டிருந்தன.

அட்டவணை 2.8 நடமாடும் சேவை நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல்- ஊசே.நி

| நடமாடும் சேவை நிகழ்ச்சித்திட்டத்தின் திகதி | இடம் | குறிக்கோள் | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 2023 மே 17 , 18, | மாத்தளை | ஏ.பி.எச் பதிவு, பி அட்டை / இலங்கை மத்திய வங்கியின் பெயர் / ஏ.பி.எச் பதிவு இலக்கம் மற்றும் ஏனைய விடயங்களை மீளாய்வு செய்தல் | 552 |
| 2023 ஜூலை 15 ,16, | யாழ்ப்பாணம் | | 325 |


## 2.15 வேலையாளர்களின் தொழில்சார் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சட்டப் பாதுகாப்பு

திணைக்களம் வேலையாளர்களின் தொழில்சார் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக பல சட்டங்களைச் செயற்படுத்துகின்றது. இதன்படி, தொழில் திணைக்களத்தால் நடைமுறைப்படுத்தப்படவேண்டிய அத்தகைய சட்டவாக்க ஏற்பாடுகள் ஒத்த முறையில் நிறைவேற்றப்படுவதை உறுதிசெய்வதற்காக, அத்தகைய மீறல்களில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு திணைக்களத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டு, அதன் மூலம் வேலையாளர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றன.

இதன்படி, 2023.01.01 முதல் 2023.09.30 வரை திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட சட்ட நடவடிக்கைகளின் முன்னேற்றம் கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.

அட்டவணை 2.7 நீதித்துறை நடவடிக்கைகளின் செயலாற்றுகை-தொழில் திணைக்களம்

| நீதிமன்றம் | 2023 ஆம் ஆண்டுக்கு முன் கொணரப் பட்ட மீதி | 01.01.2023 30.09.2023 காலப்பகுதியில் குறித்தொதுக்கப்பட்ட வழக்குகளின் | 2023.09.30 இல் நிறைவுசெய்யப்பட்ட வழக்குகள் |
|---|---|---|---|
| **மேல் நீதிமன்றம்** | **114** | **10** | **0** |
| **மேன்முறையீட்டு நீதிமன்றம்** | **324** | **73** | **5** |
| **உயர் நீதிமன்றம்** | **86** | **41** | **29** |
| **வர்த்தக உயர் நீதிமன்றங்கள்** | **217** | **9** | **2** |




வரைபடம் 2.6 - நீதவான் நீதிமன்றங்களால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் மற்றும் மூடப்பட்ட வழக்குகள் - தொழில் திணைக்களம்

## 2.16 தொழில் திணைக்களத்தின் தகவல் பரப்புகைச் செயற்பாடுகள்

### 2.16.1 வெளியீடுகள்

தொழிலாளர் துறை பற்றிய விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்துவதற்கு பின்வரும் வெளியீடுகள் வெளியிடப்பட்டுள்ளன.

- **"கத்திகாவத்தை" சஞ்சிகை**

  நிறுவனங்களில் தொழில் வழங்குனர்களுக்கும் பணியாளர்களுக்கும் இடையில் நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்குத் தேவையான அறிவை வழங்குவதன் மூலம் பிணக்குகளைக் குறைப்பதில் பங்களிப்பதே "கத்திகாவத்தை" சஞ்சிகையின் நோக்கமாகும். அதன்படி, "கத்திகாவத்தை" சஞ்சிகையின் தொகுதி 2023 ஏப்ரல் 22 ஆம் திகதி வெளியிடப்பட்டது.

- **கைத்தொழில் பாதுகாப்பு தொடர்பான கையேடுகள்**

  2022 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் 05 கையேடுகள் அச்சிடும் வேலை 2023 ஆம் ஆண்டில் அதே துறையிலுள்ள நிபுணர்களின் வழிகாட்டுதலின் அடிப்படையில் அபாயகரமான தொழிற்சாலைகளைக் கொண்ட 07 பகுதிகளை இனங்காணும் வேலை ஆரம்பிக்கப்பட்டு, அவற்றில் 03 கையேடுகள் 2023.09.30 ஆம் திகதிக்குள் நிறைவுசெய்யப்பட்டு அச்சிடப்பட்டிருந்தன.

- **பணிபுரிந்த மணித்தியாலங்களின் எண்ணிக்கை மற்றும் தொழில் செலவு பற்றிய கணக்கெடுப்பு**

  இந்த கணக்கெடுப்பின் மூலம், நாட்டின் அபிவிருத்தி உத்திகளை வகுப்பதற்குத் தேவையான தரவுகள், தொழில் செலவு, பணி புரிந்த மணித்தியாலங்களின் எண்ணிக்கை மற்றும் பொது வான வருவாய் ஆகியவற்றின் அடிப்படையில் பெறப்படுகின்றன. இது, அரச மற்றும் தனியார் துறைகளில் முடிவெடுப்பதனையும், திட்டங்களை உருவாக்குவதனையும் இயலச்செய்து, தொழில் வழங்குநர்கள் மற்றும் பணியாளர்களின் முன்னேற்றத்திற்காக வடிவமைக்கப்பட்ட திட்டங்களுக்குத் தேவையான தகவல்களை வழங்கச் செய்கின்றது. 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான வேலை நேரம் மற்றும் தொழிலாளர் செலவுகள் குறித்த கணக்கெடுப்பின் அறிக்கைகள் 2023 ஆம் ஆண்டின் கடைசி காலாண்டில் நிறைவடையும் என்று எதிர்பார்க் கப்படுகின்றது என்பதுடன், இந்த அறிக்கைகளுக்கு தேவையான தரவுகள் சேகரிக்கப்பட்டு 2023.09.30 ஆம் திகதிக்குள் அனுப்பப்பட்டிருந்தன.

- **தொழில் புள்ளிவிபர வருடாந்த அறிக்கை 2023**

  தொழிலாளர் துறையுடன் தொடர்புபட்ட கொள்கை திட்டங்களை வகுத்தமைத்து செயற்படுத்து வதற்கும், தரவு பயனாளிகளுக்குத் தேவையான தரவுகளை வழங்குவதற்கும் தேவையான தரவுகளை வெளியிடும் நோக்கத்துடன், இதன்படி, 2023 ஆம் ஆண்டிற்கான அறிக்கை 2023 ஆம் ஆண்டின் கடைசி காலாண்டில் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுவதுடன், இந்த அறிக்கைகளுக்கு தேவையான தரவு சேகரிப்பு 2023.09.30 ஆம் திகதிக்குள் மேற் கொள்ளப்பட்டிருந்தது.

### 2.16.2 திணைக்களத்தின் உத்தியோகபூர்வ சமூக ஊடகச் செயற்பாடுகள்

பொதுமக்களுக்கு இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களை வழங்குவதற்காக, திணைக்களம் உத்தியோக பூர்வ யூடியூப் அலைவரிசை, முகப் புத்தகப் பக்கம் மற்றும் ருவீட்டர் கணக்கு ஆகியவற்றைப் பராமரித்து வருகின்றது.

| | |
|---|---|
| **YouTube Channel** | **Subscribers: 1.23K**<br>**Number of Videos included: 127** |
| **Facebook Page** | **Followers: 3.3K** |
| **Twitter** | **Followers: 87** |

### 2.16.3 திணைக்களத்தின் இணையத்தளம்

மக்கள் சேவைகளை, பல்வேறு சட்டங்களை, கட்டளைகளை மற்றும் தொழில்வழங்குநர்களால் கவனம் செலுத்த வேண்டிய சம்பளச் சபைகளின் முடிபுகள் ஆகியவற்றைப் பெறுவதற்குத் தேவையான மாதிரி

விண்ணப்பங்கள் மற்றும் படிவங்கள் போன்ற அத்தகைய ஆவணங்கள் புதிய சேவைகள், ஊடக வெளியீடுகள், விலைமனுக்களான கோரல் போன்றவை திணைக்களத்தின் www.labourdept.gov.lk என்ற இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளதுடன், தேவையானபோது, தகவல்கள் இணையத்தில் பதிவேற்றம் செய்யப்படுகின்றபோது கிரமமாக இற்றைப்படுத்தப்படுகின்றது. திணைக்களத்திற்கான புதிய இணையத்தளத்தை வடிவமைப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், திணைக்களத்தால் வளங்கப்பட்ட இ-சேவைகளை அணுகுவதற்கான இயலுமையை இது வழங்குகின்றது.

### 2.16.4 தொழில் திணைக்களத்தின் நூலகம்

தொழில் துறைடன் தொடர்புடைய ஒழுங்குவிதிகள், புத்தகங்கள் மற்றும் வெளியீடுகள் தொடர்பாக தொழில் திணைக்களம் இலங்கையின் பிரதான நூலகத்தை பராமரித்து வருகின்றது. தொழில் திணைக்களம், தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள ஏனைய நிறுவனங்களின் பணியாளர்களும், வெளி வாசகர்களும் தொழில் சட்டத் துறை தொடர்பான அனைத்து கட்டளைச் சட்டங்கள், புத்தகங்கள், வெளியீடுகள் போன்றவற்றைப் பார்வையிடுவதற்கு இது உதவும்.

2023 ஆம் ஆண்டில் நூலக வசதிகளில் மேலும் விருத்தி மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், இதன்படி, தேசிய நூலகம் மற்றும் ஆவணப்படுத்தல் சபையின் வழிகாட்டலின் கீழ் நூலக தரவு முகாமைத்துவ முறைமையை (KOHA மென்பொருள்) உருவாக்குவதற்கு தேவையான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 2.17 தொழில் திணைக்களத்தின் மனிதவள அபிவிருத்தி

தொழில் திணைக்களத்தின் பணியாட்டொகுதியின் தேவைகளை இனங்காணுதல், தேவைக்கேற்ப ஆட்சேர்ப்பு செய்தல், அலுவலர்களின் பதவியுயர்வு, வினைத்திறன் பரீட்சைகளை நடத்துதல், செயலாற்றுகை மதிப்பீடு, சம்பள உயர்வு வழங்குதல், இடமாற்றங்கள், அலுவலர்களின் ஓய்வு, அலுவலர்களின் விடுமுறை நடவடிக்கைகள் மற்றும் பணியாட்டொகுதியின் ஒழுக்காற்று நடவடிக்கைகள் என்பனவும் 2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

**அட்டவணை 2.9 -** அலுவலர்களை ஆட்சேர்ப்புச்செய்தல்

| அலுவலர்களை ஆட்சேர்ப்புச் செய்தல் | | | | |
|---|---|---|---|---|
| **ஆட்சேர்ப்புச் பரீட்சைகளை நடத்துதல்** | | | | |
| **பதவி** | **நிரப்பப்படவேண்டிய பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை** | **பரீட்சை நடத்துவதற்கு திட்மிடப்பட்ட திகதி** | **பரீட்சை நடத்தப்பட்ட திகதி** | **இதன்படி ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட திகதியும் அலுவலர்களின் எண்ணிக்கையும்** |
| தொழில் திணைக்களத்தின் நிறைவேற்றுத்தர சேவை வகைப்பாட்டின் தரம் III இல் உதவித்தொழில் ஆணையாளர் (திணைக்களம்சார்) | 13 | 2022 யூலை | 2023 சனவரி 28 | 2023.08.31 ஆம் திகதி முறையான நேர்முகப் பரீட்சை நடத்தியதன் பின்னர் உரிய ஆவணங்கள் மேலதிக நடவடிக்கைக்காக பொதுச்சேவை ஆணைக்குழுவுக்கு அனுப்பப்பட்டது |
| தொழில் அலுவலர் - II (மட்டுப்படுத்தப்பட்டது) | 59 | 2023 யூலை | 2023 ஏப்பிரல் 29 | பெறுபேறு வெளியிடப் பட வில்லை |
| **நேர்முகப்பரீட்சை மூலம் பணியாளர்களை ஆட்சேர்ப்புச் செய்தல்** | | | | |

| பதவி | நிரப்பப்பட வேண்டிய பதவி வெற்றிடங்கள் எண்ணிக்கை | ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பணியாளர்கள் | |
|---|---|---|---|
| | | திகதி | பணியாளர்களின் எண்ணிக்கை |
| அலுவலக உதவியாளர்கள் நிலை I (பல விருத்தி பயிலுநர்கள்) | 41 | 2023.06.07 | 30 |
| அலுவலக உதவியாளர்கள் நிலை II (பல விருத்தி பயிலுநர்கள்) | 11 | 2023.09.19 | 8 |

**வினைத்திறன்காண் தடைப் பரீட்சையை நடத்துதல்**

| பதவி | வினைத்திறன்காண் தடைப் பரீட்சையின் பெயர் | பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகைமையான அலுவலர்களின் பணியாளர்களின் எண்ணிக்கை | பரீட்சை நடத்துவதற்கு திட்டமிடப் பட்ட திகதி | பரீட்சை நடத்தப் பட்ட திகதி | பரீட்சை க்கு தோற்றிய தகைமையான அலுவலர்களின் பணியாளர் களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| ஆராய்ச்சி அலுவலர் | ஆராய்ச்சி அலுவலர் பதவிக்கான முதலாவது வினைத்திறன் காண் தடைப் பரீட்சைக்கான உரிய தணைக்களம்சார் ஒழ்ங்குவிதிகள் பற்றிய எழுத்துப் பரீட்சை | 01 | 2023 மார்ச் | 2023 மே 09 | 01 |
| தொழில் அலுவலர் | தொழில் அலுவலர்களின் முதலாவது வினைத்திறன் காண் தடைப் பரீட்சை | 07 | 2022 நவம்பர் | 2023 யூன் 28 | 02 (பெறு பேறு வெளியிடப்பட வில்லை) |
| தொழில் அலுவலர் | தொழில் அலுவலர்களின் இரண்டாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை | 55 | 2022 நவம்பர் | 2023 ஓகஸ்ட் 29 | 38 (பெறு பேறு வெளியிடப்பட வில்லை) |
| அலுவலக உதவியாளர் சேவை - தரம் I | அலுவலக உதவியாளர் சேவையின் மூன்றாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை | 04 | 2023 யூன் | 2023 ஓகஸ்ட் 28 | 03 |
| அலுவலக உதவியாளர் சேவை - தரம் II | அலுவலக உதவியாளர் சேவையின் இரண்டாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை | 03 | 2023 யூன் | 2023 ஓகஸ்ட் 28 | 03 |
| லொறி நடத்துநர்-II | லொறி நடத்துநரின் இரண்டாவது வினைத்திறன் காண் தடைப் பரீட்சை | 01 | 2023 ஓகஸ்ட் | 2023 செப்ரெம்பர் 12 | 01 |

அதேபோன்று, தொழில் திணைக்களத்தின் ஒட்டுமொத்த பணியாட்டொகுதியினரின் பயிற்சித் தேவைகளை இனங்கண்டு உள்ளகப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கமைத்து நடத்தியமை, வெளிநாட்டு நிறுவனங்களினால் நடத்தப்படும் பயிற்சிப் பாடநெறிகளுக்கு அலுவலர்களை வழிநடத்துதல், சேவையின் தேவைக்கேற்ப பட்டப்படிப்பு மற்றும் முதுமாணி பட்டப்படிப்புகளை மேற்கொள்வதற்கு அலுவலர்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்துள்ளதுடன், வெளிநாட்டுப் பயிற்சிக்கான செயற்பாடுகளை ஒருங்கிணைத்துள்ளது.

2023 ஆம் ஆண்டிற்கு உள்நாட்டு பயிற்சித் திட்டங்களுக்காக 6,000,000.00 ரூபா ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2023.09.30 ஆம் திகதிக்குள் செலவினம் 2,297,363.00 ரூபாவாகவும், ஒதுக்கீட்டின் சதவீதமாக செலவு 39% ஆகவும் உள்ளது.

அட்டவணை 2.10 - அலுவலர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டு, நடத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்-தொழில் திணைக்களம்

| அலுவலர்களுக்காக தொழில் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் | | | | |
|---|---|---|---|---|
| இல. | **நிகழ்ச்சித்திட்டத்தின் தன்மை** | | **நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை** | **பங்குபற்றிய அலுவலர்களின் எண்ணிக்கை** |
| 1 | ஆரம்ப பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் | | 03 | 47 |
| 2 | பாடவாரியான பயிற்சித் நிகழ்ச்சித்திட்டங்கள் | பௌதீக நிகழ்ச்சித் திட்டங்கள் | 04 | 463 |
| | | இணையவழி நிகழ்ச்சித்திட்டங்கள் | 07 | சூம் மூலம் நடத்தப்பட்டது |

## 2.18 தொழில் திணைக்களத்தின் உட்கட்டமைப்பு விருத்தி

நாடளாவியரீதியிலுள்ள வாடிக்கையாளர்களுக்கு வினைத்திறன் மிக்க சேவையை வழங்குவதற்காக திணைக்களத்தின் தலைமையகத்திலும் நாடளாவியரீதியில் அமைந்துள்ள பிராந்திய அலுவலகங் களிலும் உட்கட்டமைப்பு அபிவிருத்தியை திணைக்களம் மேற்கொண்டிருந்தது.

இதன்படி பிராந்திய அலுவலகங்களின் தேவைக்கேற்ப சிறியளவிலான பழுதுபார்ப்புகள் மேற்கொள்ளப் பட்டிருந்ததுடன், "மெஹெவர பியெஸ" கட்டிடத்தின் தளங்கள் மற்றும் தொழில் செயலக கட்டிடத்தின் தளங்களில் உள்ளக பழுதுபார்ப்புகளும் மேற்கொள்ளப்பட்டன.

அட்டவணை 2.11 - தொழில் திணைக்களத்தின் உட்கட்டமைப்பு அபிவிருத்தி

| **கருத்திட்டம்** | | **2023.09.30 இலுள்ளவாறான பௌதீக முன்னேற்றம்** |
|---|---|---|
| "மெஹேவர பியெச" கட்டிட தளங்களின் உட்புறத்தை தயார்ப்படுத்தல் | 8,10,11 ஆவது தளங்கள் | 78% |
| | 9,12 ஆவது தளங்கள் | 89% |
| | 13,14 ஆவது தளங்கள் | 100% |
| | 16 ஆவது தளம் | விலைமனு ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. |
| தொழில் செயலக கட்டிடத் தளங்களின் உட்புறத்தை தயார்ப்படுத்தல் | 1 ஆவது தளம் | 93% |
| | 3,4,5,6 ஆவது தளங்கள் | விலைமனு ஆவணங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. |

## 2.19 தொழில் திணைக்களத்தின் செயற்பாடுகளை கண்காணிப்பதன் மூலம் இலக்குகளை நோக்கி வழிநடத்துதல்.

2023 ஆம் ஆண்டிற்கான தொழில் திணைக்களத்தின் வருடாந்த செயல் திட்டம் இலக்குகளை அடைவதில் அனைத்து துறைகள் மற்றும் பிராந்திய தொழில் அலுவலகங்களின் முன்னேற்றம் மற்றும் செயற்பாடுகளை ஆராய்ந்துள்ளது. இதன்படி, ஒவ்வொரு பிரிவின் முன்னேற்றத்திலும், துறைகளில் வேலைகளை மேற்கொள்வதிலும் எழுந்துள்ள நிருவாகப் பிரச்சினைகளுக்கு ஆலோசனைகளையும் தீர்வுகளையும் வழங்குவதற்காக தொழில் ஆணையர்களின் மாதாந்த கூட்டம் ஒவ்வொரு மாதமும் நடத்தப்பட்டது.

மாவட்ட மற்றும் உப தொழில் அலுவலகங்களும் உரிய வருடாந்த இலக்குகளை நோக்கி கண்காணிப்பை மேற்கொண்டிருந்தன. 2023 ஆம் ஆண்டின் முதல் மூன்று காலாண்டுகளில் 29 மாவட்ட மற்றும் உப தொழில் அலுவலகங்களின் செயற்பாடுகள் ஆய்வு செய்யப்பட்டு மேலதிக அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தன.

வலயங்களுக்குப் பொறுப்பான பிரதித் தொழில் ஆணையாளர்கள், அவர்களின் உரிய மாவட்ட மற்றும் உப தொழில் அலுவலகங்களில் 2023 ஆம் ஆண்டின் முதல் மற்றும் இரண்டாம் காலாண்டுகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் பற்றி ஆராய்வதற்கு முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை நடத்தியிருந்தனர்.

## 2.20 வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறையின் நிருவாகம் மற்றும் ஒழுங்குபடுத்தல்

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகமானது, இலங்கையில் வேலையாளர் புலம்பெயர்வுக்கான உயர் ஒழுங்குபடுத்தல் அமைப்பாகும். கௌரவம், பாதுகாப்பு மற்றும் சமத்துவம் போன்ற நிலைமை களின் கீழ் வெளிநாடுகளில் வேலைவாய்ப்பை எதிர்பார்க்கும் இலங்கையர்களின் புலம்பெயர்வை உறுதி செய்யும் வேலையாளர் புலம்பெயர்வு செயன்முறையை ஒழுங்குபடுத்துவதற்கான சட்ட கட்டுக்கோப்பின் கீழ் தாபிக்கப்பட்ட விரிவான விடபே பரப்பைக்கொண்ட நிறுவனம்மொன்றாகும்.

அட்டவணை 2.12. - உரிமம் பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனங்களுக்கு அனுமதிப்பத்திரங்களை வழங்குதல், வெளிநாட்டு வேலைவாய்ப்பு கட்டளைகள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கான பதிவு செய்தல் - இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

| | விபரம் | | 2022 (சனவரி-செப்.) | 2023 (சனவரி-செப்.) |
|---|---|---|---|---|
| 01 | வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனங்களுக்கு அனுமதிப் பத்திரங்களை வழங்குதல் | வழங்கப்பட்ட புதிய அனுமதிப் பத்திரங்களின் எண்ணிக்கை | 67 | 116 |
| | | புதுப்பிக்கப்பட்ட அனுமதிப் பத்திரங்களின் எண்ணிக்கை (வருடாந்த புதுப்பித்தல்) | 967 | 722 |
| 02 | இலங்கையர்களை ஆட்சேர்ப்பு செய்கின்ற வெளிநாடுகளிலுள்ள தொழில் முகவரகங்கள் மற்றும் கம்பனிகளை பதிவுசெய்தல் / புதுப்பித்தல் | பதிவுசெய்யப்பட்ட / அனுமதிப் பத்திரம் புதுப்பிக் கப்பட்ட உபசரிக்கின்ற நாடுகளில் உள்ள தொழில் முகவரகங்கள் / கம்பனிகளின் எண்ணிக்கை | 848 | 1,647 |
| 03 | வெளிநாட்டு தொழில் முகவரகங் களால் சமர்ப்பிக்கப்பட்ட வெளி நாட்டு வேலை வாய்ப்புக் கட்டளைகள் மற்றும் அறிவித்தல்களுக்கு அங்கீகாரம் வழங்குதல் | அங்கீகரிக்கப்பட்ட தொழில் கட்டளைகளின் எண்ணிக்கை | 2,256 | 3,056 |
| | | அங்கீகரிக்கப்பட்ட அறிவித்தல்களின் எண்ணிக்கை | 730 | 943 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | |
| 04 | வெளிநாட்டு வேலைவாய்ப்புக் கான பதிவு | வெளிநாட்டு தொழில் வெற்றிடங் களுக்கு இலங்கையர்களை ஆட் சேர்ப்பு செய்வதற்கு, அவர்களை வெளிநாட்டுக்கு அனுப்புவதற்கு அனுமதிப்பத்திரம் பெற்ற வெளி நாட்டு தொழில் முகவரகங் களுக்கு வழங்கப்பட்டுள்ள அனுமதிகளின் எண்ணிக்கை | 86,513 | 107,466 |
| 05 | | தனியான வழிமுறைகளினூடாக வெளிநாட்டு வேலைக்காக வெளி யேறுவதற்கு பதிவு செய்துள்ள புலம்பெயர் வேலையாளர்களின் எண்ணிக்கை | 74,818 | 72,327 |
| 06 | | தனியான வழிமுறைகள் ஊடாக வெளிநாட்டு வேலை வாய்ப்பிற்கு செல்வதற்காக பதிவைப் புதுப்பித்துள்ள புலம்பெயர் வேலையாளர்களின் எண்ணிக்கை | 62,056 | 39,111 |
| 07 | | தென் கொரியா, யப்பான் மற்றும் இஸ்ரேலில் வேலைவாய்ப்புக்காக இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் மூலம் பதிவு செய்து புலம்பெயர்ந்த வேலை யாளர்களின் எண்ணிக்கை | 3,717 | 5,348 |
| 08 | | வெளிநாடுகளில் தூதரகப் பணி யகங்கள் ஊடாக பதிவு செய்துள்ள புலம்பெயர் வேலையாளர்களின் எண்ணிக்கை | 2,914 | 2,148 |
| | | வெளிநாடுகளில் தூதரகப் பணியகங்கள் ஊடாக பதிவைப் புதுப்பித்துள்ள புலம்பெயர் வேலையாளர் களின் எண்ணிக்கை | 5,026 | 3,250 |

அட்டவணை 2.13 - அனுமதிப்பத்திரம் பெற்ற தொழில் முகவர் நிலையங்கள் / அனுமதிப்பத்திரம் அற்ற ஏனைய தரப்பினர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்தல் - இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

| | **விடயம்** | **2023** (சனவரி-செப்ரெம்பர்) |
|---|---|---|
| 01 | நடத்தப்பட்ட விசாரணைகளின் எண்ணிக்கை | 2,500 |
| 02 | பெறப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 913 |
| 03 | சட்டவிரோத ஆட்சேர்ப்பு தொடர்பில் வெற்றிகரமான சோதனைகளின் எண்ணிக்கை | 11 |
| 04 | சட்டவிரோத ஆட்சேர்ப்பு தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கைதுகளின் எண்ணிக்கை | 44 |
| 05 | சட்டங்களை மீறியதற்காக அனுமதிப்பத்திரம் பெற்ற / அனுமதிப் பத்திரம் பெறாத தரப்பினருக்கு எதிராக நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | 131 |

| | | |
|---|---|---|
| 06 | சட்டங்களை மீறியதற்காக அனுமதிப்பத்திரம் பெற்ற / அனுமதிப் பத்திரம் பெறாத தரப்பினருக்கு எதிராக பதிவு செய்யப்பட்ட வழக்கு களுக்காக நீதிமன்றங்களில் / தொழில் நியாய சபைகளில் ஆஜரான தடவைகளின் எண்ணிக்கை | 3,310 |

அட்டவணை 2.14 - மனித கடத்தலுக்கு எதிரான நடவடிக்கை மற்றும் புலம்பெயர் வேலையாளர்களிடமிருந்து அல்லது அவர்கள் சார்பாக பெறப்பட்ட முறைப்பாடுகளைத் தீர்த்தல் - இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

| விபரம் | | எண்ணிக்கை |
|---|---|---|
| புலம்பெயர் வேலைளர்களிடமிருந்து அல்லது அவர்கள் சார்பாக பெறப்பட்ட முறைப்பாடுகளைத் தீர்த்தல் | பெறப்பட்ட புகார்களின் எண்ணிக்கை | 10,000 |
| | தீர்க்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 6,982 |
| வியாபார பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது தொடர்பில் பெறப்பட்ட முறைப்பாடுகளுக்கான தீர்வு | பெற்றப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 1,686 |
| | தீர்க்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 376 |
| ஆட்கடத்தல் தொடர்பான முறைப்பாடுகள் | பெற்றப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 49 |
| | பெறப்பட்ட முறைப்பாடுகளிலிருந்து குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 40 |



புகைப்படம் 2.10 - தொழிலாளர் புலம்பெயர்வு தொடர்பான ஆராய்ச்சி அறிக்கைகள் உள்ளடங்கலாக சர்வதேச தொழில் தாபத்தினால் தயாரிக்கப்பட்ட பத்திரிகையொன்று அமைச்சரிடம் சமர்ப்பிக்கப்படுதல்.

## 2.21 வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறையின் முன்னேற்றம்

### 2.21.1 இணையவழி தொழில் வங்கி

வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களை எதிர்நோக்கும் மக்களுக்கு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினால் முகாமை செய்யப்படுகின்ற இணையவழி மூலம் தொழில் வங்கியில் பதிவு செய்வதற்கான வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வெளிநாட்டு வேலைவாய்ப்பினை விரும்புவோர் பணியகத்தின் இணையத்தளத்தின் ஊடாகவோ அல்லது தலைமை அலுவலகத்தின் அல்லது மாகாண அலுவலகங்களின் ஊடாகவோ தனிப்பட்ட முறையில் பதிவு செய்யமுடியும். அத்தகைய பதிவு, தொழில் வங்கியில் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்ட திகதியிலிருந்து அதிகபட்சம் இரண்டு ஆண்டுகளுக்கு செல்லுபடியானகும். வெளிநாட்டு பணியாளர்கள் மற்றும் அனுமதி பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனங்கள் வெளிநாட்டு தொழில் வாய்ப்புகளுக்கு பொருத்தமான வேட்பாளர்களைக் கண்டறிவதற்கு தொழில் வங்கி உதவுகின்றன.

அட்டவணை 2.15: வேலை தேடுபவர்களை தொழில் வங்கி மூலம் பதிவு செய்தல்- இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

| **விபரம்** | **2022 (சனவரி-செப்.)** | **2023 (சனவரி-செப்.)** |
|---|---|---|
| பதிவுசெய்யப்பட்ட வேலைவாய்ப்பு ஆர்வலர்களின் எண். | 27,506 | 24,675 |

அட்டவணை 2.16- இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தினால் வேலைவாய்ப்புக்கான ஆட்சேர்ப்பு - இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

| **நாடு** | **விபரம்** | **2022 (சனவரி-செப்.)** | **2023 (சனவரி-செப்.)** |
|---|---|---|---|
| | சாதாரண அனுமதிப்பத்திர முறைமையின் கீழ் புலம்பெயர்ந்த நபர்களின் எண்ணிக்கை | 2,572 | 2,687 |
| தென்கொரியா | தமது பழைய வேலையிடத்திற்கே புலம்பெயர்ந்தவர் களின் எண்ணிக்கை | 612 | 1,079 |
| | விசேட அனுமதிப்பத்திர முறைமையின் கீழ் இடம்பெயர்ந்த நபர்களின் எண்ணிக்கை | 275 | 1,153 |
| யப்பான் | தொழிநுட்ப பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தின் (TTIP) கீழ் வெளியேறிய நபர்களின் எண்ணிக்கை | 123 | 67 |
| இஸ்ரேல் | பராமரிப்பாளர்களாக வெளியேறிய நபர்களின் எண்ணிக்கை | 135 | 362 |

அட்டவணை 2.17- வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல்- இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

| **விபரம்** | **2022 (சனவரி-செப்.)** | **2023 (சனவரி-செப்.)** |
|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| வெளிநாட்டு வேலை தேடுபவர்கள் மற்றும் மக்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் / நடமாடும் சேவைகளை நடத்துதல் | பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை | 35,846 | 13,232 |
| | நடத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | 225 | 260 |

### 2.21.2 சேவையின் தரத்தை உயர்த்துதல்

- **ISO 9001:2015 தர முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துதல்.**

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் தலைமையகத்திற்காக 2012.11.06 ஆம் திகதி ISO 9001:2008 தரச் சான்றிதழ் பெறப்பட்டது.

இதற்கு இணையாக 2012.11.06 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் விமான நிலையம் மற்றும் "சஹானா பியெச" (கட்டுநாயக்கா), 09 மாகாண அலுவலகங்கள், 07 மாவட்ட அலுவலகங்கள் மற்றும் 02 பயிற்சி நிலையங்களால் ISO 9001:2008 தரச்சான்றிதழ் பெறப்பட்டது.

தலைமை அலுவலகம் மற்றும் பிற அலுவலகங்களுக்கு வழங்கப்பட்ட இந்த தரச் சான்றிதழை 2018.04.26 முதல் ISO 9001:2015 ஆக மாற்றுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், இந்த நிலையான சான்றிதழ் 2024.04.25 வரை செல்லுபடியாகின்றது.

## 2.22 தொழில் வழிகாட்டல், தொழில் சந்தை தகவல் மற்றும் அரச வேலைவாய்ப்பு சேவை செயற்பாடுகள் ஆகியவற்றைப் பேணுதல்

மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களமானது, நாட்டில் மனிதவள அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவத்துக்கு பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றது.

### 1. தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள்

நாட்டின் மனித வளங்களின் மொத்த ஆற்றலை நாட்டின் வளர்ச்சிக்கு பயனுறுதிவாய்ந்ததாகவும், வினைத்திறனுடனும் வழிநடத்துகின்ற அதேவேளை, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழில் சந்தையுடன் ஒத்திசைந்து மனித வளத்தை உருவாக்கும் குறிக்கோளுடன், தொழில் வழிகாட்டல் சேவைகள் வழங்கப்படுகின்றன. இந்த தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு, உளவியல் சோதனைகள், திறன் சோதனைகள், எழுத்து மற்றும் செய்முறை சோதனைகள், நேர்காணல்கள், பல்வேறு அவதானிப்பு சோதனைகள் போன்ற சாதனங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இந்த தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள், தனிப்பட்ட ஆலோசனை மற்றும் வழிகாட்டுதல், அடிப்படை விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், பயிற்சிசெயலமர்வுகள் மற்றும் நடைமுறை செயற்பாடுகள் மூலம் தொழில் வழிகாட்டுதல் திட்டங்கள் தனித்தனியாகவும், கூட்டாகவும் மற்றும் குழுக்களாகவும் நடத்தப்படுகின்றன.

அட்டவணை 2.18 - தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம் - மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம்

| | நிகழ்ச்சித்திட்டம் | நடத்தப்பட்ட நிகழ்ச்சித் | பங்குபற்றிய மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|

| | | திட்டங்களின் எண்ணிக்கை | |
|---|---|---|---|
| 1 | தரம் 9 மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதல் | 1152 | 31,705 |
| 2 | சா/த மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதல் | 1,631 | 1996 |
| 3 | உயர் தர மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதல் | 892 | 25,726 |
| | **மொத்தம்** | **3675** | **59,427** |

மேலும், உயர் தர மாணவர் பயிற்சிக்காக 17,822 பரிந்துரைகளும், தனிநபர் தொழில் வழிகாட்டுதலுக்காக 4 4,770 பரிந்துரைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### II வேலை உருவாக்கம், பதவி உயர்வு மற்றும் அரச வேலைவாய்ப்பு சேவைகள் திட்டங்கள்

அட்டவணை 2.19 - வேலை உருவாக்கம், பதவி உயர்வு மற்றும் அரச வேலைவாய்ப்பு சேவைகள் திட்டங்கள்

| | | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | வேலை தேடுபவர்களை பதிவு செய்தல் | 67,585 |
| 2 | வேலை வெற்றிடங்களுக்கான பதிவு | 35,341 |
| 3 | வேலை தேடுபவர்களை வேலைக்கு அனுப்புதல் | 56,831 |
| 4 | வேலை தேடுபவர்களுக்கு வேலை வழங்குதல் | 9,106 |
| 5 | தொழில்முயற்சியாளர்களையும் சுயதொழில் புரிபவர்களையும் உருவாக்குதல் | 2,819 |

| இல. | நிகழ்ச்சித்திட்டங்கள் | முன்மொழியப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | நடைபெறுகின்ற நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | மாவட்ட தொழில் சந்தை | 25 | 17 | 9,973 |
| 2 | மாவட்ட தொழில்சார் வசதிகள் | 25 | 25 | 9,326 |
| 3 | பிரதேச தொழில்கள் | 200 | 163 | 25,236 |

- **தொழில் சந்தை பற்றிய தகவல்கள் மற்றும் ஆராய்ச்சி திட்டங்கள்**

இதன் குறிக்கோள்கள், இலங்கையின் காலத்திற்கேற்ற, அபிவிருத்திசார் தேவைகளை மையமாகக் கொண்ட தொழில் சந்தை தொடர்பான ஆராய்ச்சிகளை, ஆய்வுகளை நடத்துதல், சந்தை வாய்ப்புக்களை அறிமுகப்படுத்துதல் மற்றும் தொழிலாளரின் கேள்வி, வழங்கல் பற்றிய ஆய்வுகளை நடத்துதல் மற்றும் அத்தகைய தகவல்களைப் பரப்புதல் போன்றவையாகும். இவ்வாறு சேகரிக்கப்படும் தகவல்கள் கொள்கையை ஆக்குகின்ற நோக்கத்திற்காக தொழில் சந்தையில் பயனுறுதிவாய்ந்த, வினைத்திறனான தீர்மானங்களை எடுப்பதற்கு அனைத்து அக்கறைதாரர்களும் பயன்படுத்துவதற்கும், கல்வித் துறையில்

திட்டங்களை உருவாக்குபவர்களும், அபிவிருத்தித் திட்டங்களை வகுப்பவர்களும் பயன்படுத்துவதற்கும், எளிதான வடிவத்தில் கிடைக்கப்பெறச் செய்யப்படுகின்றது.

இதன்படி, தொழில் சந்தை தகவல் மற்றும் ஆராய்ச்சி பிரிவினால் நடத்தப்படும் மூளைச்சலவை செயலமர்வுகள் / ஆய்வுகள் கீழே தரப்பட்டுள்ளன.

அ. கள ஆய்வுகள்

- பிளாஸ்டிக் மற்றும் பெபொலித்தீன் மீள்சுழற்சி மூலம் வருமானம் ஈட்டுதல்
- ஆம்பல் மலர் தொடர்பான கண்டுபிடிப்புகளின் சந்தை வாய்ப்பு
- ஏற்றுமதி சந்தைக்காக பனை தொடர்பான உற்பத்திப்பொருட்கள்

ஆ. மூளைச் சலவை செயலமர்வுகள்

- தொழில் சந்தை தகவல் முறைமையின் தேவைப்பாடு
- பொருளாதாரரீதியாக நிலையான ஆயுர்வேத மருத்துவ தோட்டத்தின் மூலம் வேலை வாய்ப்புகளை உருவாக்கும் ஆற்றல்"
- இலங்கை சனத்தொகையில் முதுமையும், அதனுடன் தொடர்புடைய பிரச்சினைகளும்

இ. பின்வரும் நபர் ஒருவர் பற்றிய ஆய்வுகள் மனிதவளம் மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களத்தால் நடத்தப்படுகின்றன.

- பொதுக் கல்வி - கற்கை நிறைவடைந்துள்ளது.
- நாடு திரும்பும் புலம்பெயர் வேலையாளர்களின் வாய்ப்புகள்
- வெளிநாடுகளிலுள்ள அரச வேலைவாய்ப்பு சேவைகள் பற்றிய சமச்சீரான ஆய்வு
- இலங்கையில் மாற்றுத்திறனாளிகளுக்கான தொழில் வாய்ப்பு பற்றிய ஆய்வு
- இலங்கையில் பெண்களின் உழைப்புப் பங்களிப்பின் வீழ்ச்சி பற்றிய ஆய்வு
- ஆடைத் தொழில் வேலைவாய்ப்பு வீழ்ச்சி பற்றிய ஆய்வு
- கட்டுமாணத்துறை வேலைவாய்ப்பு வீழ்ச்சி பற்றிய ஆய்வு

## III. கொள்கை மற்றும் தகவல் தொழில்நுட்ப நிகழ்ச்சித்திட்டங்கள்

அட்டவணை 2.20 - கொள்கை மற்றும் தகவல் தொழில்நுட்ப நிகழ்ச்சித் திட்டங்கள்

| | |
|---|---|
| சர்வதேச தொழில் தாபனத்தால் நிதியளிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் | |
| திணைக்கள அலுவர்களுக்கான திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல். நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை 21 | 627 அலுவலர்கள் |
| கிழக்கு மாகாணத்தில் தொழில் தேடும் மாற்றுத் திறனாளிகளை இனங்காண்பதற்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல். நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை 45 | 903 பயனாளிகள் |
| கிழக்கு மாகாணத்தில் தொழில் தேடும் மாற்றுத் திறனாளிகளுக்கான நேர்முகப் பரீட்சை தயாரிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல். நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை 9 | 193 பயனாளிகள் |
| கிழக்கு மாகாணத்தில் உள்ள வியாபார வாய்ப்புக்களை இனங்கண்டு மாற்றுத் திறனாளிகளுக்கான விழிப்புணர்வு | 160 வர்த்தக அமைப்புகள் |

| | |
|---|---|
| நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல். 160 நிறுவனங்களை இணைப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது | |
| கிழக்கு மாகாணத்தில் மாவட்டரீதியாக தொழில் சந்தைகளை நடத்துதல். நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை 3 | 196 பயனாளிகள் (தொழில்- 44) |

## 2.23 சிறந்த தொழில் துறை உறவுகளுக்காக முத்தரப்பு அக்கறைதாரர்களுக்கிடையில் விழிப்புணர்வினை ஏற்படுத்துதல்

2.23.1 தொழில் சட்டம்,தொழிற்றுறை உறவுகள் மற்றும் மனித வள அபிவிருத்தி பற்றிய அறிவூட்டல்

அதன் குறிக்கோள்களை அடைவதற்கு, தேசிய தொழில் கற்கைகள் நிறுவகமானது, தொழில் சட்டமும், தொழிற்றுறை உறவுகளும், மனித வள முகாமைத்துவம் மற்றும் வேலைத்தல உற்பத்தித்திறன் ஆகிய மூன்று பிரதான பிரிவுகளில் கற்கைநெறிகளை நடத்துகின்றது. இந்நிறுவனம் தற்போது அரச துறை மற்றும் தனியார் துறை சேவை நாடுநர்களுக்கு இந்த கற்கைநெறிகளை மூன்று மொழிகளிலும் தரமான சேவையாக வழங்கி வருகின்றது. இந்த கற்கைநெறிகள் டிப்புளோமா மற்றும் குறுகிய கால கற்கைநெறிகள், சான்றிதழ்கள், பயிற்சிகள் மற்றும் செயலமர்வுகள் ஆகிய வடிவங்களில் வழங்கப்படுகின்றன.

நீண்ட கால பயிற்சித் திட்டங்களின் கீழ் ஆறு டிப்புளோமாக் கற்கைநெறிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த கற்கைநெறிகளின் விபரங்கள் பின்வருமாறு:

**அட்டவணை 2.21 -** டிப்புளோமா நிகழ்ச்சித்திட்டங்கள் - தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம்

| | **டிப்புளோமாவின் பெயர்** | **டிப்புளோமாவின் எண்ணிக்கை** |
|---|---|---|
| 01 | தொழிற்றுறை உறவுகள் மற்றும் தொழில் சட்டம் – சிங்கள மொழிமூலம் | 01 |
| 02 | கைத்தொழில் உறவுகள் மற்றும் தொழிலாளர் சட்டம் – ஆங்கில மொழிமூலம | 01 |
| 03 | மனித வள முகாமைத்துவம் - சிங்கள மொழிமூலம் | 01 |
| 04 | மனித வள முகாமைத்துவம் - தமிழ் மொழிமூலம் | 01 |
| 05 | வியாபார முகாமைத்துவம் - (சிங்களம் / ஆங்கிலம்) | 02 } சிங்கள மொழிமூலம் - 03<br>தமிழ் மொழிமூலம் - 03 |

**அட்டவணை 2.22 -**கற்கைநெறியின் முன்னேற்றம்- தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம்

| இல. | கற்கைநெறியின் பெயர் | நிறுவகம் | பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை | அங்கீகரிக்கப்பட்ட கற்கைநெறிக் கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|

| | | | | |
|---|---|---|---|---|
| 01 | தேயிலைத் தொழிற்சாலைகள் மற்றும் தேயிலைத் தோட்டக் கம்பனிகளில் தொழில் வழங்குனர் பணியாளர் உறவுகளை வலுப்படுத்து வதற்காக தரமான வேலைச் சூழலை உருவாக்குதல் (16.05.2023) | கபே பெருந்தோட்டம், கஹவத்த | 40 | 90,200.00 |
| 02 | தேயிலைத் தொழிற்சாலைகள் மற்றும் தேயிலைத் தோட்டக் கம்பனிகளில் தொழில் வழங்குனர் பணியாளர் உறவுகளை வலுப்படுத்து வதற்காக தரமான வேலைச் சூழலை உருவாக்குதல் (27.05.2023) | பேரிபேல பெருந்தோட்டம், உருபோக்க | 20 | 94,100.00 |
| 03 | தொழில் வழங்குனர் பணியாளர் உறவுகளை வலுப் படுத்துவதற்காக தேயிலைத் தொழிற்சாலைகள் மற்றும் தேயிலைத் தோட்டக் கம்பனிகளில் தரமான வேலைச் சூழலை உருவாக்குதல் (17.08.2023) | தலவாக்கலை பிளாண்டேசன் லிமிடெட் சம்மசேட் | 63 | 101,270.00 |
| 04 | தொழில் வழங்குனர் பணியாளர் உறவுகளை வலுப்படுத்துவதற்காக தேயிலை தொழிற்சாலைகள் மற்றும் தேயிலை பெருந்தோட்ட கம்பனிகளில் தரமான வேலைச் சூழலை உருவாக்குதல் (18.08.2023) | தலவாக்கலை பிளாண்டேசன் லிமிடெட் லொஜி ஸ்ரேட் | 59 | 97,990.00 |
| **மொத்தம்** | | | **182** | **383,560.00** |

அரச, பகுதியளவிலான அரச மற்றும் தனியார் துறை அலுவலர்களின் அறிவு, திறன்கள் மற்றும் மனப்பான்மையை விருத்திசெய்யும் நோக்கில் தொழில் சட்டங்கள் மற்றும் தொழிற்றுறை உறவுகள், மனிதவள முகாமைத்துவம், அலுவலக முகாமைத்துவம்,பெறுகை, உள்ளகக் கணக்காய்வு, ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிகள் ஆகியவற்றை உள்ளடக்கி ஒவ்வொரு பாடப் பிரிவிலும் பத்து நாள் பயிற்சி நடத்தப்படுகின்றது. நடத்தப்பட்ட கற்கை நெறிகளின் மொத்த எண்ணிக்கை 10 ஆகும்.

தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம் ஒரு நாள், இரண்டு நாள் மற்றும் மூன்று நாள் கால குறுகிய கால கற்கைநெறிகளை தொழில் கற்கைகள் நிறுவகத்தின் பயிற்சி நிலையத்திலும், வாடிக்கையாளர் நிறுவனங்களலும், வேண்டுகோளுக்கிணங்க இலக்கு தரப்பினரின் வேலையிடங்களிலும் நடத்து கின்றது. 2023 ஆம் ஆண்டில், நாட்டில் பொருளாதார மந்தநிலை இருந்தபோதிலும், 50 கற்கைநெறிகள் நடத்தப்பட்டு 17.03 மில்லியன் ரூபா வருமானத்தை ஈட்டியுள்ளது. மொத்தம் 1,012 பேர் பங்கேற்றிருந்தனர். வெளிநாட்டு வேலைவாய்ப்பை இலக்காகக் கொண்டு சான்றிதழ் கற்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தற்போது, மூன்று சான்றிதழ் கற்கைகள் நடத்தப்படுகின்றன. ':'பேயரேட்' சர்வதேச அமைப்பின் அலுவலர்களுக்கு தொழிற்றுறை உறவுகள் மற்றும் தொழில் சட்ட அமலாக்கம் பற்றிய மூன்று நாள் பயிற்சி கற்கைநெறியொன்று நடத்தப்படுகின்றது.




புகைப்படம் 2.11 – டிப்புளோமா விருது வழங்கல் விழா- தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம்

### 2.23.2 தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துதல்

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, வேலைத்தளங்களில் தொழில்சார் விபத்துக்களைக் குறைக்கும் குறிக்கோளுடன், தொழில்சார் பாதுகாப்பு அலுவலர்களுக்கு பயிற்சி யளிப்பதற்காக தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான டிப்புளோமா கற்கைநெறிகள், சான்றிதழ் கற்கைநெறிகள் மற்றும் பல கற்கைநெறிகளை நடத்துகின்றது. 2023 செப்ரெம்பர் 30 மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளின் முன்னேற்றம் கீழே அட்டவணைப்படுத்தப்படுகின்றது

அட்டவணை 2.23 தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் குறித்த பயிற்சித் திட்டங்கள்

| | கற்கைநெறி | நடத்தப்பட்ட கற்கைநெறி களின் எண்ணிக்கை | பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை | நிதி முன்னேற்றம் (ரூபா மில்லியன்) |
|---|---|---|---|---|
| 01 | தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய டிப்புளோமா கற்கைநெறி (ஆங்கிலம் மற்றும் சிங்கள மொழிமூலம்) | 2 | 74 | 8.22 |
| 02 | தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய சான்றிதழ் கற்கைநெறி | 3 | 86 | 4.42 |
| 03 | தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய அடித்தள கற்கை நெறி | 1 | 20 | 0.33 |
| 04 | நிறைவேற்று தர அலுவலர் களுக்கான விசேட கற்கைநெறி | 2 | 39 | 1.11 |
| 05 | சுராடோ கம்பஸ் நிறுவகத்தால் நடத்தப்படும் பராமரிப்பு வழங்கு வோர் கற்கைநெறி | 1 | 493 | 3.2 |

| | | | | |
|---|---|---|---|---|
| 06 | சர்வதேச தொழில் தாபனம் மற்றும் “சேவ் பவுண்டேசனின்” நிதி உதவியின் கீழ் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் உறுப்பினர்களுக்கு பராமரிப்பு வழங்குவோர் கற்கைநெறியை நடத்துதல் | 1 | 100 | 0.4 |

மீளாய்வாண்டு காலப்பகுதியில், நிறுவனம் 130 சுற்றுச்சூழல் அளவீடுகளை மேற்கொண்டுள்ளதுடன், 20 களப் பயிற்சிகளையும் நடத்தியுள்ளது. தொழில்புரிபவர்களின் ஆரோக்கியம் பற்றி அறிவதற்காக 800 மருத்துவ பரிசோதனைகள் நடத்தப்பட்டுள்ளன.



புகைப்படம் 2-12 தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார மாநாடு

## 2.24 தொழில்சார் விபத்துக்களுக்கான நட்டஈட்டுக் கொடுப்பனவு

**வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகம்**, தொழிலிலீடுபடுகையில் காயங்களுக்கு உள்ளாகும் வேலையாளர்கள், வேலையின் தன்மை காரணமாக ஏற்படும் நோய்களால் பாதிக்கப்படும் வேலையாளர்கள் மற்றும் தொழில் புரிகின்ற இடங்களில் விபத்துக்களால் இறக்கும் வேலையாளர் களில் தங்கியிருப்பவர்களுக்கு நட்டாடு வழங்குகின்றது. பதிவான விபத்துகளின் அளவு மற்றும் வழங்கப்பட்ட நட்டஈட்டுத் தொகை பற்றிய தகவல்கள் பின்வருமாறு.

அட்டவணை 2.24- நட்டாடு வழங்குவதில் முன்னேற்றம் - வேலையாளர் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகம்

| | செயற்பாடு | முன்னேற்றம் |
|---|---|---|
| 01 | முறையாக அறிவிக்கப்பட்ட விபத்துக்கள் | 330 |
| 02 | பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட கோப்புகளின் எண்ணிக்கை | 1297 |
| 03 | இறுதி செய்யப்பட்ட இழப்பீட்டு விண்ணப்பங்கள் | 246 |
| 04 | பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தங்களின் எண்ணிக்கை | 33 |
| 05 | மரணத்தை ஏற்படுத்தும் விபத்துக்களுக்காக நட்டஈடாக அறவிடப்பட்ட தொகை (ரூ.) | 214,235,568/- |
| 06 | பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தங்களின் பிரகாரம் மரணத்தை ஏற்படுத்தாத விபத்துக்களுக்காக பணியாளர்களுக்கு வழங்கப்படும் நட்டஈட்டுத் தொகை (ரூபா மில்லியன்) | 16,390,99062 |

| | | |
|---|---|---|
| 07 | அபாயகரமான விபத்துக்கள் தொடர்பில் மீட்கப்பட்ட பின்னர் பராயமடைய தங்கியிருப்பவர்களின் சேமிப்புக் கணக்குகளில் வைப்பிலிடப்படும் தொகைகள் (ரூபா) | 35464890/- |
| 08 | பராயமடையாதவர்கள் சார்பாக திறக்கப்பட்ட கணக்குகள் | 71 |
| 09 | 18 வயதை அடைந்தவுடன் மூடப்பட்ட சிறுவர்களின் கணக்குகளின் எண்ணிக்கை | 110 |
| 10 | விடுவிக்கப்பட்ட சிறுவர்களின் கணக்குகளிலிருந்து செலுத்தப்பட்ட தொகை (ரூபா) | 14 275 758 79 |

## 2.25 அரச மற்றும் தனியார் துறைகளின் உற்பத்தித்திறனை ஊக்குவித்தல்

தேசிய உற்பத்தித்திறன் செயலகம் இலங்கையின் அரச மற்றும் தனியார் துறைகளினால் வினைத்திறன்மிக்க, தரமான சேவைகளை வழங்குவதற்கு ஏதுவாக உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துகின்றது. அரச நிறுவனங்கள், கல்வி, சேவைத் துறைகள், சமூக அமைப்புகள் மற்றும் சிறிய, நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்களை உற்பத்தித்திறன் எண்ணக்கருவினூடாக செழுமைப்படுத்துவதற்காக வருடாந்தம் நாடளாவியரீதியில் பல நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்படுவதுடன், ஆசிய உற்பத்தித்திறன் அமைப்பின் (APO) தொடர்ச்சியான ஒத்துழைப்புடன் அறிவை மையமாகக் கொண்ட சமூகத்தை உருவாக்குவதற்குத் தேவையான சூழலை உருவாக்கியுள்ளது.

வாடிக்கையாளர்களால் நிறுவனத்தின் வளாகத்திற்குள் செலவிடப்படும் நேரத்தைக் குறைப்பதற்கான பொருத்தமான பொறிமுறைகளை உருவாக்குவதன் மூலம் நிறுவனத்தின் பயனுறுதி மற்றும் வினைத்திறனை அதிகரிப்பதன் மூலமும், தற்போது மிகவும் திருப்திகரமான, வினைத்திறனான வாடிக்கையாளர் சேவை செயன்முறைகளை வளர்ப்பதற்காக வாடிக்கையாளர் சேவை செயன் முறைகளை பகுப்பாய்வு செய்வதன் மூலமும் பொருத்தமான செம்மைப்படுத்தல்கள் மேற் கொள்ளப்பட்டன. வாடிக்கையாளர் மற்றும் பணியாளர் திருப்தி பற்றிய ஆய்வை நடத்துதல், உயர் நிருவாகம் பணியளர்களுடன் கலந்துரையாடல்களை நடத்துதல் மற்றும் சிரேஷ்ட முகாமைத்து வத்திற்கு செயன்முறை திருத்தங்களுடன் அறிக்கையொன்றைத் சமர்ப்பித்தல். 2023.01.01 முதல் 2003.09.30 வரையான இந்நிறுவனத்தின் முன்னேற்றத்தின் சுருக்கம் கீழே தரப்பட்டுள்ளது.

அட்டவணை 2.25 - நடைமுறைப்படுத்தப்பட்ட உற்பத்தித்திறன் நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம் தேசிய உற்பத்தித்திறன் செயலகம்

| உப செயற்பாடு | நிதி முன்னேற்றம் | KPI | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|
| அரச துறையில் உற்பத்தித்திறன் பற்றிய உயர் சான்றிதழ் பாடநெறி | 3 ஆவது காலாண்டிற் கான செலவுகள் மதிப்பிடப்படவில்லை | நடத்தப்பட்ட பாடத் தொகுதிகளின் எண்ணிக்கை | 100% |
| குறுகிய கால பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் | 0% | நடத்தப்பட்ட நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை | 50% |
| அரச துறையின் இடைநிலை முகாமைத்துவத்திற்கான உற்பத்தித்திறன் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 100% | | 100% |
| KPI களை தயாரிப்பதற்கான முன்னோடித் திட்டம் | 100% | | 100% |
| தேசிய உற்பத்தித்திறன் செயலக களுக்கு தரக்கட்டுப்பாட்டு வட்ட நீதிபதிகளாக பயிற்சியளித்தல் | 98% | | 100% |
| உற்பத்தித்திறன் அபிவிருத்தி அலுவலர்களுக்கான பயிற்சி | 77% | | 100% |

| | | | |
|---|---|---|---|
| நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல். | | | |

ஆசிய உற்பத்தித்திறன் அமைப்பின் அங்கத்துவ நாடாக இலங்கை காணப்படுவதனால், வருடாந்தம் அந்த நிறுவனத்துடன் இணைந்து பல்வேறு வேலைத்திட்டங்கள், செயலமர்வுகள் மற்றும் கருத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. அதன்படி, 2023 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

அட்டவணை 2.26 - நடைமுறைப்படுத்தப்பட்ட உற்பத்தித்திறன் நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம் – தேசிய உற்பத்தித்திறன் செயலகம்

| | உப செயற்பாடு | நிதி முன்னேற்றம் | KPI | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|---|---|
| 1 | செயலமர்வுகள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல். | உள்நாட்டு நிதி பயன்படுத்தப்படவில்லை. | பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை | 94% |
| 2 | உற்பத்தித்திறன் தொடர்பான ஆய்வுகளை நடாத்துதல் | | ஆராய்ச்சியின் எண்ணிக்கை | 100% |
| 3 | விசேட கருத்திட்டங்களை நடத்துதல் | | நடைபெற்று வரும் திட்டங் களின் எண்ணிக்கை | 100% |
| 4 | எஸ் 5 சான்றிதழ் திட்டம் | 52% | | 100% |
| 5 | கொழும்பு மாவட்டத்தில் உள்ள சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்கள் மற்றும் வைத்தியசாலை களுக்கு வினைத்திறன்மிக்க சுகாதார சேவைகளை வழங்குதல். | 100% | 56 நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன | |
| 6 | உற்பத்தித்திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல் | 103% | 18 நிறுவனங்களுக்கு 97 நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.<br>3 சான்றிதழ் கற்கைநெறிகளை நிறைவுசெய்யப்பட்டது. | |
| 7 | ஊடகம் மற்றும் விளம்பர நிகழ்ச்சிகள் | 96% | இரத்தினபுரி மாவட்டத்தில் நடைபெற்ற சான்றிதழ் பாடநெறியில் 10 இலவச இணையவழி செயலமர்வுகள் இணையவழியில் நடாத்தப்பட்டு 40 பேருக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. | |
| 8 | மாவட்ட மற்றும் பிரதேச செயலக பிரிவு களுடன் இணைக்கப்பட்டுள்ள உற்பத்தித்திறன் அபிவிருத்தி அலுவலர்களின் செயலாற்றுகை பரிசோதனைக்காக முன்னேற்ற மீளாய்வு கூட்டங்களை நடத்துதல். | 100% | எட்டு முன்னேற்ற ஆய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. | |
| 9 | தேசிய உற்பத்தித்திறன் விருதுப் போட்டியுடன் தொடர்புடைய பயிற்சி, வழிகாட்டல், பதவியுயர்வு மற்றும் அனுபவப் பரிமாற்றத்தை நடத்துதல். | 99% | உற்பத்தித்திறன் விருது போட்டி தொடர்பில் அரச துறை நிறுவனங் களின் சேவை வினைத் திறனை மேம்படுத் துவது தொடர்பான மூன்று பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களும் சேவைகள் மற்றும் உற்பத்திகள் மற்றும் பாடசாலைகளுக்கான | |

| | | | |
|---|---|---|---|
| | | | அளவுகோல்களை மீளாய்வு செய்வதற்கான நான்கு நிகழ்ச்சித் திட்டங்களும் நடத்தப்பட்டுள்ளன. |

அட்டவணை 2.27 - நடைமுறைப்படுத்தப்பட்ட உற்பத்தித்திறன் நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம் - தேசிய உற்பத்தித்திறன் செயலகம்

| | **கருத்திட்டம்** | **முன்னேற்றம்** |
|---|---|---|
| 01 | பதுளை மாவட்டத்தில் பாதுகாப்பான உணவு உற்பத்தி கருத்திட்டத்திற்காக தரமான உரம் மற்றும் இயற்கை இலை ஊட்டச்சத்தின் உற்பத்தி மற்றும் பயன்பாடு | சேதனப் பசளை உற்பத்தியில் ஈடுபட்டுள்ள 98 விவசாயிகளுக்கு இத்தொழிற்சாலையின் ஊடாக வலுவளிக்கப்பட்டுள்ளதுடன், 16 பல்வகை இயந்திரங்கள் கொள் வனவு செய்யப்பட்டு விவசாயி களுக்கு வழங்கப்பட்டுள்ளன. ஆறு திரவப் பசளை உற்பத்தி யாளர்களுக்கும் 98 திரவப் பசளை உற்பத்தியாளர்களுக்கும் வலுவளி க்கப்பட்டுள்ளது. இந்த வேலைகள் 30,432 அமெரிக்க டொலர் செலவில் நிறைவு செய்யப்பட்டுள்ளன. |
| 02 | தெலதெனிய ஆதார வைத்தியசாலையில் தர முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்தல் | வோர்டுகள், கிளினிக்குகள், புறநோயாளிகள் பிரிவு, ஆய்வகங்கள், கதிரியக்கவியல் பிரிவு, அறுவை சிகிச்சை அரங்குகள் போன்றவை டிஜிட்டல் மயமாக்கப்பட்டுள்ளன. முறைமைகள் வலையமைப்புக் குள்ளாக்கப்படுகின்றன. உற்பத்தித் திறன் எண்ணக்கரு துறையில் பயிற்சித் திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. இந்த வேலைகள் 21,565 அமெரிக்க டொலர் செலவில் நிறைவு செய்யப்பட்டுள்ளன. |
| 03 | திறன் அபிவிருத்தியின் ஊடாக நிலையான பெறுமதி சேர்ப்புச் சங்கிலிக்கான உணவுப் பாதுகாப்பு மற்றும் தரத்தை மேம்படுத்துதல் - கம்பஹா மாவட்டம் | பால் மற்றும் இறைச்சி, காய்கறிகள் மற்றும் பழங்கள், மீன்வளம், சிறு ஏற்றுமதிப் பயிர்கள் மற்றும் தென்னை மேம்பாடு ஆகிய துறை களில் எட்டு சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களில் உணவு பாதுகாப்பு மற்றும் தரத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கை களை இத்திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.<br><br>ஆசிய உற்பத்தித்திறன் அமைப்பு, பேராதனைப் பல்கலைக்கழகத்தின் உணவு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத் திணைக்களம் மற்றும் கைத்தொழில் தொழில் நுட்ப நிறுவனம் ஆகியவற்றின் வள பங்களிப்புடன் இந்த வேலைத் திட்டம் அமுல்படுத்தப்பட்டது.<br><br>இந்த திட்டப்பணிகள் இன்னும் முடிவடையவில்லை, உணவு பாதுகாப்பு கையேடு பணி, கல்வி நிறுவனங்களின் முன்னேற்றம் உள்ளிட்ட வீடியோ மற்றும் நிறுவனத்தின் பாதை உள்ளிட்ட கையேட்டினை நிறைவு செய் வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இதன் செலவு 18,090 |

| | | |
|---|---|---|
| | | டொலராக இருக்கும் என எதிர்பார்க்கப்படு கின்றது. |
| 04 | உணவுப் பாதுகாப்பு முகாமைத்துவம் தொடர்பான தொழில்நுட்ப நிபுணர் சேவை நிகழ்ச்சித் திட்டம் | உணவு பாதுகாப்பு முகாமைத்து வத்துடன் தொடர்புடைய 50 பங்கேற்பாளர்களின் பங்களிப்புடன் இந்த திட்டம் செயற்படுத்தப்பட்ட துடன், ஆசிய உற்பத்தித்திறன் அமைப்பின் ஆலோசகர் திரு.யோங் கோக் செங் வள பங்களிப்பை வழங்கியிருந்தர். இதற்காக உள்நாட்டு நிதியிலிருந்து 496,801.00 ரூபா செலவிடப் பட்டுள்ளது. |
| 05 | உற்பத்தித்திறன் பற்றிய முதன்மைத் திட்டத்தைத் தயாரித்தல் | ஆசிய உற்பத்தித்திறன் அமைப்பு மற்றும் கொரிய அபிவிருத்தி முகாமையின் பங்களிப்புடன் இந்த பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது, மேலும் இந்த நோக்கத்திற்காக தேவையான பூர்வாங்க தரவுகள் தொகுக்கப்பட்டு வருகின்றன. |




புகைப்படம் 2-13 யாழ் மாவட்டத்தில் நடைபெற்ற " குளேபல் கண்காட்சி" நடமாடும் சேவை நிகழ்ச்சித்திட்டத்தில் எஸ் 5 சான்றளிக்கப்பட்ட நிறுவனங்களுக்கு சான்றிதழ்களை வழங்குதல்

## 2.26 தொழில் சமூகத்திற்கான நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துதல்.

### 2.26.1 வேலையாளர்களின் நலன்புரி

தொழில் சமூகத்தின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான நலன்புரித் திட்டங்களை சிரம வாசனா நிதியம் நடத்துகின்றது. இந்த நலன்புரி திட்டங்களின் ஒரு பகுதியாக, கண் சிகிச்சை, மருத்துவ முகாம்கள், புலமைப்பரிசில்கள் மற்றும் இறந்த வேலையாளர்களின் பிள்ளைகளுக்கான பாடசாலை உபகரணங்கள், வாழ்வாதார உதவிக்கான தொழில்நுட்ப கல்வி மற்றும் ஏனைய நலன்புரி செயற்பாடுகள் நாடளாவியரீதியில் நடத்தப்படுகின்றன.

மீளாய்வு காலப்பகுதியில் சமூகத்தின் நலனுக்காக சிரம வாசனா நிதியத்தினால் பின்வரும் நிகழ்ச்சத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

அட்டவணை 2.28 உழைக்கும் சமூகத்திற்கான நலத் திட்டங்களைச் செயறபடுத்துதல்

| | பௌதீக இலக்குகள் | பௌதீக இலக்குகள் | நிதி இலக்குகள் (மில்லியன்) | பௌதீக முன்னேற்றம் (மில்லியன்) |
|---|---|---|---|---|
| நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்கள் | 02 | 01 | 0.5 | 0.41 |
| கல்வி உதவி | 07 | 04 | 14.5 | 9.07 |
| விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் | 45 | 39 | 0.38 | 0.24 |
| மருத்துவ முகாம்கள் | 1000 | 813 | | |
| மாற்றுத் தொழில் | 100 | 100 | | |
| மருத்துவ உதவியை வழங்குதல் | 10 | 11 | 0.5 | 0.5 |
| சட்ட உதவியை வழங்குதல் | 50 | 33 | 1.1 | 0.50 |
| மரணத்தை ஏற்படுத்தும் விபத்து புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டம் | 100 | 57 | 7 | 3.80 |
| ஊக்குவிப்பு பிரச்சாரங்கள் | 4 | 2 | 0.64 | 0.10 |

சிரம வாசனா நிதியமானது 2022 ஆம் ஆண்டிற்கான 5 எஸ், தரக் கட்டுப்பாட்டு சான்றிதழை 2023 ஆம் ஆண்டில் பெற்றிருந்தது. தற்போது தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் கீழ் உள்ள இந்நிறுவனம் இதனைப் பெற்றது இதுவே முதல் தடவையாகும்.




புகைப்படம் 2.14 யாழ்.மாவட்டத்தில் நடைபெற்ற "குளோகல் கண்காட்சி" நடமாடும் சேவை நிகழ்ச்சித்திட்டத்தில் குறைந்த வருமானம் பெறும் உழைக்கும் குடும்பங்களின் பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கல்

## 2.27 வெளிநாட்டு தொழிலுக்கு வேலையாளர்களை அனுப்புதல்

வரையக்கப்பட்ட தனியார் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவரகம், வெளிநாட்டு தொழிலுக்கு பணியாளர்களை அனுப்புகின்றது. 2022 சனவரி முதல் செப்ரெம்பர் வரை முகவரகத்தினூடாக தொழிலுக்காக புலம்பெயர்ந்த வேலையாளர்களின் எண்ணிக்கை 569 ஆகும்.

அட்டவணை 2.29 – புலம்பெயர்வேலையாளர்களின் எண்ணிக்கை - SLFEA

| பதவி | சைப்பிரஸ் | சிங்கப்பூர் | ரஷ்யா | சேபியா | அமெரிக்கா | கொரியா | யப்பான் | மலேசியா | ருமேனியா | குவா | ஜோர்தான் | சவுதி | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வீட்டுப்பணி | 161 | | | | | | | | | | | | |
| தொழிலாளி | 05 | | | | | | | | | | | 01 | |
| சமையற்காரர் | 09 | | | | | | | | 03 | | | | |
| உதவியாளர் | | | | | | | | | | | | 01 | |
| பற்றவைப்பவர் | 02 | | | | | 221 | | | | | | | |
| ஹோட்டல் தொடர்பானது | | 01 | | | | | | | 01 | | | | |
| பொறியியல் | | | | | | | 01 | | | | | | |
| உணவு செயலி | 03 | | | | | | 09 | | | | | | |
| காத்திருப்பவர் | 01 | | | | | | | | 02 | | | | |
| ஓட்டுபவர் | | | | | | | | | | 6 | | 05 | |
| இனிப்புப்பண்டம் தயாரிப்பவர் | | | | | | | | | | 01 | | | |
| கேக் வடிவமைப் பாளர் | | | | | | | | | | 02 | | | |
| யூகி இயந்தி இயக்குநர் | | | 58 | 14 | | | | | | | | | |
| விவசாய தொழிலாளி | | | | | | | | | | | 46 | | |
| தாதியர் | | 10 | | | 02 | | | | | | | | |
| துணி சுத்திகரிப்பாளர் | | | | | | | | | | | | 01 | |
| மோட்டார் சைக்கிள் இயக்குபவர் | | | | | | | | | 01 | | | | |
| உணவு விடுதி வேலையாட்கள் | | | | | | | | 02 | | | | | |
| **மொத்தம்** | **181** | **11** | **58** | **14** | **02** | **221** | **10** | **02** | **07** | **09** | **46** | **08** | **569** |

## 2.28 சீரிய வேலை நிகழ்ச்சித்திட்டம்

இலங்கை அபிவிருத்திப் பாதையில் செல்ல வேண்டுமானால், சீரிய வேலை ஊக்குவிக்கப்பட வேண்டுயிருக்கின்றது. சீரிய வேலை, சுதந்திரம், சமத்துவம், சமூகப் பாதுகாப்பு மற்றும் மனித கௌரவம் ஆகியவற்றின் சூழலொன்றில் ஆக்கத்திறனுள்ள பணியைப் பாதுகாப்பதற்கு ஆண் களுக்கும் பெண்களுக்கும் சம வாய்ப்புகளை பேணுகின்றது. சீரிய வேலையுடன் தொடர்புபடுகின்ற முக்கிய காரணி, வெறுமனே வேலை உருவாக்கம் எதிர்பார்க்கப்படுவதில்லை என்பதுடன், உருவாக்கப்படும் வேலைகள் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இருத்தல் வேண்டும். சீரிய வேலை நான்கு பிரதான ஆக்கக் கூறுகளை அடிப்படையாகக் கொண்டது: வேலை உருவாக்கம், ஊக்குவிப்பு மற்றும் தேசிய உற்பத்தித்திறன், வேலையில் உரிமைகள், சமூகப் பாதுகாப்பு, சமூகக் கலந்துரையாடல். இந்த 4 முக்கிய கூறு களுக்கு மேலதிகமாக, உற்பத்தித்திறனை மேம்படுத்துதல் மற்றும் பாலின சமத்துவத்தை உறுதிசெய்யும் பாடப் பகுதிகளை உள்ளடக்கிய திட்டங்கள் செயற்படுத்தப்படு கின்றன.

சீரிய வேலைத் திட்டத்தின் கீழ், பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை மற்றும் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக பின்வரும் நிறுவனங்களுக்கு 14.1 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அட்டவணை 2-30 சீரிய வேலை நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்

| | நிறுவனம் | தேறிய ஏற்பாடு (ரூபா) | பயன்படுத்திய தொகை (ரூபா) | செலவின விகிதம் |
|---|---|---|---|---|
| 01 | **தொழில் திணைக்களம்** | | | |
| i | பெண்கள் மற்றும் சிறுவர்கள் விவகாரப் பிரிவு | 3,723,845.00 | 2,332,022.92 | **63%** |
| ii | மனித வளங்கள் அபிவிருத்திப் பிரிவு | 5,802,500.00 | 2,147,535.28 | **37%** |
| iii | கைத்தொழில் பாதுகாப்புப் பிரிவு | 1,930,000.00 | 25,000.00 | **01%** |
| v | திட்டமிடல், ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் வெளியீடுகள் பிரிவு | 620,000.00 | 620,000.00 | **100%** |
| 02 | தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம் | 2,090,000.00 | 1,729,960.00 | **17%** |
| | **மொத்தம்** | 14,166,345.00 | 6,854,518.20 | **52%** |

## 2.29 திட்டமிடல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகள்

I. உள்நாட்டு வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களை வழங்குதல், தொழில் வழிகாட்டல் மற்றும் பயிற்சிகளை வழங்குதல் மற்றும் பொதுமக்கள் எதிர்கொள்ளும் தொழில் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்குதல் உள்ளடங்கலாக இளைஞர்களுக்கு அதிக சேவைகளை வழங்குவதற்காக பல அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களின் பங்களிப்புடன் "குளோகல் கண்காட்சி - 2023" நடமாடும் சேவை நிகழ்ச்சித்திட்டம் இந்த ஆண்டு யூலை 15 மற்றும் 16 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் முற்றவெளி விளையாட்டரங்கில் வெற்றிகரமாக நடைபெற்றிருந்தது.

II. இந்த அமைச்சு ஆண்டுதோறும் தொழில் துறையிலுள்ள பல்வேறு காலத்திற்கேற்ற கருப்பொருளை அடிப்படையாகக் கொண்ட ஆய்வுக் கட்டுரைகளைக் கொண்ட சஞ்சிகை யொன்றை வெளியிடுகின்றது. இதன்படி, 2023 ஆம் ஆண்டில் "வேலையாளர்களைப்

பாதுகாத்தல் மற்றும் சௌகரியப்படுத்துதல்" என்ற கருப்பொருளை அடிப்படையாகக் கொண்ட ஆய்வுக் கட்டுரைகளுக்கான கோரல் நிறைவடைந்து, தொழில் விடயம் மீதான நிபுணர் குழுவால் மதிப்பீடு செய்யப்பட்டு சஞ்சிகையொன்றாக வெளியிடப்படும்.

## 2.30 நிருவாக மற்றும் தாபனச் செயற்பாடுகள்

I. இந்த அமைச்சு 2023 சனவரி முதல் செப்ரெம்பர் வரை 35 அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்துடன், அவற்றில் 19 தொடர்பில் அமைச்சரவை முடிவுகள் பெறப்பட்டிருந்தன.

II. ஆய்வாண்டு காலப்பகுதியின்போது, 389 பொது முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றிருந்த துடன், அவை அனைத்தும் தேவையான நடவடிக்கைகளுக்காக உரிய பிரிவுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன. அந்த பிரிவுகளிலிருந்து 237 பதிலளிப்புகள் பெறப்பட்டுள்ளன.

III. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் ஏழு 19 கோரிக்கைகள் பெறப்பட்டு, அவை அனைத்தும் பற்றிய தகவல்கள் வழங்கப்பட்டன. 'வெரிட் ரிசர்ச்' மேற்கொண்ட மதிப்பீட்டின்படி, தகவல் அறியும் உரிமை தொடர்பான வெளிப்பாடுகளை வினைத் திறனுடன் கையாண்டதன் காரணமாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு 31 அரச நிறுவனங்களில் 10 ஆவது இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளது.

IV. மீளாய்வாண்டு காலப்பகுதியில் பல்வேறு நிறுவனங்களால் நடத்தப்பட்ட பயிற்சி கற்கை நெறிகளில் 80 அமைச்சு அலுவலர்கள் பங்கேற்றிருந்தனர். தனிநபர் கோப்பு முகாமைத்துவம், திட்ட அறிக்கை தயாரித்தல், வெளிவள தலைமைத்துவம் மற்றும் ஆளுமை விருத்தி பயிற்சி செயலமர்வுகள் மற்றும் பட்டப் பற்படிப்பு கற்கைநெறிகள் போன்ற அத்தகைய கற்கைநெறிகளுக்கு இந்த அலுவலர்கள் அனுப்பப்பட்டிருந்தனர். அமைச்சின் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பிரிவில் கடமையாற்றும் 769 அபிவிருத்தி அலுவலர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. இப்பயிற்சிகள் தற்போதைய வெளிநாட்டு வேலை வாய்ப்புகள், குடும்ப பின்னணி அறிக்கைகள், புதிய சுற்றறிக்கைகள் மற்றும் பயிற்றுவிப்பாளர் பயிற்சி திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களாக நடத்தப்பட்டுள்ளன.

V. இந்த அமைச்சின் கீழுள்ள அனைத்து நிறுவனங்களும், திணைக்களங்களும் வெளிநாட்டு புலமைப்பரிசில் செயலமர்வுகள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2023 சனவரி முதல் செப்டம்பர் வரையாக காலப் பகுதியில் 49 அலுவலர்கள் வெளிநாட்டு பயிற்சி வகுப்புகள் மற்றும் பயிற்சி செயலமர்வுகளில் கலந்து கொண்டுள்ளனர்.

VI. இதற்கு மேலதிகமாக மீளாய்வு காலப்பகுதியில் பின்வரும் தாபன செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அட்டவணை 2-31 தாபன செயற்பாடுகளின் முன்னேற்றம்

| தொ.இல. | செயற்பாடுகள் | முன்னேற்றம் |
|---|---|---|
| 01 | பாராளுமன்றத்தில் வாய்மொழி கேள்விகளுக்கான பதில்கள் | 14 |
| 02 | பொது மேன்முறையீட்டுக் குழுவுக்கு அறிக்கைகள் அனுப்பப்பட்டமை | 1 |
| 03 | ஆண்டு அறிக்கைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தமை | 12 |
| 04 | ஆண்டு அறிக்கைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தமை | 13 |
| 05 | அமைச்சரவை விஞ்ஞாபனத்துக்கான அவதானிப்புகள் | 15 |

# அத்தியாயம் மூன்று

## அமைச்சின் எதிர்காலத் திட்டங்களும் செயற்பாடுகளும்

# அமைச்சின் எதிர்காலத் திட்டங்களும் செயற்பாடுகளும்

இந்த அமைச்சானது, இலங்கையில் தற்போது காணப்படுகின்ற தேசிய மற்றும் சருவதேச சமூக, பொருளாதார இயக்கவியலுக்கு ஏற்ப, முதலீட்டுக்கு இணக்கமான சூழலை பேணிவளர்க்கக் கூடிய சட்ட ஏற்பாடுகளை உருவாக்குவதற்குரிய தருணத்தில், முக்கியமான பொறுப்பைக் கொண்டுள்ளது. தற்போதுள்ள சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளை தற்போதைய தொழில் உலகிற்கு ஏற்றவாறு திருத்தியமைக்கின்ற அதேவேளை, உழைக்கும் மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான கடப்பாட்டினை இந்த அமைச்சு கொண்டுள்ளது. இதேபோன்று, சமகால தொழில்நுட்ப நிபுணத்துவம் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கான திறன்களைக் கொண்ட திறமையான வேலையாளர்களைத் தயார்படுத்துகின்ற முதன்மையான நோக்கத்துடன், இந்த முயற்சி பாரம்பரிய வெளிநாட்டு தொழில் சந்தைகளுக்கு அப்பால் இலங்கை வேலையாளர்கள் இதுவரை அறிந்திராத புதிய இடங்களை உள்ளடக்கியதாக விரிவடைகின்றது. பழக்கப்படாத இந்த பகுதிகளுக்கு வேலையாளர்கள் புலம்பெயர்வதற்குத் தேவையான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வுள்ளன. இந்த இலக்கை அடைவதற்கான எதிர்கால திட்டங்கள் மற்றும் முன்முயற்சிகளை வகுக்கின்றபோது அமைச்சு பின்வரும் முக்கிய அம்சங்களுக்கு முக்கியத்துவம் அளித்துள்ளது.

அமைச்சின் தொலைநோக்கு,செயற்பணி மற்றும் குறிக்கோள்கள்

- 2022/07/22 ஆம் திகதிய 2289/43 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் அமைச்சுக்கு குறித்தொதுக்கப்பட்ட பணிஇலக்குகள் மற்றும் தொழிற்பாடுகள்.
- இந்த அமைச்சுடன் தொடர்புடைய நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்.
- தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறைகள் தொடர்பில் இலங்கை உடன்பட்டுள்ள சருவதேச சமவாயங்கள் மற்றும் உடன்படிக்கைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள்.

## 3.1 தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு

### 3.1.1 தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கு பிரயோகிக்கத்தக்கதான சட்ட கட்டுக்கோப்பைப் பலப்படுத்துதல்

காலாவதியான தொழில் சட்டங்களை இன்றைய தொழில் உலகிற்கு பொருத்தமானதாக மாற்றுவதும், இச்சட்டங்களில் உள்ள முரண்பாடுகளை நீக்கி, அனைத்து தரப்பினருக்கும் பயனளிக்கும் வகையில் எளிமைப்படுத்துவது மிகவும் அவசியமான தேவை என்பது உணரப் பட்டுள்ளது. அதேநேரம், வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறையில் தற்போதைய போக்குகளுக்கு ஏற்ப நாட்டின் சட்ட மற்றும் கொள்கை கட்டமைப்பை உருவாக்குதலும் வேண்டும். இது தொடர்பில் அடிப்படை கொள்கை முடிபுகள் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளதுடன், தேவையான மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

- **தற்போதைய தேவைகளை நிறைவுசெய்யும் வகையிலான ஏற்பாடுகளுடன் புதியதொழில் சட்டத்தைத் திருத்துதல்**

1923 ஆம் ஆண்டிலிருந்து, சுமார் 50 தொழில் கட்டளைச்சட்டங்கள் சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்டுள்ளதுடன், அவற்றில் சுமார் 16 சட்டவாக்கங்கள் அன்றாட நடவடிக்கைகளில் நேரடியாக செயற்படுத்தப்படுகின்றன. இந்த சட்டங்களும், கட்டளைச்சட்டங்களும் வளர்ந்து வரும் சமூக பொருளாதார இயக்கவியல் மற்றும் அதற்கேற்ப தொழில் உலகில் ஏற்படும் மாற்றங்களை நிவர்த்தி செய்வதில் பொருத்தமற்றவையாகும். உழைக்கும் சமூகத்தின் உரிமைகளை, வர்த்தகங்களின் தொடர்ச்சியான இருப்பினை மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் ஈர்ப்பை எளிதாக்குவதனை உறுதிப்படுத்துகின்ற தொழில் சட்டத்தின் தேவையை ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பில் தேவையான நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளதுடன், தொழிற் சங்கங்கள், தொழில் வழங்குனர்கள் மற்றும் பல்வேறு தரப்பினருடன் கலந்தாலோசித்து தற்போதைய தொழில் உலகிற்கு பொருத்தமான வகையில் வேலைவாய்ப்புச் சட்டத்தை உருவாக்குவதற்கான வேலைவாய்ப்பு சட்டமூலத்தை தயாரிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இதன்படி, சட்டங்களுக்கு இடையிலான முரண்பாடுகளை நீக்கி, நெகிழ்வான வேலை நிபந்தனைகளை உள்ளடக்கிய வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது. இவ்வாறாக, அறிவு செயன்முறை வெளிவளமிடல் (KPOs) நிறுவனங்கள், வணிக செயல்முறை வெளிவளமிடல் நிறுவனங்கள் (BPOs) மற்றும் தகவல் தொழில்நுட்பம் செயற்படுத்தும் சேவைகள் (ICT செயற்படுத்தும் சேவைகள்) ஆகியவற்றை உள்ளடக்கி, அந்த நிறுவனங்களில் பெண் பணியாளர்களின் உரிமைகளை நிலைநிறுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதன் மூலம், பெண்களின் வேலைவாய்ப்பை அதிகரிக்க முடியும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இதன்படி, இந்த நோக்கத்திற்காக நியமிக்கப்பட்ட விசேட குழுவினால் இந்த சட்டமூலம் தயாரிக்கப்பட்டு வருகின்றது.

- **இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகச் சட்டத்தைத் திருத்துதல்**

வெளிநாட்டு வேலை வாய்ப்பு துறையின் வளர்ச்சிக்கு ஏற்ப, சர்வதேச தொழிலாளர் சந்தை மாற்றங்களுக்கு ஏற்ப வெளிநாட்டு வேலைவாய்ப்பு துறையை சீரமைக்க, தற்போதுள்ள சட்ட கட்டமைப்பை வலுப்படுத்த, சர்வதேச கடமைகளுக்கு இணங்க, இலங்கையின் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக சட்டத்தில் திருத்தம் செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மற்றும் உள்நாட்டில் சட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு வசதியாக.

- **தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகச் சட்டத்தைத் திருத்துதல்**

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகச் சட்டத்தின் திருத்தம், இலங்கையில் தொழில்சார் பாதுகாப்பு கலாசாரத்தை வளர்ப்பதற்கும் பாதுகாப்பான, ஆரோக்கியமான மற்றும் தொழில்ரீதியான ஆபத்து-குறைக்கப்பட்ட பணிச் சூழலை உருவாக்குவதற்கும் எதிர்பார்க்கின்றது.

- o தனியார் துறை நிறுவனங்களில் தேசிய நியமமாக தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார முகாமைத்துவ முறைமையை அமுல்படுத்துதல்.
- o உரிய பணிகளைச் ஆற்றவதன் மூலமும் ஒழுங்குபடுத்துவதன் மூலமும் தொழில்சார் சுகாதார நியமங்களை அடைவதற்காக பாதுகாப்பு அலுவலர்களுக்குப் பயிற்சியளித்தல் மற்றும் வலுவளித்தல்.
- o பாதுகாப்பு அலுவலர்களின் குறைந்தபட்ச தகைமைகளைத் தீர்மானித்தல்.
- o தனிநபர் பாதுகாப்பு உபகரணங்களை வழங்கும் நிறுவனங்களை ஒழுங்குபடுத்துவதன் மூலம் நியமங்களை நிறுவுதல் மற்றும் ஒழுங்குபடுத்துதல்.
- o தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தை இத்துறையில் சிறந்த நிலையமாக விருத்தி செய்தல்.

இணக்கமான பணிச்சூழலில் பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான தொழிலணியை உருவாக்குவதற்குத் தேவையான மனித வளத்தை விருத்திசெய்தற்கு அதேபோன்ற இச் செயன்முறையின் ஊடாக வருமான துறைகளையும் உருவாக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

- **சிரம வாசனா நிதியச் சட்டத்தைத் திருத்துதல்**

சிரம வாசனா நிதியச் சட்டம், நாட் சம்பள வேலையாளர்களை பணியாளர்களின் வரையறைக்குள் கூட்டிணைத்து, அதன் நலன்புரிப் பணிகளை விரிவுபடுத்துவதற்காக திருத்தம் செய்யப்படவுள்ளது.

### 3.1.2 வெளிநாட்டு புலம்பெயர் வேலையாளர்களிடமிருந்து வருமானத்தை சட்டப்பூர்வமாக மாற்றுவதை ஊக்குவித்தல்.

- **வெளிநாட்டு பணம் அனுப்புவதை அடிப்படையாகக்கொண்ட பன்முகக் கடன் திட்டத்தை அறிமுகப்படுத்துதல்.**

புலம்பெயர் வேலையாளர்களால் அனுப்பும் பணத்தின் அடிப்படையில் அதிகபட்சம் 2 மில்லியன் ரூபா வரை மானிய வட்டி வீதத்தில் கடன் வசதியை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இலங்கை மத்திய வங்கி மற்றும் நாட்டின் வங்கி முறைமையுடன் இணைந்து இந்த முயற்சிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

- **வெளிநாட்டிலிருந்து அனுப்பப்படுகின்ற பணத்தொகையின் அடிப்படையில் மேலதிக தீர்வைப் படியொன்றினை வழங்குதல்**

வெளிநாட்டு வேலையாளர்கள் நாடு திரும்புகின்ற சந்தர்ப்பங்களில், விமான நிலைய வரியற்ற கடைத்தொகுதியில் கொள்வனவுசெய்த பொருட்களுக்கு வெளிநாட்டில் தங்கியிருக்கும் காலத்தின் அடிப்படையில் தற்போதைய வரித் தீர்வைக்கு மேலதிகமாக அவர்கள் அனுப்பும் அந்நிய செலாவணி தொகையின் அடிப்படையில் மேலதிகமான வரித் தீர்வை வழங்கப்படும். இந்த நோக்கத்திற்கான சுற்றறிக்கைகள் தயாரிக்கப்பட்டு, விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுதல் வேண்டும்.

### 3.1.3 பணியாளர்களுக்கான புதிய சமூகப் பாதுகாப்பு முறைமையை அறிமுகப்படுத்துதல்

தற்போது, தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதார சலுகைகள், மகப்பேற்று சலுகைகள், வேலையின்மை சலுகைகள், தொழிலாளர்களின் நட்டஈட்டு சலுகைகள் ஆகியவை தொழில்வழங்குநரால் ஏற்கப்படுகின்றன. தொழில்வழங்குநர்களுக்கு மேலதிக சுமையாக இல்லாது, அந்த நன்மைகளை வழங்குவதற்கும், வேலைவாய்ப்பற்றவர்களுக்கு சமூகப் பாதுகாப்பு மற்றும் காப்புறுதி வசதிகளை வழங்குவதற்கும், புதிய முறைமை அறிமுகப்படுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், இது தொடர்பாக ஆய்வொன்றும் நடத்தப்பட்டுள்ளது.

### 3.1.4 அமைச்சின் கீழ் இலங்கையின் முழு தொழில்அணி தொடர்பாகவும் (அரச சேவையில் பணிபுரிபவர்கள் நீங்கலாக) டிஜிட்டல் மயமாக்கப்பட்ட தேசிய தொழில் சந்தை தகவல் முறைமையை தாபித்தல்.

நெகிழ்வான நடைமுறைகள், டிஜிட்டல் மற்றும் தானியங்கி தீர்வுகள் மூலம் தொழில்தருநர் மற்றும் பணியாளர் இருவரும் இலகுவாக அடையப்பெறுதல், தேவையான சேவைகளை வெளிப்படைத் தன்மையுடனும், குறைந்த செலவிலும் வழங்கும் நோக்கத்துடன் தேசிய தொழில் சந்தை தகவல் முறைமையை நிறுவுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அமைச்சின் செயற்பாடுகள் தொடர்பான சேவைகளை வழங்கும் ஏனைய அமைச்சுக்கள் மற்றும் அரச நிறுவனங்களுடன் தடையற்ற ஒருங்கிணைப்பை பேணி வளர்க்கின்ற அதேவேளை தொழில் திணைக்களத்தினால் வழங்கப்படும் சேவைகளை டிஜிட்டல் மயமாக்கவதனை இந்த முன்முயற்சி நோக்கமாகக் கொண்டுள்ளது. இலத்திரனியல் சம்பளம், வேலைவாய்ப்பற்றோருக்கான காப்பீட்டுத் திட்டங்கள், மகப்பேற்று உதவித் தொகைகள், வேலைவாய்ப்பின்மை போன்ற அனைத்துத் தகவல்களையும் வாடிக்கையாளர்களுக்கான பிரத்தியேக குறிகாட்டியின் கீழ் சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

### 3.1.5 இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தை டிஜிட்டல்மயமாக்குதல்

இலங்கை அரசாங்கத்திற்கு எவ்வித செலவும் இன்றி இலங்கை ஒருங்கிணைந்த வெளிநாட்டு வேலைவாய்ப்புத் தீர்வை அமுல்படுத்துற்கும், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு

பணியகம் எதிர்நோக்கியுள்ள பின்வரும் சவால்களை நிவர்த்தி செய்வதற்கும் எதிர்பார்க்கப் படுகின்றது.

- 0 புலம்பெயர் வேலையாளர்கள் மீதான சுரண்டல் மற்றும் துஷ்பிரயோகம்
- 0 மனித கடத்தல்
- 0 சட்டவிரோத ஆட்சேர்ப்பு நடைமுறைகள்
- 0 ஆட்சேர்ப்பு முகவர்கள் மற்றும் முகவர்களை கண்காணிப்பதற்கான முறையான முறைமை இல்லாமை
- 0 அனுதியளிக்கின்ற செயன்முறையில் தாமதங்கள்
- 0 சட்டவிரோத பணம் அனுப்புதல் பிரச்சினைகள்
- 0 புலம்பெயர் வேலையாளர்களின் தொழில்தருநர்களிகள் மற்றும் பிற அக்கறைதாரர் களின் முழு செயன்முறை மற்றும் பயணத்தை கண்காணிப்பதற்கு தனித்த இணையத் தளம் இல்லாமை

இந்த முன்முயற்சி, உரிய அனைத்து அக்கறைதாரர்களுடனும் பயனுள்ள ஈடுபாட்டை உறுதிப்படுத்தி, புலம்பெயர் வேலையாளர்களின் முழு செயன்முறையையும் மற்றும் பயணத்தையும் கண்காணிப்பதற்கு வடிவமைக்கப்பட்ட விரிவான டிஜிட்டல் தளத்தை நிறுவதற்கு முயற்சிக்கின்றது.

**3.1.6** பட்டம் வழங்கும் அதிகாரங்களை வழங்குவதற்காக 2010 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தேசிய தொழில் கற்கைகள் நிறுவகச் சட்டத்தை பட்டம் வழங்கும் நிறுவனமாக திருத்த வேண்டியதன் அவசியம் குறித்து விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அமைச்சரவைக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது.

**3.1.7** நாட்டிற்கு அதிகளவிலான தொழில் அனுப்புகளை கொண்டுவருவதற்காக, வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கான புதிய நாடுகள் / இடங்கள் ஆராயப்படுதல் வேண்டும் என்பதுடன், அபிவிருத்தியடைந்த நாடுகளில் தாதியர் மற்றும் முதியோர் பராமரிப்பு சேவைகளுக்கான தேவை அதிகரித்துள்ளது. இதேபோன்று, குவைத், கத்தார், யப்பான் போன்ற நாடுகளும் விசேட சேவைகளுக்கு பெரும் தேவையை உருவாக்கி வருகின்றன. இதன்படி, புதிய இடங்கள் மற்றும் பயன்படுத்தப்படாத பகுதிகளை இனங்காண்பதற்கு நடவடிக்கை

**3.1.8** வெளிநாட்டு வேலைவாய்ப்பு தொடர்பில் புதிய சந்தைவாய்ப்புகளை இனங்காணுதல் மற்றும் மத்திய கிழக்கு அதேபோன்ற ஐரோப்பிய, ஆசிய மற்றும் அரிக்கா போன்ற நாடுகளுக்கு விரிவுபடுத்துவதற்கு தொடர்புடைய உடன்படிக்கைகளைக் கைச்சாத்திடுதல்

**3.1.9** 13 இலக்கு நாடுகளுடன் 15 புதிய புரிந்துணர்வு உடன்படிக்கைகளில் கைச்சாத்திடுவதற்கு உத்தேசிக்கப்படுகின்றது. இதன்படி குவைத், கட்டார், ஓமன், லெபனான், ருமேனியா, சைப்ரஸ், சிங்கப்பூர், இத்தாலி, மலேசியா, லக்சம்பர்க், மால்டா, துருக்கி, மாலதீவு ஆகிய நாடுகளுடன் புரிந்துணர்வு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்படவுள்ளன.

**3.1.10** வகை E7 இன் கீழ் வெல்டிங்கிற்காக கொரியாவில் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கு அனுப்புவதற்கான வாய்ப்புகளை இனங்காணுதல்

கட்டாய சேவையை நிறைவு செய்து ஓய்வு பெற்ற முப்படை அலுவலர்களுக்கு வெளிநாட்டு பயிற்சி வேலை வாய்ப்புகளுக்கு பணித்தலும், வழங்குதலும்.

**3.1.11** புலம்பெயர் வேலையாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களின் பாதுகாப்பு மற்றும் நலனுக்காக அமைச்சினால் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்ற குடும்ப அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் பராமரிப்புத் திட்டங்கள் போன்ற திட்டங்களை மேலும் பலப்படுத்துதல் மற்றும் தொடர்ச்சியாக செயற்படுத்துதல் மற்றும் உள்ளூர் மட்டத்தில் பயனுள்ள, பாதுகாப்பான புலம்பெயர்வு குறித்த விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேலும் விரிவுபடுத்துதல்.

**3.1.12** வேலைவாய்ப்பிற்கான புலம்பெயர்வு தொடர்பான இலங்கையின் தேசிய கொள்கை மற்றும் செயற்றிட்டத்தை அமுல்படுத்துதல், வேலைக்கான புலம்பெயர்வு தொடர்பான இலங்கையின் தேசிய கொள்கை மற்றும் செயற்றிட்டத்தை பிரகடனப்படுத்துதல் மற்றும் இக்கொள்கையுடன் தொடர்புடைய வேலைவாய்ப்புக்கான புலம்பெயர்வு பற்றிய தேசிய ஆலோசனைக் குழுவின் குழுக் கூட்டங்களை நடத்துதலும், அதேநேரத்தில் மற்றும் தேசிய கொள்கைக்கான செயற்றிட்டத்தை அமுல்படுத்துதல் தொடர்பில் பணியாற்றுதலும்.

**3.1.13** புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களின் உரிமைகள், பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வைப் பாதுகாப்பதற்காக அபிவிருத்தி பங்குதாரர்களுடன் இணைந்து நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல். இதன்படி, அபிவிருத்தி மற்றும் ஒத்துழைப்புக்கான சுவிஸ் முகவர் நிலையம் மற்றும் சர்வதேச தொழில் தாபனம் ஆகியவற்றின் பங்களிப்புடன் பாதுகாப்பான, ஒழுங்கான தொழிலாளர் புலம்பெயர்வு நிகழ்ச்சித்திட்டத்தின் நான்காம் கட்டத்தை அமுல்படுத்துதல்.

**3.1.14** வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறையை பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு மற்றும் கல்வி அமைச்சு ஆகியவற்றுடன் ஒருங்கிணைப்பதற்கான வலையமைப்பை தாபித்து, வெளிநாடுகளுக்குச் செல்ல விரும்பும் அரச அலுவலர்கள் மற்றும் ஏனைய வேலையாளர்களுக்கு பாதுகாப்பான தொழில் வாய்ப்புக் களை வழங்குவதற்கு உதவுவதற்காக விசேட கருத்திட்டமொன்றை கூட்டாக அமுல்படுத்துதல். இது தொடர்பாக ஒருங்கிணைந்த வழிகாட்டுதல் மற்றும் பரிந்துரை அமைப்பு (IGRS) தாபிக்கப்பட்டுள்ளது. இந்த முன்னோடித் திட்டத்திற்கான நிதி மற்றும் தொழில்நுட்ப ஆதரவை புலம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு (IOM) வழங்கியுள்ளது. முதலாவது கட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளுடன், பொதுமக்களுக்காக ஒக்டோபர் மாதத்தில் அங்குரார்ப்பணம் செய்வதற்கு அட்டவணையிடப்பட்டுள்ளது.

**3.1.15** இந்த அமைச்சினால் மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் அபிவிருத்தி அலுவலர்களின் (வெளிநாட்டு வேலைவாய்ப்பு) திறனை விருத்தி செய்வதன் மூலம் கள மட்டத்தில் வெளிநாட்டு வேலைவாய்ப்பை ஊக்குவிப்பதற்காக வேலைக்கமர்த்துவதனைப் பலப்படுத்துதல்.

**3.1.16** நாடு திரும்பும் புலம்பெயர் வேலையாளர்களை உள்ளூர் தொழில் சந்தையுடன் ஒருங்கிணைப்பதற்கான தற்போதைய பொறிமுறையை ஏனைய உரிய அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களின் ஆதரவுடன் உறுதிப்படுத்துதல்.

**3.1.17** கிராமிய, பிராந்திய மற்றும் மாவட்ட மட்டங்களில் புலம்பெயர் வேலையாளர் சங்கங்களை தாபிப்பதனூடாக இந்த அமைச்சு மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்துடனான நெருக்கமான ஒருங்கிணைப்புடன், தமது வேலைகளை முடித்து நாடு திரும்புபவர்களுக்காக உள்ளூர், மாவட்ட மற்றும் தேசிய மட்டங்களில் இணைந்த பொறிமுறையொன்றை உருவாக்குதல்.

**3.1.18** வேலையாளர் சங்கங்களை நிறுவுவது வேலையாளர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களை சமூகத்தில் வலுவூட்டுவதையும், அவர்களின் அறிவு, திறன்கள் மற்றும் மனப்பான்மையை வளர்ப்பதன் மூலம் அவர்களை சுறுசுறுப்பான உறுப்பினர்களாக சமூகமயமாக்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. இதன் ஆரம்பமாக தேசிய அளவிலான புலம்பெயர் வேலையாளர் சங்க மாநாட்டை நடத்துதல்.

**3.1.19** புலம்பெயர் வேலையாளர்கள் மற்றும் நாடு திரும்புகின்ற வேலையாளர்கள் குறித்து நாடு முழுவதலும் கணக்கெடுப்பொன்றை நடத்துதல்.

## 3.2 தொழில் திணைக்களம்

**3.2.1** பணியாளர்களின் சம்பளம், வேலை நிபந்தனைகள் மற்றும் தற்போதைய மற்றும் எதிர்கால வேலை சீரமைப்புக் கோரிக்கைகளை வழங்குகின்ற வேலைச் சூழல் தொடர்பாக தற்போதிருக்கின்ற 13 தீர்ப்பாணைகளை ஒருங்கிணைக்கின்ற புதிய வேலைவாய்ப்புச் சட்ட எண்ணக்கருத்தாளினை வரைவுச் சட்டமாக மாற்றுவதற்கு அமைச்சுக்குத் தேவையான உதவிகளை வழங்குதல்

**3.2.2** 2025 ஆம் ஆண்டளவில் இலங்கையின் அனைத்து மாவட்டங்களையும் சிறுவர் தொழிலற்ற வலயங்களாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென்று எதிர்பார்க்கப் படுகின்றது. இதன்படி, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் அதிக ஆபத்துள்ள சிறுவர் தொழில் / தீங்கிளைக்கின்ற சிறுவர் தொழில், காணப்படுகின்ற 10 மாவட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. எனவே, 2024 ஆம் ஆண்டில் ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களுக்கு மேலதிகமாக மேலும் 10 மாவட்டங்களைத் தேர்ந்தெடுத்து, அவை சிறுவர் தொழிலாளர் இல்லாத வலயங்களாக மாற்றப்படுவதை உறுதிப்படுத்துவதனூடாக சிறுவர் தொழிலாளர்களின் சட்ட அந்தஸ்து பற்றி அக்கறைதாரர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தவும், மாவட்ட செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள் மற்றும் உரிய மாவட்டங்களிலுள்ள சிறுவர்களைக் கையாளும் அனைத்து அரச முகவர் நிறுவனங்கள், சமூகத் தலைவர்கள், சமூக அமைப்புகள் மற்றும் தனியார், பகுதியளவிலான அரச நிறுவனங்களின் பிரதிநிதிகளை உள்ளடக்கி , தொழில் திணைக்களத்தின் மாவட்ட மற்றும் உப தொழில் அலுவலகங்கள் ஊடாக நிகழ்ச்சித் திட்டங்களைக் கண்காணிப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. விசேடமாக, கடற்றொழில் துறையில் சிறுவர் தொழிலாளர்களை இல்லதொழிக்கும் நோக்கில் இப்பகுதியில் தொடர்ச்சியான விசேட ஆய்வுகள் மற்றும் சோதனைகளை மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**3.2.3** ஊழியர் சேமலாப நிதியத்தின் கீழ் மாவட்ட அளவில் புதிய உறுப்பினர்களை பதிவு செய்வதற்கு புதிய மென்பொருள் முறைமை ஏற்படுத்தப்படும். இதன்படி, அனைத்து மாவட்ட மற்றும் சார்நிலை அலுவலகங்களிலும், புதிய மென்பொருள் முறைமையை ஏற்படுத்தவும், அலுவலர்களுக்கு பயிற்சியளித்ததன் பின்னர், புதிய உறுப்பினர்களின் பதிவுகளை ஆரம்பிப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த புதிய மென்பொருள் முறைமை யைப் பயன்படுத்துவதானது, பணியாளர் தொழில் புரிவதற்கு ஆரம்பித்தவுடன் உரிய மாவட்டம் அல்லது உப தொழில் அலுவலகத்தில் கைரேகைகளை வழங்குவதன் மூலம் ஊழியர் சேமலாப நிதியத்தில் பதிவு செய்வதற்கு அனுமதிக்கின்றது. ஆரம்ப கட்டத்தில் பணியாளர்களின் சரியான தரவை மென்பொருள் முறைமையை இணைப்பதன் மூலம் ஊழியர் சேமலாப நிதியத்தின் நன்மைகளைப் பெறும்போது ஏற்படக்கூடிய பிரச்சினைகளைக் குறைப்பதனூடாக இது வாடிக்கையாளர்களுக்கு பயனுறுதிவாய்ந்த சேவையை வழங்கும்.

**3.2.4** கொழும்பு, களுத்துறை மற்றும் கம்பஹா ஆகிய மூன்று மாவட்டங்களிலுள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழிற்றுறைகளுடன் தொடர்புடைய விபத்துக்கள் மற்றும் நோய்களைக் குறைக்கும் குறிக்கோளுடன் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழிற் றுகைள் பற்றிய ஆரம்ப கணக்கெடுப்பை நடத்துதல். இம்மூன்று மாவட்டங்களிலுமுள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களுடன் தொடர்புடைய நோய்கள் மற்றும் அத்தொழில்களின் வேலை நிபந்தனைகளை அளவீடு செய்து முறையான பின்தொடர்தல்களை மேற்கொண்டதன் பின்னர் குறித்த கைத்தொழில்களின் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார மேம்பாட்டிற்கு தேவையான பரிந்துரைகளை வழங்குதல்.

**3.2.5** தேவையான பாதுகாப்பு அறிவைப் பெற்றுக் கொள்வதற்காக, அத்தகைய வாய்ப்புகள் வரையறுக்கப்பட்டிருப்பதனால், வட மாகாணத்தில் தொழிற்பயிற்சித் துறையில் கல்வி கற்கின்ற பணியாளர்கள், தொழில் வழங்குனர்கள் மற்றும் மாணவர்களுக்கு வாய்ப்புகளை விரிவுபடுத்தும் நோக்கில் யாழ்ப்பாண மாவட்ட தொழிற்சாலை பரிசோதனைப் பொறியியல் அலுவலகத்தில் பாதுகாப்பு கண்காட்சி மண்டபமொன்றை அமைத்தல்.

**3.2.6** தொழில் செயலகக் கட்டிடத்தின் 3, 4, 5 மற்றும் 6 ஆவது தளங்களில் உட்புற வடிவமைப்புப் பணிகளை மேற்கொள்ளுதல் மற்றும் சொல்லப்பட்ட கட்டடத்தின் கட்டமைப்பு பழுதுபார்ப்புப் பணிகளை மேற்கொள்ளுதல்.

**3.2.7** அரச மற்றும் தனியார் பங்குடமைத் திட்டத்தின் (PPP) கீழ் "மெஹெவர பியெச" கட்டிடத்தின் பொது வசதிகளை மேம்படுத்துதல்.

**3.2.8** தொழில் அலுவலர் மற்றும் சட்ட அலுவலர் பதவிகளில் காணப்படும் வெற்றிடங்களுக்கு அலுவலர்களை ஆட்சேர்ப்பு செய்வது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

**3.2.9** ள்ளூர் பல்கலைக்கழகங்களின் உதவியுடன் தொழில் துறையில் பொருத்தமான ஆராய்ச்சி தலைப்புகளின் கீழ் ஆராய்ச்சி ஆய்வுகளை நடத்துதல்.

## 3.3 இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்

**3.3.1** வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்து, வெளிநாட்டில் தொழில் புரிந்து இலங்கைக்குத் திரும்பிய புலம்பெயர் வேலையாளர்களை மீள் சமூகமயமாக்கலுக்கு ஆதரவளிப்பதற்காக பிரதேச செயலக மட்டத்தில் " நாட்டுக்குத் திரும்புகின்ற புலம்பெயர் வேலையாளர் ஆதரவுக் குழுக்களை" தாபித்து, அமுல்படுத்துதல்.

**3.3.2** புலம்பெயர்வுக்கான சருவதேச அமைப்பின் நிதி உதவியுடன் புலம்பெயர் சமூகத்திற்கு இலகுவாக தகவல்களை வழங்குவதற்காக சப்பிரகமுவ மற்றும் தென் மாகாண குடிவரவு வள மத்திய நிலைய வளாகத்தில் உகந்த வசதிகளுடன் இரண்டு தகவல் நிலையங்களை நிறுவுதல்.

**3.3.3** வெளிநாடுகளில் இருந்து நாடு திரும்பிய இலங்கையர்களை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்கு ஊக்குவிப்பதற்காக புலம்பெயர்வுக்கான சருவதேச அமைப்பின் (IOM), நிதி உதவியுடன் தெற்கு மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் இரண்டு நடமாடும் சேவை நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல்,

**3.3.4** இணையத்தளம் ஊடாக விசேட புலன்விசாரணைப் பிரிவுக்கு முறைப்பாடுகளை சமர்ப்பிப்பதற்கும் இற்றைப்படுத்துவதற்கும் வசதிகளை வழங்குதல்.

**3.3.5** வேலைவாய்ப்பு முகவரகங்களுக்கான உரிமங்களை இணையத்தளம் ஊடாகப் புதுப்பித்தல் மற்றும் அத்தகைய தகவல்களைப் இற்றைப்படுத்துதல்.

**3.3.6** வெளிநாட்டு தொழில் வழங்குநர்கள் அனுப்பும் பணத்தின் அடிப்படையில் பல்நோக்கு சலுகைக் கடன் திட்டத்தை தாபித்தல்.

**3.3.7** பணியகத்தில் பதிவுசெய்து புலம்பெயர்ந்த வேலையாளர்களின் வீட்டுத் தேவைகளை நிறைவு செய்வதற்காக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையுடன் இணைந்து வீடமைப்புத் திட்டமொன்றை உருவாக்குதல்.

**3.3.8** வீட்டுத் துறை வேலைவாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்துள்ள புலம்பெயர் வேலையாளர்களுக்கு உலர் உணவு அடங்கிய ரூபா.10,000.00 பெறுமதியான வவுச்சர்களை வழங்குதல்.

## 3.4 மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம்

**3.4.1** வேலை தேடுபவர்கள் மற்றும் வேலை வழங்குநர்களின் இணையவழிப் பதிவு.

**3.4.2** முறைசாரா துறை தொழில்களை இனங்கண்டு ஒழுங்கமைத்து அவற்றை முறையான தொழில்களாக தாபிப்பதற்கான "உழைப்பின் கண்ணியம்" நிகழ்ச்சித்திட்டத்திற்கு பங்குதாரர் நிறுவனமாக பங்களிப்புச் செய்தல்.

**3.4.3** திணைக்களத்தின் சேவைகளை இணையவழியில் வழங்குதல்.

**3.4.4** தரம் 6 முதல் பாடசாலை மாணவர்களுக்கான தொழில் களரிகளை அறிமுகப்படுத்துதல்.

**3.4.5** ஏனைய உற்றறிதல் பண்பாற்றல்சார்ந்த சோதனைகளின் தன்னியக்கம் (தொழிற்கல்வி வழிகாட்டல் குறிப்பு, பல் நுண்ணறிவுக் கோட்பாடு நீங்கலாக).

**3.4.6** 'யூடியூப்', 'எஃப்பி', 'ருவிட்டர்', 'லிங்க்ட்இன்', 'ரிக்ரொக்', 'வாட்ஸ்அப்', 'இன்ஸ்டாகிராம்' போன்ற சமூக ஊடக வலையமைப்புகளைப் பயன்படுத்தி பல்வேறு சமூக அடுக்குகளை நிவர்த்தி செய்தல்.

**3.4.7** தொழில் வழிகாட்டல் சேவைகளை வழங்குதல் மற்றும் வெற்றிகரமான தொழில் முயற்சியாளர்களின் வீடியோக்களை திணைக்கள 'யூடியூப்' அலைவரிசையில் பதிவேற்றுதல்.

**3.4.8** காகித செயற்றிறன் மிக்க அலுவலகமாக மாறுதல்.

## 3.5 தேசிய தொழில் கற்கைகள் நிறுவகம்

தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தின் பயிற்சிப் பிரிவு பின்வரும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் ஊடாக 2023 ஆம் ஆண்டில் 42,950,000.00 ரூபா வருமானத்தை ஈட்டுவத்தற்கு எதிர்பார்க்கின்றது.

- டிப்புளோமா கற்கைநெறிகள்
- வெளிப்புற பயிற்சிகள்
- விசேட பயிற்சி செயலமர்வுகள்
- ஒரு நாள், இரண்டு நாள், மூன்று நாள் நிகழ்ச்சித்திட்டங்கள்
- நிறுவனங்களின் வேண்டுகோளுக்கமைவான நிகழ்ச்சித்திட்டங்கள்
- சீரிய வேலைத் திட்டம்
- ஆலோசனை சேவைகளை வழங்குதல்
- தனிநபருக்கான சான்றிதழ் திட்டம்

மேலே எதிர்பார்க்கப்பட்டுள்ள வருவாயை உருவாக்குவதற்கு பின்வரும் புதிய உத்திகளை செயற்படுத்தப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

I. வெளி முகவரக நிறுவனங்களுடன் புதிய உறவுகளை விருத்திசெய்தல்

II. ஆய்வொன்றினூடாக இலக்கை மேலும் கண்டறிதல்

III. வகுப்பறை நிகழ்ச்சித்திட்டங்களின் தரத்தை செம்மைப்படுத்துதல்

IV. புதிய நிகழ்ச்சித்திட்டங்களை அறிமுகப்படுத்துதல்

V. தேசிய தொழில்கல்வி தகைமை (NVQ) மட்டம் V இன் கீழ் தொழில் சட்டம் மற்றும் தொழிற்றுறை உறவுகள் பற்றிய டிப்புளோமா கற்கைநெறியை ஆரம்பித்தல்

VI. விசேட பயிற்சி செயலமர்வுகளை நடத்துவதற்கான பின்னணியைத் தயாரித்தல்

VII. ஏனைய துறைகளில் பயிற்சி கற்கைநெறிகளை நடத்துதல்.

VIII. இணையவழி நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்

IX. சந்தைப்படுத்தல் உத்திகளை ஊக்குவித்தல்

## 3.6 தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம்

**3.6.1** சுராடோ பல்கலைக்கழகத்தினால் நடத்தப்பட்ட பராமரிப்பு வழங்குனர் கற்கைநெறி, தொழில்சார் காப்பு மற்றும் பாதுகாப்பு (OSCE) நோக்கத்தை இலக்காகக் கொள்வதுடன், தற்போதைய அந்நிய செலாவணி நெருக்கடியின் நோக்கங்களுக்காக வெளிநாடுகளுக்குச் செல்லும் பராமரிப்பாளர்கள் தொடர்பாக நிறுவனத்தால் செயல்படுத்தப்படுகின்றது. இது நாட்டிற்கு அந்நிய செலாவணியை கொண்டு வருவதற்கு பங்களிக்கும்.

**3.6.2** தென்கொரியாவிலுள்ள 'சாங்சிங்' பல்கலைக்கழகத்தில் இலங்கை மாணவர்கள் பாதுகாப்பு பொறியியலில் பட்டம் பெறுவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கான தேசிய பணிஇலக்கு பல்கலைக்கழகத்துடன் உடன்படிக்கைகளை கைச்சாதிட்டுக் கொண்டதன் மூலம் நிறை வேற்றப்பட்டுள்ளது.
அதன் முதற்கட்டமாக 25 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களை தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான நிறுவனத்தின் தேசிய டிப்புளோமாவை கற்பதற்கு ஏதுவாக இளங்கலை பாடநெறிக்கு வழிநடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இது இலங்கை மாணவர்களுக்கு E – 7 பிரிவின் கீழ் தொழில்சார் தகைமைகளைப் பெறுவதற்கும், 50% மட்டத்துடன் பட்டப்படிப்பு பாடநெறியை நிறைவு செய்வதற்கும் வாய்ப்பொன்றை வழங்கும். இதன்படி, தென் கொரியாவில் இலங்கை மாணவர்கள் மற்றும் தொழில் வாய்ப்புக்களை எளிதாக்குவதன் மூலம் இலங்கை அந்நிய செலாவணியை ஈட்ட முடியும்.

**3.6.3** வேலைத்தலங்களில் விபத்துக்களைத் தடுப்பதற்கும், பணியாளர்களுக்கு பாதுகாப்பான பணிச் சூழலை உருவாக்குவதற்கும் சுற்றுச்சூழல் அளவீட்டு ஆய்வு மற்றும் இடர் மதிப்பீட்டுத் நிகழ்ச்சித்திட்டம் ஆண்டு முழுவதும் மேற்கொள்ளப்படுகின்றது. அடுத்த நான்கு மாதங்களில், 60 சுற்றுச்சூழல் ஆய்வுகள் மற்றும் நான்கு இடர் மதிப்பீட்டு திட்டங்கள் நடத்தப்பட உள்ளன. இதற்குமேலதிகமாக, தொழில் துறையின் தேவைகளுக்கு ஏற்ப உள்ளகப் பயிற்சியும் மேற்கொள்ளப்படுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்கான சான்றிதழும் வழங்கப்படும். இது தொழிற்சாலைகள் சர்வதேச சந்தையில் அங்கீகாரத்தைப் பெறுவதற்கு உதவுகின்றது. இதனால், சர்வதேச அங்கீகாரம் மூலம் வெளிநாட்டு கொள்வனவாளர்களிடமிருந்து கட்டளைகளைப் பெறுவதற்கான வாய்ப்பு காணப்படும்.

**3.6.4** யு.எஸ்.எய்ட்டுடன் (USAID), இணைந்து, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான ரிசோர்ட்டுகள் மற்றும் ஹோட்டல் வளாகங்களின் பாதுகாப்பை அதிகரிப்பதற்காக தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்துடன் இணைந்து ஈகோ ட்ரெய்ல் (ECO Trail) என்ற யூலிட் (YOULIED) திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இதன் மூலம் ஊவா மாகாணத்தில் அமைந்துள்ள 150 இற்கும் மேற்பட்ட சுற்றுலா விடுதிகள் மற்றும் விடுதிகள் ஆய்வுக்கு உட்படுத்தப்படவுள்ளன. 2023 ஆம் ஆண்டு இறுதிக்குள், நிறுவனங்கள் கண்காணிக்கப்பட்டு, தரச் சான்றிதழ்கள் வழங்கப்படுதல் வேண்டும், மேலும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பை மையமாகக் கொண்டு ரிசோர்ட்டுகள் மற்றும் ஹோட்டல்களின் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பை

உருவாக்குவதற்குத் தேவையான வகையில் நிறுவனங்களுக்குத் தகவல் தெரிவிக்கவும் சான்றளிக்கவும் இந்த திட்டம் மேற்கொள்ளப்படும்.

**3.6.5** தேசிய தொழில்சார் பாதுகாப்பு வாரத்தைக் கொண்டாடுவதன் அடிப்படையில், தேசிய தொழில்சார் பாதுகாப்பு வாரம், தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார மாநாடு ஆகியவற்றை 2023 நவம்பர் இரண்டாவது வாரத்தில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

**3.6.6** தேசிய பாதுகாப்பு விருதுகள் 2023 , பணியாளர்களின் தொழில் பாதுகாப்பிற்காக தங்களை அர்ப்பணித்துள்ள வணிகங்கள் மற்றும் நிறுவனங்களைப் பாராட்டும் நோக்கத்துடன் 2023 நவம்பர் மாத நடுப்பகுதியில் நடத்துவதற்கு திட்டமிடப்படுகின்றது.

**3.6.7** இரண்டு தேசிய தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதார கற்கைநெறிகள் மற்றும் இரண்டு தேசிய தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதார டிப்ளோமா கற்கைநெறிகள் நிறைவேற்று தர அலுவலர்களுக்காக ஆரம்பிக்கப்படவுள்ளன.

## 3.7 வேலையாளர் நட்டஈடு ஆணையாளர் அலுவலகம்

1934 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க வேலையாளர் நட்டஈடு கட்டளைச் சட்டம் மற்றும் 1950 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க கைத்தொழில் பிணக்குகள் சட்டம் ஆகியவற்றுக்காக திருத்தம், வேலைத் தளத்தில் விபத்துக்களுக்கான நட்டஈடு வழங்குவது தொடர்பான பணிகளை விரைவுபடுத்துவதற்காக வேலையாளர் நட்டஈடு ஆணையாளரும், தொழில் நியாயாதிக்கசபையும் ஒருமித்த நியாயாதிக்கத்தைக் கொண்டிருப்பதற்கு வழிவகுத்திருந்தது.

## 3.8 தேசிய உற்பத்தித்திறன் செயலகம்

**3.8.1 ஸ்மார்ட் தொழில்முயற்சியாளர் திட்டம்**

2023 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த வேலைத்திட்டம் அனைத்து 25 மாவட்டங்களுக்கும் தேவையான விழிப்புணர்வு பிரதேச செயலக மட்டத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இந்த விசேட நிகழ்ச்சித்திட்டம் 2024 ஆம் ஆண்டிலும் தொடரும் என்பதுடன், தெரிவுசெய்யப்பட்ட தொழில்முயற்சியாளர் வலுவளிக்கப்படுவார்கள்.

**3.8.2** அரச துறைக்கான விசேடத்துவமிக்க செயன்முறை செம்மைப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம்

இந்த நிகழ்ச்சித்திட்டம், 2023 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், 2024 ஆம் ஆண்டில் ஒரு பின்தொடர்தல் பொறிமுறையுடன் அரச துறை நிறுவனங்களில் செயன்முறை மேம்பாடுகளுக்கு வழிவகுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கி அரச துறை அலுவலர்களுக்கும் விசேட நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்படும்.

**3.8.3** ஊடகம் மற்றும் விளம்பர நிகழ்ச்சிகள்

இதன் கீழ், இணையம் மூலம் சமூக விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இணையவழி கருத்தரங்கு தொடர்களை செயற்படுத்துதல், ஊக்குவிப்பு நிகழ்ச்சித்துட்டங்கள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மூலம் பிரச்சாரம் செய்தல் போன்ற அத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**3.8.4** "சுபிலிசார நிவசக்" சமூக உற்பத்தித்திறன் நிகழ்ச்சித்திட்டம்.

பிரதேச செயலகங்களில் கவனம் செலுத்துவதன் மூலமும், அந்தப் பிரிவுகளிலுள்ள சமூகங்களுக்கு தேவையான விழிப்புணர்வை வழங்குவதன் மூலமும், உற்பத்தித்திறன் எண்ணக்கருக்கள், கருவிகள் மற்றும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அவர்களை வலுவூட்டுவதற்கு தேவையான சூழல் 2024 ஆம் ஆண்டில் உருவாக்கப்படும்.

**3.8.5** உற்பத்தித்திறன் எண்ணக்கருக்கள் மற்றும் கருவிகள் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

பல்வேறு பயிற்சித் திட்டங்களை நடத்துவதற்கு நாட்டிலுள்ள சபைகள் அல்லது நிறுவனங்களிடமிருந்து பல்வேறு கோரிக்கைகள் பெறப்பட்டு வருகின்றன, இந்த கோரிக்கைகள் மற்றும் பிற முன்மொழிவுகளை கருத்தில் கொண்டு, 2024 ஆம் ஆண்டில் பல்வேறு துறைகளை உள்ளடக்கிய வருவாய் ஈட்டாத பயிற்சி திட்டங்களை செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

**3.8.6** ஆசிய உற்பத்தித்திறன் தாபனத்துடன் இணைந்து பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல்.

ஆசிய உற்பத்தித்திறன் நிறுவனத்தினால் பல்வேறு செயலமர்வுகள், மாநாடுகள், தொழிநுட்ப நிபுணர் சேவை நிகழ்ச்சித்திட்டங்கள், திறன் வளர்ப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் போன்றவை நடத்தப்படுவதுடன், தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தின் அதிகபட்ச பங்களிப்புடன் இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும். 2023 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட பல்வேறு திட்டங்களின் தொடர்ச்சியான பணிகள் 2024 ஆம் ஆண்டில் இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

**3.8.7** தேசிய உற்பத்தித்திறன் விருதுகள் போட்டி

இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் இந்த போட்டியில் 2024 ஆம் ஆண்டுக்கான தேசிய உற்பத்தித்திறன் விருதுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்பட உள்ளன. அரசு, கல்வி மற்றும் சேவைகள் மற்றும் உற்பத்தித் துறைகளைச் சேர்ந்த நிறுவனங்கள் இதற்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## 3.9 சிரம வாசனா நிதியம்

**3.9.1** நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியை கருத்திற்கொண்டு, வேலையாளர்களின் நன்மைக்காக நிதியத்தினால் வழங்கப்படும் வேலைத்திட்டங்களை விரிவுபடுத்தும் நோக்கத்துடன் மூலோபாய திட்டத்திற்கு அமைவாக வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**3.9.2** 2024 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் இணையவழி லொத்தர் முகவர் நிலையமொன்றை தாபிப்பதற்கும், இரண்டாவது காலாண்டில் சர்வதேச லொத்தரையும் மற்றும் குறுஞ்செய்தி லொத்தரையும் அறிமுகப்படுத்துவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.



**புகைப்படம் 3.1 – மாண்புமிகு அமைச்சர் மற்றும் ஜப்பானிய பிரதிநிதியுடனான சந்திப்பு**

## 3.10 இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனம்

எதிர்காலத்தில் வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ள தொழில் கட்டளை பின்வருமாறு.

| நாடு | வேலையின் வகை | தொழில் கட்டளை எண்ணிக்கை |
|---|---|---|
| சைப்பிரஸ் | நேரடி ஆட்சேர்ப்பு | 50 |
| ரோமானியா | தொழிலாளி | 19 |
| | பாரம்தூக்கி இயக்குநர் | 04 |
| | டம்ப் டிரக் | 02 |
| | கனரக ஓட்டுநர் | 01 |
| | மோட்டார் மெக்கானிக் | 01 |
| | கனரக வாகன மெக்கானிக் | 02 |
| | டம்ப் டிரக் டிரைவர் | 01 |
| | பக்கோ லொடர் (Backhoe Loader) | 02 |
| | வெல்டர் | 05 |
| | குதிரை வீரர் | 02 |
| | பேஸ்ட்ரி தயாரிப்பாளர் | 02 |
| | பூட்டுத் தயாரிப்பவர் | 07 |
| | ஓட்டமோட்ரீவ் எலக்ட்ரிக்கல் இண்டஸ்ட்ரியல் | 04 |
| | ஓட்டோமொபைல் டிங்கரிங் | 01 |
| | ஓட்டோமொபைல் காற்றுச்சீராக்கி தொழில்நுட்ப வல்லுநர்கள் | 01 |
| | ரெராசோ (Terrazzo) | 19 |
| | ஆட்டோமொபைல் மெக்கானிக் | 02 |
| | முச்சக்கர வண்டி வர்ணம் தீட்டுபவர் | 01 |
| | லொறி சாரதி | 03 |
| | சமையல் செய்பவர் | 07 |
| | பீட்சா தயாரிப்பாளர் | 02 |
| | புல்டோசர் மெக்கானிக் | 03 |
| | பால் பொருட்கள் | 03 |
| யப்பான் | பொறியியலாளர் | 05 |
| | பராமரிப்பு வழங்குபவர் | 10 |
| சிங்கப்பூர் | பயிற்சியாளர்கள் | 500 |
| கொரியா | வெல்டர்கள் | 30 |
| மொல்டோவா | ஜூகி இயந்திரத்தை இயக்குபவர் | 50 |

7 මහල, “මෙහෙවර පියෙස”, නාරාහේන්පිට, කොළඹ 05
7 ஆவது தளம், “மெஹெவர பியச நாராஹேன்பிட்டி கொழும்பு 05
7th Floor, “Mehewara Piyesa”, Narahenpita, Colombo 05

011 2368164 / 011 2581991

011 2582938 / 011 2368165

slmol@slt.lk

www.labourmin.gov.lk

**කම්කරු හා විදේශ රැකියා අමාත්‍යාංශය**
**தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு**
MINISTRY OF LABOUR AND FOREIGN EMPLOYMENT